தென்கல்லகநாடு

தொன்மையும் சிறப்பும்



தமிழ்ப் பல்கலைக்கழகம்

முனைவர் பா. ஜெயக்குமார்

பஎ 7229

தென்கல்லகநாடு

தொன்மையும் சிறப்பும்



முனைவர் **பா.ஜெயக்குமார்**

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ISBN NO : 978-81-7090-460-1

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 417

திருவள்ளுவராண்டு	:	2047, துன்முகி வருடம் - ஆவணி, செப்டம்பர் 2016
நூலின் தலைப்பு	:	தென்கல்லகநாடு - தொன்மையும் சிறப்பும்
ஆசிரியர்	:	முனைவர் பா.ஜெயக்குமார்
மொழி	:	தமிழ்
பொருள்	:	வரலாறு , கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்
பதிப்பு	:	முதற்பதிப்பு
பக்கம்	:	215
தாள்	:	டி.என்.பி.எல். மேப்லித்தோ 11.6 கிலோ
அளவு	:	கிரவுன் 1/4
எழுத்து	:	12 புள்ளி
நூற்கட்டுமானம்	:	சாதாக்கட்டு
விலை	:	ரூ. **600.00**
படிகள்	:	500
அச்சு	:	ஓம்சக்தி ஆப்செட் பிரிண்டர்ஸ், தஞ்சாவூர்

பேரா.முனைவர் **க.பாஸ்கரன்**
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 010

அணிந்துரை

தமிழ்நாட்டின் பெருமைகளையும் தொன்மைச் சிறப்புகளையும் எடுத்துக் ...ும் நூல்கள் பல வெளிவந்துள்ளன. அவற்றில் தமிழ்ப் பல்கலைக்கழகக் ...வெட்டியல் மற்றும் தொல்லியல் துறையின் பல நூல்கள் பொதுமக்களுக்குப் ...ன்படும் வகையில் எமது பல்கலைக்கழக வெளியீடுகளாகப் பெருமைசேர்த்துள்ளன. ...வகையில் இந்நூலும் ஒன்று.

பாண்டிய நாட்டின் வருவாய்ப் பிரிவுகளில் ஒன்றான 'தென்கல்லக நாடு' ...னும் நிலப்பரப்பை வரையறை செய்து அதன் ஊடாக அப்பகுதியின் ...ன்மையையும் சிறப்பையும் இந்நூல் வெளிக்கொணர்ந்துள்ளது. கள ஆய்வை ...ப்படையாகக் கொண்டு உருவான இந்நூலில் கற்காலம் தொடங்கி தற்காலச் சமூகம் ...ர தக்க சான்றுகளுடன் மிக நுட்பமாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. பல புதிய ...வெட்டுகள் மற்றும் தொல்லியல் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டு இந்நூலின் ...லாக வெளிக்கொணரப்பட்டுள்ளமை சிறப்புக்குரியது. தரமான ஒளிப்படங்கள் ...ுக்கு அணி சேர்க்கின்றன. இப்படைப்பு தமிழக வரலாற்றிற்குக் குறிப்பாக பாண்டிய ...டு வரலாற்றுக்கு மேலும் சிறப்பு சேர்ப்பதாக அமைந்துள்ளது.

தமிழ்ச் சமூகப் பண்பாட்டு வரலாற்றாய்வாளர்களுக்கு இந்நூல் ஒரு ...டையாகும். மேலும், இந்நூல் புதிய சமூகப் பார்வைக்கு வித்திடும் என நம்புகிறேன். ...போன்று மேலும் பல அரிய நூல்களை தமிழ் உலகிற்குப் படைக்கவேண்டும் என ...ாசிரியரை வாழ்த்துகிறேன். நூலாசிரியரின் முந்தைய நூல்களைப் போன்று ...நூலும் ஆய்வாளர்கள் மற்றும் அறிஞர் பெருமக்களிடையே பாராட்டுகளைப் பெறும். ...ாசிரியர் முனைவர் பா. ஜெயக்குமார் அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

...சாவூர்
...08.2016

(க.பாஸ்கரன்)

நன்றியுரை

'தென்கல்லக நாட்டின் தொன்மையும் சிறப்பும்' என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ள நல்கை வழங்கிய **மாண்புமிகு தமிழக அரசின் முதலமைச்சர் அம்மா** அவர்களுக்கு முதலில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இத்திட்ட ஆய்வு அறிக்கையினை நூலாக்கம் செய்திட ஆவன செய்த **மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் க. பாஸ்கரன்** அவர்களுக்கு என் நன்றி உரித்ததாகும்

கள ஆய்வில் கல்வெட்டுகளை மைப்படி எடுப்பதற்கும் பிற பணிகளுக்கும் துணையாக இருந்த எமது துறையின் கல்வெட்டு மைப்படி அலுவலர் **திரு.மா.செல்வராஜ்,** முனைவர் பட்ட மாணவர் **திரு. இரா.சந்தனம்,** திருக்கோயில் திட்டத் தகைமையாளர் **முனைவர் ஆ. இராசா** மற்றும் உதவியாளர் **திருமதி த.தனலெட்சுமி** ஆகியோருக்கு நன்றி.

களஆய்வின் போது அனைத்து வகையிலும் பேருதவியாக இருந்த மதுரை மாவட்டம் வாடிப்பட்டி, சோழவந்தான், திருமங்கலம் மற்றும் உசிலம்பட்டி பகுதிகளின் மக்களுக்கும், அனைத்து கோயில்களின் அலுவலர்களுக்கும் எனது நன்றி உரித்ததாகும். கணினி தட்டச்சு செய்தளித்த **திரு. கோ.நடராஜன்,** நிலப்படங்கள் உருவாக்கத்தில் உதவிய **திரு. நா.இராமகிருட்டிணன்** மற்றும் எனது நண்பர் உசிலம்பட்டி அன்பு ஒளிப்படக்கூடத்தின் உரிமையாளர் **திரு.பி.மதிவாணன்** ஆகியோருக்கு நன்றி.

தமிழ்ப் பல்கலைக்கழக மற்றும் சென்னைப் பல்கலைக்கழக நூலகங்களுக்கும் இந்தியத் தொல்லியல் துறை மற்றும் தமிழக அரசு தொல்லியல் துறையினருக்கும் எனது நன்றி.

இந்நூலிற்கு மெய்ப்புத் திருத்தம் செய்து உதவிய **முனைவர் அர.கமலதியாகராசன்** அவர்களுக்கு நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் அச்சாக்கம் செய்து அளித்த **ஓம் சக்தி ஆப்செட் பிரிண்டர்ஸ்** நிறுவனத்திற்கு நன்றி.

-பா.ஜெயக்குமார்

சொற்குறுக்கங்கள்

இ	:	இணைப்பு
இகஆ	:	இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை
எ.	:	எண்
எஇ	:	எபிகிராபியா இண்டிகா
கிமீ	:	கிலோமீட்டர்
தகசொ	:	தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி
தமொஅ	:	தமிழ் மொழி அகராதி
தெஇக	:	தென் இந்தியக் கல்வெட்டுகள்
தொ.	:	தொகுதி
நில	:	நிலப்படம்
நிழ	:	நிழற்படம்
நூ.	:	நூற்றாண்டு
ப.	:	பக்கம்
பஆ	:	பதிப்பு ஆசிரியர்
பஎ	:	படம் எண்
பக்.	:	பக்கங்கள்
பாசெப	:	பாண்டியர் செப்பேடுகள் பத்து
புகஎ	:	புதிய கல்வெட்டு எண்
பொ.ஆ.	:	பொது ஆண்டு (=கிபி)
பொ.ஆ.மு	:	பொது ஆண்டுக்கு முன் (=கிமு)
மீ	:	மீட்டர்
வ.எண்	:	வரிசை எண்
AI	:	Ancient India
ARE	:	Annual Report on Indian Epigraphy
IAR	:	Indian Archaeology-A Review
OUP	:	Oxford University Press
p.	:	page
pp.	:	pages
TPT	:	The Pandyan Townships

பொருளடக்கம்

இயல்	பக்கம்
அணிந்துரை	I
நன்றியுரை	II
சொற்குறுக்கங்கள்	III
1. முன்னுரை	1
2. தென்கல்லகநாடு	6
3. தொன்மைச் சிறப்பு	34
4. முடிவுரை	88
இணைப்புகள்	
1. நிலப்படங்கள்	93
2. தொல்லியல் இடங்களின் பட்டியல்	97
3. தொன்மையான கோயில்களின் பட்டியல்	102
4. கல்வெட்டுகளின் மூலப்பாடம்	103
5. நிழற்படங்கள்	125
6. துணை நூற்பட்டியல்	207

இயல் - 1

முன்னுரை

'தமிழ்க்கூடல்' (பாசெப, ப. 191) மற்றும் 'வண்டமிழ்க்கூடல்'[1] (இகஆ, 1962-63 எ.498) எனக் கல்வெட்டுகள் சுட்டும் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிப் பகுதியாக விளங்கிய பாண்டிய நாட்டின் வரலாறு குறித்துப் பல்வேறு ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இவற்றுள் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியின் **The Pandyan Kingdom** *(1929)*, டி.தேவகுஞ்சரியின் **Madurai Through the Ages** *(1952)*, கே.வி.இராமனின் **பாண்டியர் வரலாறு** *(1977)* மற்றும் **Some aspects of Pandyan History in the light of recent discoveries** *(1973)* போன்றவை பாண்டிய நாடு குறித்த பரந்துபட்ட வரலாற்று ஆய்வுகளாகும். கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் கிராமம் அல்லது வட்டாரம் சார்ந்த ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. வெ.வேதாசலம் எழுதிய **எண்பெருங்குன்றம்** *(2002)*, மா.சந்திரமூர்த்தி மற்றும் வெ.வேதாசலம் இணைந்து வெளியிட்டுள்ள **பராக்கிரம பாண்டியபுரம்** *(2002)*, இந்நூலாசிரியரின்* **பாண்டி நாட்டின் ஆனையூர்** *(2008)*, சொ.சாந்தலிங்கம் வெளியிட்டுள்ள **மதுரையில் சமணம்** *(2013)* போன்ற நூல்கள் பாண்டிய நாட்டின் வரலாற்றாய்வில் தனிப்பட்ட சிறப்புக் கூறுகளை அதாவது ஓர் இடத்தின் அல்லது ஒரு பொருண்மையின் சிறப்புகளை மட்டும் பேசக்கூடிய ஆய்வுகளாகும். எனினும், இத்தகைய ஆய்வுகளே வரலாற்று மீட்டுருவாக்கத்திற்கு முதன்மையான கருவி நூல்களாகும்.

வட்டாரம் தொடர்பான ஆய்வுகள் ஓரளவு வெளிவந்துள்ளபோதிலும் குறிப்பாக அவ்வட்டாரங்களின் வரலாறு தொடர்பான ஐயப்பாடுகளையும் புதிர்களையும் போக்கும் வண்ணம் ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்பட

---

[1] வண்டமிழ் என்பதற்குப் பண்பட்ட தமிழ் அல்லது வளமையான தமிழ் அல்லது தெளிதமிழ் (தமொஅ, பக். 1225-1226) எனப் பொருள் கொள்ளலாம். கூடல் என்பது மதுரையின் தொன்மைப் பெயர்.

* நூலாசிரியர் = ஆய்வாளர்

வில்லை. பாண்டிய நாட்டுக் கிராமங்களில் காணப்படும் பல்வேறு பண்பாட்டுக் கூறுகள் இதுவரை திருப்தியளிக்கக்கூடிய வகையில் வெளிக்கொணரப்படவில்லை எனலாம். குறிப்பாக வட்டாரங்கள் தொடர்பான ஆய்வுகள் இன்னும் அதிகளவில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழக வரலாற்றாய்வில் அரசியல் சார்ந்த நிலவியல் பிரிவுகளை அதாவது நிர்வாகப் பிரிவுகளான மண்டலம், வளநாடு, நாடு, கூற்றம் போன்றவற்றை மையமாகக் கொண்ட ஆய்வுகளின் மீது ஆய்வாளர்களிடையே நாட்டமின்மையே காணப்படுகிறது. இதற்கு, எல்லைகளை வரையறை செய்வதற்கு மிகுதியான சான்றுகளைச் சேகரிக்க வேண்டும் என்பதும் இதற்காகக் கள ஆய்வுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதும் காரணமாக இருக்கலாம். ஆனால், இவ்வாறான ஆய்வுகளின் மூலமே ஒரு நிலவியல் பிரிவின் நிலப்பரப்புச் சார்ந்த இதுவரை அறியப்படாத செய்திகளை மிகுதியாக வெளிக்கொணர முடியும். பாண்டி நாட்டுப் பகுதியில் பாகனூர்க் கூற்றம், முத்தூற்றுக் கூற்றம், ஒல்லையூர்க் கூற்றம் மற்றும் மிழலைக்கூற்றம் போன்றவை சங்க காலம் முதல் குறிப்பிடத்தக்க நிர்வாகப் பிரிவுகளாக இருந்துள்ளன. எனினும், இந்நிர்வாகப் பிரிவுகளின் நிலப்பரப்பை மையமாகக் கொண்டு முழுமையான ஆய்வுகள் இதுவரை வெளிக்கொணரப்படவில்லை. அரசியல் நிர்வாகப் பிரிவுகள் தொடர்பாக கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி போன்றோர் தங்களின் ஆய்வுகளில் ஏற்கனவே சுட்டியிருந்தாலும், சோழ மண்டலத்தின் வளநாடு, நாடு, கூற்றம் தொடர்பான கட்டமைப்புச் சிறப்புகளை முதன்முதலில் எ.சுப்பராயலு 'Political Geography of Chola Country' *(1973)* வாயிலாக வெளிக் கொணர்ந்தார். இதன் பிறகே இதுகுறித்த தெளிவான பார்வை ஆய்வாளர்களுக்குக் கிடைத்தது எனலாம். இதனை அடியொற்றி ஆர்.திருமலை *(2003)* பாண்டி நாட்டுக் கல்வெட்டுக்களின் அடிப்படையில் வெளியிட்டுள்ள 'The Pandyan Townships' என்னும் இரு தொகுதிகள் குறிப்பிடத்தக்கவை. பாண்டி நாட்டிலிருந்த அனைத்து நாடுகளையும் பட்டியலிட்டுள்ள இந்நூல் பாண்டி நாடு தொடர்பான ஆய்வாளர்களுக்கு ஓர் அரிச்சுவடி எனில் மிகையன்று.

நாடு என்னும் வருவாய்ப் பிரிவை மட்டும் மையமாகக் கொண்ட ஆய்வு, பாண்டி நாட்டுப் பகுதியிலிருந்து இதுவரை வெளிவரவில்லை என்றே குறிப்பிடலாம். அந்தவகையில் பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையை ஒட்டிய பகுதியான 'தென்கல்லக நாடு' இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.[2] இந்நாட்டுப் பகுதியில் ஒரு முழுமையான கள ஆய்வு இதுவரை மேற்கொள்ளப் படவில்லை. இப்பகுதியில் முதன்முதலில் களஆய்வு மேற்கொண்ட கே.வி. இராமன், திடியன் மலையடிவாரம், நுண்கற்காலக் கருவிகளை உருவாக்கிய தொழிற்கூடமாக (Factory site) விளங்கியிருக்கிறது என்பதை வெளிக் கொணர்ந்தார் (IAR, 1960-61, pp.18-19). மேலும், இதனருகில் உள்ள அம்பட்டயம்பட்டி என்ற இடத்தில் வண்ணப் பூச்சுடைய கருப்பு-சிவப்புப் பானைச் சில்லு கண்டுபிடிக்கப்பட்டதையும் பதிவு செய்துள்ளார். வரலாற்றின் இடைக்காலத்தில் தென் கல்லக நாட்டின் திருக்குறுமுள்ளூர் (ஆனையூர்) என்ற இடத்தில் படைத் தலைவர்களின் கீழ் நிலைப்படைகள் (Standing Army) இருந்தன எனவும் இது பாண்டி நாட்டின் அரசியல் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்கது எனவும் மேற்சுட்டிய ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளமை (K.V.Raman, 1973, p. 18) இப்பகுதியின் அரசியல் சார்ந்த நடவடிக்கைகளின் சிறப்பை வெளிப் படுத்துவதாகக் கொள்ளலாம். இந்நாட்டுப் பகுதியில் ஆய்வாளர்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில கண்டுபிடிப்புகளை வெளிக் கொணர்ந்துள்ளனர். இப்பகுதியின் தொல்லியல் எச்சங்கள், பழந்தமிழ்க் கல்வெட்டுகள் மற்றும் இடைக்கால வரலாற்று எச்சங்கள் குறித்து வெவ்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு ஆய்வாளர்கள் தங்கள் களஆய்வின் வாயிலாக

---

[2] ஆய்வு ஊடான விவாதங்களின்போது சரியான செய்திகளை வெளிப்படுத்த, முந்தைய ஆய்வுகளில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகள் மற்றும் முடிவுகளை மறுக்க வேண்டியுள்ளது. அதை உரியவர்கள் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளவும். அதுபோல ஆய்வை மேலும் செம்மைப்படுத்த, பிற ஆய்வாளர்களின் நல்ல கருத்துகளையும், கூடுதல் செய்திகளையும் இந்நூலாசிரியர் கனிவுடன் எதிர்நோக்கியுள்ளார்.

வெளிப்படுத்தியுள்ளனர்.[3] இவ் ஆய்வில் ஏற்கனவே பிற ஆய்வாளர்களால் விரிவாக ஆராயப்பட்டுள்ள பழந்தமிழ் எழுத்துகள் தொடர்பான ஆய்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்பது இங்குப் பதிவு செய்யப்படுகிறது.

நோக்கம்

- தென் கல்லக நாட்டை அடையாளப்படுத்துவது.
- தென் கல்லக நாட்டின் எல்லையை வரையறை செய்வது.
- தென் கல்லக நாட்டின் தொன்மை எச்சங்களைக் கண்டுபிடிப்பது.
- தென் கல்லக நாட்டின் வரலாறு, தொல்லியல், கல்வெட்டியல், கலை மற்றும் பண்பாடு சார்ந்த சிறப்புகளை வெளிக் கொணர்வது.

சான்றுகள்

இந்த ஆய்வு, கள ஆய்வினை மையமாகக் கொண்டது. எனவே, கள ஆய்வில் சேகரிக்கப்பட்ட தரவுகளே முதன்மையான மூலச் சான்றுகளாகும். இதில் தொல்லியல், கல்வெட்டியல், கலை சார்ந்தவை மிகுதியாக அடங்கும். இவற்றோடு பிற ஆய்வாளர்களுக்குரிய தரவுகளும் தேவைக்கேற்பச் சான்றுகளாக உட்படுத்தப்பட்டுள்ளன. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை, தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள், ஆவணம், *Tamil Civilization* போன்ற வெளியீடுகளும் சான்றுகளில் முக்கியமானவையாகும்.

ஆய்வுமுறை

கல்வெட்டுகளின் அடிப்படையிலான முன்திட்டமிடலின்படி தமிழ் நாட்டின் மதுரை மாவட்டத்தில் (நில.இ1, நில, பள.1.1) உள்ள வட்டங்களில் (இ1,நில,பள 1.2) குறிப்பாக வாடிப்பட்டி, உசிலம்பட்டி மற்றும் திருமங்கலம் வட்டங்களில் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது (இ1,நில, பள. 1.3). தொல்பொருள் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுத் தொன்மைக் கூறுகளின்

---

[3] இதற்கென விரிவான அடிக்குறிப்பு இங்குத் தேவையில்லை என்பதால் கொடுக்கப்படவில்லை. பிற ஆய்வாளர்களின் தரவுகளைப் பயன்படுத்தும்போது அடிக்குறிப்பில் அவை பற்றிய விவரங்கள் கொடுக்கப்படும்.

அடிப்படையில் இடம்வாரியான பட்டியல்கள் (இ 2, 3) தயாரிக்கப்பட்டு அவற்றோடு கல்வெட்டுக் குறிப்புகளைக் கொண்டு தென்கல்லக நாட்டின் எல்லை, வரையறை (இ1,நில,பஎ 1.4) செய்யப்பட்டுள்ளது. முக்கியமான சில கல்வெட்டுகள் நிழற்படங்களாகக் கொடுக்கப்பட்டிருப்பினும் மூலப் பாடங்களும் பின்னிணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன (இ4). தொல்பொருள் தரவுகளில் ஆய்வாளரின் கள ஆய்வு சேகரிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அவற்றில் தெரிவு செய்யப்பட்டவை மட்டுமே நிழற்படங்களாகக் (இ5) கொடுக்கப் பட்டுள்ளன.[4]

இயல்கள்

இவ் ஆய்வேடு நான்கு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் இயல் முன்னுரையாகவும், இரண்டாம் இயல் தென்கல்லக நாடு பற்றிய விளக்கம் மற்றும் அதன் எல்லையின் பரவல் குறித்தும் அமைந்துள்ளன. மூன்றாம் இயல் தென்கல்லக நாட்டின் வரலாற்று, பண்பாட்டுச் சிறப்புகளைத் தொன்மைக்காலம் முதல் காலவாரியாகப் பல்வேறு காலக்கட்டங்களின் கட்டமைப்புகளில் விளக்குவதாகவும் அமைந்துள்ளது. இறுதி இயலான நான்காம் இயல் முடிவுரையாகப் பாண்டி நாட்டின் வரலாற்றில் தென்கல்லக நாடு பெற்றிருந்த முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

பின்னிணைப்பாக நிலப்படங்கள், தொல்லியல் சார்ந்த இடங்களின் பட்டியல், தொன்மையான கோயில்களின் பட்டியல், கல்வெட்டுகளின் மூலப் பாடங்கள், நிழற்படங்கள் மற்றும் துணைநூற்பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளன.

---

[4] பிற ஆய்வாளர்களுக்குரிய நிழற்படங்கள் எவையும் இவ்ஆய்வேட்டில் பயன்படுத்தப்-படவில்லை.

இயல் - 2

தென்கல்லக நாடு

பாண்டிநாட்டு அரசு நிர்வாகப் பிரிவுகளில் முத்தூற்றுக்கூற்றம், மிழலைக் கூற்றம், பாகனூர்க் கூற்றம் போன்றவை சங்ககாலந்தொட்டு இடைக்காலம் வரை இருந்து வந்தமையை இலக்கியம் மற்றும் கல்வெட்டுச் சான்றுகள் வாயிலாக அறியமுடிகிறது. இதுபோன்று 'நாடு' என்ற நிர்வாகப் பிரிவுகள் பலவும் இருந்துள்ளன. பாண்டி நாட்டின் பாகனூர்க் கூற்றத்திற்கு அருகில் இருந்த 'தென்கல்லக நாடு' என்னும் நாட்டுப் பிரிவு சங்ககாலம் தொட்டு இருந்ததா என்பதற்கு தெளிவான சான்றுகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

கல்லக நாடும் தென் கல்லக நாடும்

சங்க இலக்கியமான மதுரைக்காஞ்சி *(287-290)* 'கல்லகம்' என்ற இடத்தில் விளைவிக்கப்பட்ட பல்வேறு பண்டங்கள் குவிக்கப்பட்டிருந்ததையும், ஐங்குறுநூறு *(279:4)* தலைவியின் ஊர் 'கல்லகம்' என்பதையும் சுட்டுகின்றன. பதிற்றுப்பத்து *(9:4, 5)* "பகைவர் புகுதற்கு அரிய காவற்கோட்டையுடைய" கல்லகம் இருந்ததைத் தெரிவிக்கிறது. கல்லகம் என்பது மலையகம், மலைசார்ந்த பகுதி எனப் பொருள்படும் *(சாரங்கபாணி, 2013, ப.150)*. இக்கல்லகம் பாண்டி நாட்டுத் தென்காசிப் பகுதியில் இருந்த கல்லகநாடு என்ற பகுதியைக் குறிப்பதாக ஔவை சு.துரைசாமி *(2013, ப.171)* கருதுகிறார். ஆனால், இதற்காக மேற்படி ஆய்வாளர் காட்டும் சான்று இடைக்காலக் கல்வெட்டாகும். பாண்டி நாட்டுக் கல்வெட்டுகளை ஆய்வுசெய்த ஆர்.திருமலை (Tirumalai, 2003, pp.65-66) கல்லகநாடு என்பது இன்றைய தென்காசி மற்றும் சங்கரன்கோயில் பகுதியைக் கொண்டது என அடையாளப்படுத்துகிறார். இப்பகுதியில் கிடைக்கின்ற பாண்டியர் கல்வெட்டும் *(தெஇக14, எ. 136)* "இராசராசப் பாண்டிநாட்டு முடிகொண்ட சோழவளநாட்டுக் கல்லகநாடு" எனக் குறிப்பிடுவது மேற்சுட்டிய கருத்தினைத் தெளிவுபடுத்துகிறது. 'தென்கல்லகநாடு' பற்றிய காலத்தால்

முந்தைய குறிப்பு மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், ஆனையூர் ஐராவதேசுவரர் கருவறை நிலையின் இரு புறங்களிலும் காணப்படும் 'சோழன் தலைகொண்ட' என்ற சிறப்புப் பெயருடன் உள்ள வீரபாண்டியனின் 10ஆம் ஆட்சியாண்டுக் (பொ.ஆ.956) கல்வெட்டாகும். ஆக, இதிலிருந்து கல்லக நாடு மற்றும் தென்கல்லக நாட்டின் நிலப்பரப்பு வெவ்வேறு என்பது புலப்படுகிறது.

பிரான்மலையும் புரமலையும்

மேற்சுட்டிய தென்கல்லக நாடே 'பிரான்மலை' எனவும், 'புரமலைநாடு' எனவும் ஆய்வாளர்கள் மற்றும் சமூக அக்கறையாளர்கள் ஒரு பொதுவான மயக்கத்தில் உள்ளனர். காரணம், பாண்டி நாட்டின் தலைநகரான மதுரைக்கு மேற்கில் அமைந்திருந்த தென்கல்லக நாடு பொ.ஆ. 14-16 ஆம் நூற்றாண்டுகளில் புரமலைக் கல்லகநாடு மற்றும் பிரமலைப்பற்று என்னும் முன்னொட்டுடன் அழைக்கப்பட்டமையைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன (இ4, எ. 15 மற்றும் இ5, நிழ, பஎ 1, 2 விசயவேணுகோபால், 1996, பக். 68-70, மற்றும் இ5,நிழப.எ3, 3.1).

புரமலைநாடு என்பது இன்றைய திருப்பத்தூர் மற்றும் திருமயம் வட்டங்களை உள்ளடக்கியதாகக் குறிப்பாக இன்றைய பொன்னமராவதி பகுதியைக் கொண்டதாகும் (Tirumalai, 2003, pp.232-235). பிரான்மலை என்பது திருமலை நாட்டுப் பிரிவின்கீழ் இருந்த ஊர் (தெஇக 8, எ.441). அதாவது 'திருமலைநாட்டுத் திருக்கொடுங்குன்றம்' என்பதும் ஓர் பெரும் வணிகத்தலம் என்பதும் (தெஇக 8, எ.442) திருமலை நாடு இன்றைய திருப்பத்தூர்ப் பகுதியை உள்ளடக்கியதாக இருந்தது என்பதும் கல்வெட்டுகளின் வாயிலாக அறியப் படுகிறது.

கொங்கு நாட்டுப் பகுதியான கரூர் அருகிலுள்ள பட்டுகானாம்பட்டி என்ற இடத்தில் கிடைத்துள்ள முதலாம் இராஜராஜனின் 25ஆம் ஆட்சியாண்டுக் (பொ.ஆ.1009) கல்வெட்டு (தெஇக 26, எ.269) 'பெருந்தரத்துப் பஞ்சவன் பிரம்மாதிராயர் தகடூர் நாடு ஜீவிதமானா நிற்க புறமலைநாட்டு அரியூர்' எனக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டின்படி தகடூர் நாட்டின்கீழ் ஒரு புறமலை நாடு இருந்ததா என்ற ஐயமும் எழுகிறது. பொதுவாக ஓரிடத்தில் கீழத் (கிழக்கு) தெரு

என இருந்தால் மேலத் (மேற்கு) தெரு எனவும் தெற்குத்தெரு இருந்தால் வடக்குத்தெரு எனவும் இருக்கும். கல்லகநாடு மற்றும் தென்கல்லகநாடு எனக் குறிப்பிடும் கல்வெட்டுகள் வடகல்லகநாடு எனக் குறிப்பிடவில்லை என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.[1]

பெயர்க் காரணம்

தென்கல்லக நாட்டின் பெயரானது தெற்கு (தென்), வடக்கு (வட) என்ற பொதுமையில் வழங்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.[2] தென்கல்லகநாடு என்னும் பெயரில் உள்ள முன்னொட்டான 'தென்' என்பதற்கு 'தெற்கு' எனவும் பின்னொட்டான 'நாடு' என்பதற்கு நிர்வாகம் சார்ந்த நிலப் பிரிவு எனவும் பொதுவாகப் பொருள் கொள்ளலாம். ஆனால், இங்கு 'தென்' என்பது 'தென்னவர்' அதாவது பாண்டியர் என்ற பொருளில் அவர்களின் நிலப்பகுதியைக் குறிக்கிறது. நடுவில் உள்ள சொல்லான கல்லக (கல்லகம்) என்பதை கல் + அகம் = கல்லகம் எனக் கொண்டு மலைகளை அல்லது குன்றுகளை (கல்) மிகுதியாகக் கொண்ட ஓர் அகம் (வீடு) அல்லது நிலப்பரப்பு எனப் பொருள் கொள்ளலாம். இந்நிலப்பரப்பின் புவியியல் அமைப்பினை நோக்கினால் மேற்சுட்டிய பொருள்

---

[1] அகநானூறு குறிப்பிடும் 'கள்ளர் பெருமகன் தென்னன்' என்ற பாண்டியனால் திருவேங்கட மலையில் வசித்த கள்ளர் தென்னாட்டிற்கு அழைத்துவரப்பட்டனர் என்றும் தமிழகத்தின் தொண்டை மண்டலத்திலிருந்து நாகர்வழிவந்த பல்லவர்-சோழர் கலந்த மரபு 'கள்ளர்' சமூகமாகத் தெற்கு நோக்கிப் பரவி பின்னர் முக்குலமாகப் பாண்டிநாட்டுப் பகுதியிலும் நிலைபெற்றதாகவும் இச்சமூகம் மிகுந்துள்ள பகுதி 'கள்ளகம்' என வழங்கப்பட்டதாகவும் ந.மு.வேங்கடசாமி நாட்டார் (1923,31 மற்றும் 66) கருதுகிறார். இதற்கு எது மூலாதாரம் என்பது தெரியவில்லை. ஆனால், மேலே விளக்கப்பட்ட 'கல்லகம்' என்பது வேறாகும். ஒருவேளை இக்கல்லகம் என்பதை மனத்தில் நிறுத்திக் கருதியிருக்கலாம். தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி (ப. 161) தெரிவிக்கும் 'கள்ளர், கள்ளர்படுகலங்கள், கள்ளப்பற்று, கள்ளப்பால் போன்றவைக்கான விளக்கங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகக் காணப்படவில்லை. இதேபோல 'கள்ளழகர்' என்பதை எவ்வாறு எடுத்துக் கொள்வது?

[2] பாண்டி நாட்டில் தென்காசி போன்று வடகாசி என்று ஒன்றில்லை.

விளக்கம் தெளிவாகும் (இ5, நிழ, பள 4). சங்க இலக்கியங்களில் சுட்டப்படும் 'கல்லகம்' என்பதற்கும் மலையகம், மலைசார்ந்த பகுதி என ஆராய்ச்சியாளர்கள் பொருள் கொள்வதும் (சாரங்கபாணி, 2013, ப.150) மேற்சுட்டிய பெயர்க் காரணத்தை உறுதி செய்வதாக அமைகிறது. ஆக, அக்காலத்தில் மலைகள் மிகுந்த பகுதியாக இருப்பின் அப்பகுதியினை 'கல்லகம்' என அழைக்கும் வழக்கம் இருந்திருக்கிறது என்பது புலப்படுகிறது.

கல்லகமும் கள்ளரும்

பாண்டி நாட்டுப் பகுதியில் குறிப்பாகத் தென்கல்லக நாட்டில், இப்போது 'கள்ளர்' இனத்தவர் பெரும்பான்மையாக இருப்பது நோக்கத்தக்கது. ஆனால், இடைக்காலப் பாண்டிநாட்டுக் கல்வெட்டுகளில் பிராமணர், கைக்கோளர், இடையர், தட்டார், செட்டி, முதலி, குடி (உழுகுடிகள்) என பிற சமூகக் குழுக்கள் குறித்து தெளிவாகப் பேசப்படும்போது 'கள்ளர்' இனம் பற்றிப் பேசப்படவில்லை.[3] தென்கல்லத நாடு என்பது ஒரு கல்வெட்டில் 'கல்லநாடு' எனக் குறிப்பிடப்படுகிறது (ஜெயக்குமார், 2008, பக். 150-151). இது, பாண்டி நாட்டில் கள்ளர் பெரும்பான்மையாகக் காணப்படும் இன்றைய நிலப்பகுதியைச் சுட்டுவதாகவே கருதவேண்டியுள்ளது. காரணம், தென்கல்லகநாடு எனப் பெயர் சுட்டும் கல்வெட்டுகள் யாவும் இந்நிலப்பகுதியில் மட்டுமே கிடைக்கின்றன என்பதால் இக்கல்லக நாடு என்பதே பின்னர் மருவிக் கள்ளர் நாடாகி இருக்கிறது.

---

[3] சோழநாட்டின் இராஜராஜவளநாட்டுப் பொய்கைநாட்டுத் திருமழபாடி (இன்று திருமழபாடி அரியலூர் மாவட்டத்தில் உள்ளது) வைத்தியநாதர் கோயிலில் உள்ள மூன்றாம் இராஜராஜனின் 12ஆம் ஆட்சியாண்டுக் (பொ.ஆ. 1228) கல்வெட்டு (இகஆ 1920, எ.57) "இந்நாட்டு மணற்குடி நாட்டுப் புதூரான செய்துங்கநல்லூர் காணியுடைய கள்ளரில்" எனக் கள்ளர் இனம் பற்றிப் பேசுகிறது. நா.மு.வேங்கடசாமி நாட்டார் கருத்துப்படி கள்ளர் தமிழகத்தின் வடதிசையில் இருந்து தெற்கு நோக்கிப் பரவியிருந்தால் பாண்டி நாட்டுக் கள்ளர் பற்றி அக்காலக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படாதது ஏன்? பிற்காலச் சான்றுகளில் குறிப்பாகதிருமலை நாயக்கர் ஆவணங்களில் தேவர், கள்ளர் போன்ற பெயர்கள் காணப்படுவது இங்குச் சுட்டத்தக்காகும்.

மேலும், பிற்காலத்தில் பிரமலைக் கள்ளர் என அழைப்பதற்கும் வழிவகுத்தது எனலாம்.[4] நாயக்கர் கால ஆவணங்களில் குறிப்பாக 1750க்குப் பிறகு காணப்படும் ஆங்கிலேயர் ஆவணங்களில் இப்பகுதி மக்கள் 'ஆனையூர் கள்ளர்' என அழைக்கப்படுவதைக் காணமுடிவதால் (Baliga, 1960, P.434) கள்ளர் என்னும் பெயர் நாயக்கர் காலத்தில் இருந்து வழங்கப்பட்டிருக்க வேண்டும். மேலும், நாயக்கர் காலத்திலேயே இம்மக்கள் தங்கள் பெயரின் பின்னொட்டாக 'தேவர்' என்னும் பட்டத்தைச் சேர்த்துக் கொண்டுள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது. இக்காலத்தில் ஆரியபட்டி குமாரத்தேவன் என்பவர் காவல் பொறுப்பேற்றமையைப் பார்க்கமுடிகிறது. பொ.ஆ. 18-19ஆம் நூற்றாண்டுக் காலகட்டத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் பல திடியன் கைலாசநாதர் கோயிலில் காணப்படுகின்றன (சீதாராம் குருமூர்த்தி, 2008, எ.309 மற்றும் 310). இவற்றில் காணப்படும் பெயர்களோடு 'தேவர்' என்ற பின்னொட்டுக் காணப்படுவதையும் காட்டாகக் கொள்ளலாம்.

தென்கல்லக நாட்டின் ஆனையூருக்கும், நகரமான விக்கிரமங்கலத்துக்கும் இடையே கொடிக்குளம் அருகில் உள்ள ஜோதிமாணிக்கம் என்ற ஊரின் பிரமலைக் கள்ளர் சமூகம் சார்ந்த விருமாண்டி என்பவரின் மரபணுச் (DNA) சோதனையில் (Pitchappan, 2002, pp. 157-161) "சுமார் 70,000 ஆண்டுகளுக்கு முன்பு ஆப்பிரிக்கக் கடற்கரைப் பகுதியில் இருந்து இடப்பெயர்ச்சி மூலம் இந்தியாவில்[5] குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொண்டு வாழ்ந்தவர்களின் நேரடி வழித் தோன்றலாவார்" என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவரது மரபணு 130 மரபுரு

---

[4] இப்பகுதியிலுள்ள வயதுமுதிர்ந்த பெரியோர் தங்களது நாட்டார் வழக்கில் கிழக்கே மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் மேற்குக் கோபுர வாசலும், மேற்கே தொட்டப்ப நாயக்கனூரும் (ஆண்டிபட்டி கணவாய்), வடக்கே நாகமலைத் தொடரும், தெற்கே கள்ளிக்குடியும் (திருமங்கலம் அருகில்) கள்ளர் இன மக்கள் வாழும் நிலப்பரப்பின் நான்கு எல்லைகளாகச் சுட்டுவதை இங்கு மனங்கொள வேண்டும். இன்று இம்மக்கள் மேற்கே கேரள எல்லையான தேக்கடி வரை பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

[5] குறிப்பாகத் தமிழகத்தின் தென்கல்லக நாட்டுப் பகுதி எனக் கொள்ள வேண்டும்.

(DNA 130 Gene) என்பதோடு பொருந்துகிறது. இந்த 130 மரபுரு ஆப்பிரிக்காவில் உள்ள பாதிக்கும் மேற்பட்ட தொல்குடியினரிடம் காணப்படுவதோடு பிலிப்பைன்ஸ் மக்கள் சிலரிடமும் மலேசியப் பழங்குடியினரிடமும் காணப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனடிப்படையில் நோக்கும் போது கள்ளர் சமூகம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு புலப்பெயர்ச்சி ஆகி தென்கல்லக நாட்டுப் பகுதியில் வாழ்ந்த தொல்குடியினர் என்பதும் இவர்கள் தமிழ் தவிர வேறு மொழி அறியாதவர்கள் என்பதும் இவர்கள் தமிழ்நிலம் சார்ந்தவர்கள் என்பதும் புலனாகிறது. மேலும், கள்ளரின் பூர்வீக பூமி பாண்டி நாட்டின் தென்கல்லக நாட்டுப்பகுதியே என்பதும் உறுதியாகிறது. ஒரு காலகட்டத்தில் இவர்களின் செயல்பாடுகள் வெளியுலகிற்குத் தெரியாமல் இருந்து[6] அதாவது ஒருவகையான மலைவாழ் மக்களைப் போன்று வாழ்ந்து பின்னர் தங்களைப் பாண்டி நாட்டு அரசியல் சமூகத்தில் ஓர் அங்கமாக[7] வெளிப்படுத்தி-யவர்களாவர். இம்மக்களின் அரசியல் அல்லது ஆட்சியாளர்கள் சார்ந்த செயல்பாடுகள்கூட நாயக்கர் காலம் முதல்கொண்டு இருந்ததற்கான சாத்தியக்

---

[6] அந்தமான் நிக்கோபார்த் தீவுகளில் இன்றும்கூட வெளியுலகு தெரியாது குறிப்பாகத் தாம் இந்தியர் என்பதுகூடத் தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் தொல்குடியினரான சொம்பன், ஜராவா, செந்டினல் போல.

[7] கள்ளர் சமூக ஆண் பெண்களின் மனத்துணிவு, நேருக்குநேர் சந்திக்கும் சுபாவம், அவர்களின் வெகுளித்தனம் போன்றவை அவர்களைப் பிற சமூகத்தவரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் பல்வேறு சிறப்புக் குணங்களாக எட்கர் தர்ஸ்டன் மற்றும் லூயிடூமாண்ட் போன்ற ஆங்கிலேய ஆசிரியர்களின் பதிவுகள் இச்சமூக நிலையை உள்ளூடாகப் பார்ப்பதற்குத் துணைபுரிகின்றன. இவர்களைப் பற்றி ந.மு.வேங்கடசாமி நாட்டார் (1923, ப.94) குறிப்பிடும்போது "தஞ்சைக் கள்ளர்களிடமிருந்து பழக்கவழக்கங்களில் இவ்வகுப்பினர் வேறுபட்டிருந்தாலும் போர் புரிவதில் மிக்க விருப்பமுடையர்; வீரம், அஞ்சாமை, தாராளம், அடைக்கலம் புகுந்தாரைப் பாதுகாத்தல் என்பது இவர்கட்குச் சிறப்பாக உரிய குணங்களாம்" என்பார். 1755 ஆம் ஆண்டு ஆங்கிலேயப் படைத் தளபதி ரூம்லி என்பவரின் தலைமையில் நடந்த ஆதிக் கப் போட்டியில் அப்படையினரை எதிர்த்து 'ஆனையூர் கள்ளர்கள்'போரிட் செய்தியையம் இங்குப் பதிவு செய்தல் தகும்(Baliga,1960,p.434மற்றும் முத்துத்தேவர், 1982 பக்.228,234). எனினும்,இவர்கள்குற்றப் பரம்பரையினர் என அழைக்கப்பட்டனர் போலும்.

கூறுகளே மிகுதி எனக் கருதலாம். குறிப்பாக, திருமலை நாயக்கர் காலத்தில்தான் இவர்களது பங்களிப்பு மற்றும் செயல்பாடுகள் வெளியில் தெரியும் அளவிற்கு இருந்தது எனலாம்.[8]

தென்கல்லக நாடு

இந்த ஆய்வின் முக்கிய வெளிப்பாடாக அமைவது தென்கல்லக நாட்டினை வரையறை செய்வதாகும். இன்றைய மதுரை மாவட்டத்தின் வாடிப்பட்டி, உசிலம்பட்டி, திருமங்கலம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டங்களின் நிலப்பரப்பினை உள்ளடக்கியதாக இதன் எல்லை அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. கல்வெட்டுத் தரவுகளின் அடிப்படையில் நிலப்பரப்பு வரையறை செய்யப்பட்டு நிலப்படமாகக் (இ1, நில, பள4) கொடுக்கப் பட்டுள்ளது. சோழவந்தான்-தென்கரை மூலநாதர் கோயில் கல்வெட்டுகள், விக்கிரமங்கலம் மதுரோதைய ஈசுவரர் கோயில் கல்வெட்டுகள், சித்தமலை சித்தமகாலிங்கம் கோயில் கல்வெட்டு மற்றும் ஆனையூர் ஐராவதேசுவரர் கோயில் கல்வெட்டுகள் தென்கல்லகநாடு குறித்த செய்திகளைத் தருகின்றன.

அம்மையநாயக்கனூர் ஜமீன்தார் கனகயநாயக்கர், கிராமக் காவல்காக்கும் உரிமையை ஆரியபட்டி மதுரைக்கோட்டை கருத்தவீரத்தேவர் மகன் குமாரத் தேவன் மற்றும் இராசத்தேவர் மகன் சின்னிவீரத்தேவன் ஆகிய இருவருக்கும் வழங்கியதைக் (பொ.ஆ. 1845 ஆம் ஆண்டு செப்புப்பட்டயம் (சேதுராமன், 1995, பக். 104-105) குறிப்பிடுவதில் இருந்து கள்ளர்களின் தொடர் அரசுசார் செயல்பாடுகள் அறியப்படுகின்றன.

தென்கல்லக நாட்டுப் பகுதியில் கிடைக்கப்பெறும் கல்வெட்டுகளில் காலத்தால் முந்தைய கல்வெட்டு ஆனையூர் ஐராவதேசுவரர் கோயிலில்

---

[8] காட்டாக, திருமலைநாயக்கர் காலத்தில் பிஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்கள் இணைந்து மதுரையையும் தஞ்சையையும் தாக்க முனைந்தபோது இக்கட்டான சூழலில் மதுரையை இசுலாமியப் படையின் தாக்குதலில் இருந்து காப்பதற்குக் கள்ளர்களின் உதவியை நாடிப் பெற்றுச் சுல்தான்களின் படை விரட்டியடிக்கப்பட்டு மதுரை காக்கப்பட்டதைக் கூறலாம்.

காணப்படும் 'சோழன்தலைகொண்ட'[9] வீரபாண்டியனின் 10ஆம் ஆட்சியாண்டுக் (பொ.ஆ. 956) கல்வெட்டாகும் (இகஆ. 1961-62,எ.336, இ4 எ.1, இ5, நிழ, பஎ.5). இம்மன்னனின் 10ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் மேலும் சில இக்கோயிலில் காணப்படுகின்றன. இவற்றில் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றும் மேற்படி கோயிலின் மீனாட்சி அம்மன் சன்னதிக்குப் பின்புறம் திருச்சுற்றில் தனிக் கற்பலகையில் காணப்படுகிறது (இ4. எ.2, 3 மற்றும் இ5, நிழ, பஎ 6). இக்கல்வெட்டுகளில் "தென்கல்லக நாட்டுத் திருக்குறுமுள்ளூர் திருவக்னீசுவர முடையார்" எனக் குறிப்பிடப்படுகிறது. இதில் திருக்குறுமுள்ளூர்[10] என்பது

---

[9] இச்சிறப்புப் பெயருடன் வீரபாண்டியனின் கல்வெட்டுகள் பாண்டிநாட்டுப் பகுதியில் பல இடங்களில் காணப்படுகின்றன (தெஇக 14, எ.8-81, 84-86, 89-94). அருப்புக்கோட்டை, அம்பாசமுத்திரம், நாங்குநேரி, திருநெல்வேலி, ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீவைகுண்டம், சிவகங்கை, சாத்தூர், மேலத்திருமாணிக்கம், கீழ்மாத்தூர் (மதுரையின் தெற்குப் பகுதியில் வைகையின் தென்கரையில் உள்ளது) மற்றும் சுசீந்திரம் (TAS III, Nos. 22-26) போன்ற இடங்களில் கிடைக்கின்றன. குறிப்பாக மேற்சுட்டிய மேலத்திருமாணிக்கம் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் முதல் திருச்சுற்றுத் தென்சுவரில் காணப்படும் இம்மன்னனின் 949ஆம் ஆண்டு வட்டெழுத்துக் கல்வெட்டில் 'சோழனை எறிஞ்ச' என்ற சிறப்புப் பெயர் குறிப்பிடப்படுகிறது. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீட்டில் (சீதாராம் குருமூர்த்தி, 2008) அரசன் என்ற இடத்தில் விக்கிரமபாண்டியன் எனத் தவறாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. 'வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரிவர்மன்' என ஆதித்த கரிகால சோழன் (முதலாம் இராஜராஜனின் சகோதரன்) குறிப்பிடப்படுவதையும் கல்வெட்டுகளில் காண்கிறோம் (சுந்தர் பரத்வாஜ், 2012, ப.25).

[10] ஆர்.திருமலை (Tirumalai, 2009, pp.280-282) திருக்குறுமுள்ளூர் என்பதைத் திருக்குருமல்லூர் எனவும், திருக்குருமுன்னூர் எனவும் குறிப்பிட்டுள்ளார். கா.ராஜன் 'Catalogue of Archaeological Sites in Tamilnadu' (2012) என்னும் தொகுப்பில் திருக்குறுமுள்ளூர்/ ஆனையூர் பற்றி எவ்விதக் குறிப்பும் இடம்பெறவில்லை. மேலும், தென்கல்லகநாடு என்பதைத் தெனுகல்லகநாடு (Tenukallaka-nadu) எனவும், இந்நாட்டின் அம்பட்டயம்பட்டி என்பதை ஆமட்டம்பட்டி எனவும் வாலாந்தூர் என்பதை வாழாந்தூர் எனவும் தவறுதலாகக் குறிப்பிட்டுள்ளார். இந்நாட்டின் அருகில் உள்ள இடைக்கால அழநாட்டுப் பகுதியின் (இன்று தேனி மாவட்டம்) காமயகவுண்டன்பட்டி, கருனாக்கமுத்தன்பட்டி, ராயப்பன்பட்டி போன்ற இடங்கள் ஆண்டிபட்டி வட்டத்தில் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இவை யாவும் தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டமாகும். அதே வேளையில் வீரபாண்டி,தேனி வட்டம் மற்றும் மாவட்டமாகும்.

ஆனையூரின் பழைய பெயராகும். அதேபோன்று திருவக்னீசுவரர் என்பது இன்றைய ஐராவதேசுவரர் என்னும் கடவுளரின் பழைய பெயராகும். எனினும், கல்வெட்டுக்களில் நிர்வாகப் பிரிவான தென்கல்லகநாடு என்பது மட்டுமே குறிப்பிடப்படுகிறது.

சோழன்தலைகொண்ட வீரபாண்டியனின் ஆட்சிக்குப் பிறகு பாண்டிநாடு மீண்டும் சோழர்களின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தபிறகும்கூட இந்நாட்டின் பெயர் தென்கல்லக நாடு என்றே அழைக்கப்படுவதை ஆனையூர் ஐராவதேசுவரர் கோயிலின் மகாமண்டபத் தூணில் காணப்படும் முதலாம் இராஜராஜனின் வட்டெழுத்துக் கல்வெட்டின் வாயிலாக *(இகஆ, 1962-63, எ.499, இ4.எ.4 மற்றும் இ5. நிழ, பள 7)* அறியமுடிகிறது. இருப்பினும், மேற்படி கோயிலில் காணப்படும் முதலாம் இராஜராஜனின் 26ஆம் ஆட்சியாண்டுத் *(பொ.ஆ.1010)* தமிழ்க் கல்வெட்டு *(இகஆ.1962-63, எ.500 மற்றும் இ4, எ.5)* இவ்வருவாய்ப் பிரிவை இராஜ ராஜ பாண்டி நாட்டுத் தென்கல்லக நாடு எனச் சுட்டுவதைக் காணமுடிகிறது. இம்மன்னனின் 27ஆம் ஆட்சியாண்டில் *(பொ.ஆ. 1011)* வெளியிடப்பட்ட மற்றொரு தமிழ்க் கல்வெட்டு இராஜராஜமண்டலத்துத் தென்கல்லக நாடு என்று குறிப்பிடுகிறது *(இகஆ. 1962-63, எ.505)*. மேற்படி ஆனையூர் ஐராவதேசுவரர் கோயிலின் மகாமண்டபத் தூணில் உள்ள முதலாம் இராஜராஜனின் மகன் முதலாம் இராஜேந்திரனின் 4ஆம் ஆட்சியாண்டுக் *(பொ.ஆ. 1018)* கல்வெட்டு ராஜராஜபாண்டி மண்டலத்துத் தென்கல்லக நாடு எனக் குறிப்பிடுகிறது *(ஜெயக்குமார், 2008, பக்.135-136)*. இக்கோயிலில் காணப்படும் இம்மன்னனின் 6ஆம் ஆட்சியாண்டில் *(பொ.ஆ. 1020)* வெளியிடப்பட்ட இரு கல்வெட்டுகளுள் ஒன்றில் *(இ4, எ.6)* இந்நாட்டினைக் குறிப்பிடும்போது ராஜராஜ மண்டலத்துத் தென்கல்லக நாடு என்றும், மற்றொன்றில் இராஜராஜமண்டலத்து மதுராந்தக வளநாட்டுத் தென்கல்லகநாடு எனவும் *(இ4, எ.7)* குறிப்பிடுவதிலிருந்து இந்நாட்டுப் பிரிவானது முதன்முதலில் முதலாம் இராஜேந்திரன் காலத்தில் இருந்துதான் மதுராந்தக வளநாட்டின் கீழ் வருவதைக் காணமுடிகிறது. இதுவரை தென்கல்லக நாடானது பாண்டிநாட்டில் தனித்தன்மை வாய்ந்த ஒரு வருவாய்ப் பிரிவாக இயங்கி வந்திருப்பதைக் காணமுடிகிறது. தொடர்ந்து, சோழ அரசுப்

பிரதிநிதிகளின் ஆட்சிக் காலத்திலும் ராசராசப் பாண்டிநாட்டு மதுராந்தக வளநாட்டுத் தென்கல்லக நாடு என்றே குறிப்பிடப்படுவதைச் சடையவர்மன் சுந்தரசோழ பாண்டியனின் 5ஆம் (பொ.ஆ.1023), 9ஆம் (பொ.ஆ.1027) மற்றும் 13ஆம் (பொ.ஆ. 1031) ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன (இ4.எ.8,9,10 மற்றும் இ5, நிழ, பஎ 8).

சோழவந்தான் தென்கரை மூலநாதசுவாமி கோயில் கல்வெட்டுகளில் பழமையானது மகாமண்டபத் தூண்களில் இரண்டாம் வரிசையில் (நுழையும் போது) வலப்புறம் முதல் தூணில் காணப்படும் முதலாம் இராஜராஜனின் கல்வெட்டாகும் (இகஆ. 1910, எ.132). எனினும், மாறவர்மன் பராக்கிரம பாண்டியனின் 3ஆம் ஆட்சியாண்டுக் (பொ.ஆ. 1090) கல்வெட்டிலும் சடைய-வர்மன் குலசேகர பாண்டியனின் 9ஆம் ஆட்சியாண்டுக் (பொ.ஆ.1199) கல்வெட்டிலும் (தெஇக 5, எ.293, 295 மற்றும் இ5, நிழ, பஎ 9, 10) தென்கல்லக நாடு குறிப்பிடப்படுகிறது. மேற்படி கோயிலின் கருவறை வெளிப்புற வடக்குப் பக்கக் குமுதப் பட்டிகையில் காணப்படும் மாறவர்மன் விக்கிரமபாண்டியனின் 17ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் அக்கால அளவையின் பெயர் 'வீரபாண்டியன் பதினெட்டடிகோல்' (இ5. நிழ. பஎ 11) என்பது பதிவுசெய்யப்-பட்டுள்ளமை சோழன் தலைகொண்ட வீரபாண்டியனோடு தொடர்புபடுத்தவும் இக்கோயிலின் பழமையை முதலாம் இராஜராஜனுக்கும் முன்னதாகக் கொண்டு செல்வதற்கும் வலுசேர்க்கிறது.[11]

---

[11] மூலநாதர் கோயிலின் திருச்சுற்றில் காணப்படும் சிம்மத்தூண் வீரபாண்டியனால் அப்பகுதியில் கட்டப்பட்ட கோயிலைச் சேர்ந்ததாகும் என்றும், வீரபாண்டியன் 'வீரகேரளன்' என்ற தம் பட்டப்பெயரால் தென்கரையை அடுத்துள்ள முள்ளிபள்ளத்தில் 'வீரகேரள விண்ணகரம்' என்ற பெயரில் பெருமாளுக்கு கோயில் எடுப்பித்தார் என்றும் இக்கோயில் பற்றி முதலாம் இராஜராஜனின் 12 மற்றும் 17ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் மேற்படி கோயிலை 'ஸ்ரீவீரகேரள விண்ணகரம்' என்றும் இக்கோயில் பெருமானை 'ஸ்ரீவீரகேரள விண்ணகர தேவர்' என்றும் குறிப்பிடுவதால் இக்கோயில் இராஜராஜன் காலத்திற்கு முற்காலத்ததாகத் தெரிகிறது என்றும், பாண்டிய மன்னன் வீரபாண்டியனுக்கு வந்த கருங்குஷ்டம் என்ற நோய் தென்கரை தீர்த்தத்தில் நீராடியவுடன் மூலநாதர் அருளால் அகன்றதாகவும், அம்மன்னனே மூலநாதருக்கு அங்கு ஒரு சிவாலயத்தை நிர்மாணித்தான் என 19ஆம் நூற்றாண்டு ஓலைச்சுவடியிலிருந்து எடுத்துப் பெயர் இல்லாத ஒரு சைவர் எழுதிய 'தென்கரைப் புராணம்' என்னும் பில்வாரண்ய மகாத்மியம் என்னும் வடசொல் கலந்த தமிழ் உரைநடை நூலை மேற்கோள் காட்டிச் சந்திரமூர்த்தி மற்றும் வேதாசலம் (2002, பக். 17, 38, 58, 102-103) குறிப்பிடுவதிலிருந்தும் மூலநாதர் கோயிலின் காலக்கணிப்பு உறுதியாகிறது.

மேலும், தென்கரை மூலநாதசுவாமி கோயிலில் காணப்படும் மாறவர்மன் பராக்கிரமபாண்டியனின் 8ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் (இகஆ,1910, எ.127), மேற்படி கோயில் மற்றும் ஆனையூர் ஐராவதேசுவரர் கோயிலில் காணப்படும் சடையவர்மன் ஸ்ரீவல்லபனின் முறையே 2ஆம் ஆட்சியாண்டுக் (பொ.ஆ. 1124) கல்வெட்டு (ஜெயக்குமார், 2008, பக். 142-144) மற்றும் 3ஆம் ஆட்சியாண்டுக் (பொ.ஆ. 1125) கல்வெட்டும் குறிப்பிடத்தக்கனவாகும். இக்கல்வெட்டுகள் "ஸ்ரீபாண்டி நாட்டு மதுரோதைய வளநாட்டுத் தென்கல்லகநாடு" எனக் குறிப்பிடுவது நோக்கத்தக்கதாகும். ராஜராஜ பாண்டிநாடு மற்றும் ராஜராஜ மண்டலம் என அழைக்கப்பட்டுவந்த பாண்டிய நாடு மேற்சுட்டிய கல்வெட்டுகளின் மூலம் சோழன் தலைகொண்ட வீரபாண்டியனின் ஆட்சிக்குப் பிறகு பாண்டியர் மீண்டும் சுயாட்சியைப் பெற்றமையைத் தெளிவாக்குகிறது. மேலே குறிப்பிட்டுள்ள மாறவர்மன் பராக்கிரமபாண்டியன் மற்றும் சடையவர்மன் ஸ்ரீவல்லபனின் தென்கரை மூலநாதர் கோயில் கல்வெட்டுகள் "தென்கல்லகநாட்டு சேந்தனேரிக் கட்டிக்கள்ளூர் ஸ்ரீமூலஸ்தானமுடையார் கோயில்" என்று குறிப்பிடுகிறது. இது, இன்றைய தென்கரை சிவன்கோயில் இடைக்காலத்தில் சேந்தனேரி கட்டிக்கள்ளூர் என்ற இடத்தில் இருந்தது என்பதைத் தெரிவிப்பதோடு தென்கரையின்[12] பழைய பெயர் கட்டிக்கள்ளூர் என்பதும், அங்குப் பாண்டிய மன்னன் சேந்தனால் உருவாக்கப்பட்ட ஏரியையும் குறிப்பிடுவதிலிருந்து மூலநாதர் கோயிலின் காலத்தைச் சோழன் தலைகொண்ட வீரபாண்டியனின் காலத்திற்கும் முன்பாக எடுத்துச்செல்லத் துணைபுரிகிறது. சடையவர்மன் ஸ்ரீவல்லபன் கல்வெட்டில் 'மதுரோதைய வளநாட்டுத் தென்கல்லகநாடு' எனக் குறிப்பிடப் படுகிறது. கோயில்பட்டி (விக்கிரமங்கலம்) மதுரோதைய ஈசுவரர் கோயிலில் உள்ள சடையவர்மன் குலசேகர பாண்டியனின் 5ஆம் ஆட்சியாண்டுக் (பொ.ஆ. 1195) கல்வெட்டு (இ4, எ.14) தென்கல்கநாடு எனக் குறிக்கும்போது சடையவர்மன் சுந்தரபாண்டியனின் முதலாண்டுக்[13] (பொ.ஆ. 1251) கல்வெட்டு

---

[12] தென்கரை என்ற பெயர் நாயக்கர் காலத்தில் இருந்து வழக்கத்தில் இருந்துள்ளது.

[13] தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதியில் ஆட்சியாண்டு 9 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தெஇக 5, எ.303) "மதுரை உதைய வளநாட்டுத் தென்கல்லகநாடு" எனவும், திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை வட்டம் குன்னவராயன் கோட்டையில் உள்ள பாண்டிய மன்னனின் வணிகக் கல்வெட்டு *(இ4, எ.19)* மதுரை உதைய ஈசுவரர் எனவும் குறிப்பிடுவது நோக்கத்தக்கதாகும். மதுரோதைய வளநாடு அல்லது மதுரை உதைய வளநாடு என்னும் பெயர் கோவில்பட்டி (விக்கிரமங்கலம்) மதுரோதைய ஈசுவரர் பெயரில் வழங்கப்பட்டிருக்கலாம். இவ்வாறாக, தென்கல்லகநாட்டின் பெயர் பல பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகளில்[14] தொடர்ச்சியாகக் குறிப்பிடப்படுவதோடு பாண்டிய மன்னர்களில் கடைசி அரசராகக் கருதப்படும் முதலாம் மாறவர்மன் குலசேகரப் பாண்டியனின் பல கல்வெட்டுகள் தென்கரை மூலநாதசுவாமி கோயிலில் காணப்படுகின்றன *(இகஆ, 1910, எ.123-126)*. குறிப்பாக ஆனையூர் ஐராவதேசுவரர் கோயிலில் காணப்படும் இம்மன்னனின் 42ஆம் ஆட்சியாண்டுக் (பொ.ஆ. 1310) கல்வெட்டு அதாவது இம்மன்னனின் கடைசி ஆட்சியாண்டுக் கல்வெட்டும் *(ஜெயக்குமார், 2008, பக். 144-146)* 'தென்கல்லக நாடு' எனப் பதிவு செய்வது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து பாண்டி நாட்டுப் பழமையான வருவாய்ப் பிரிவுகளில் தென்கல்லகநாடும் ஒன்று என்பதை உணரமுடிகிறது.

பாண்டிநாடு சுல்தான்களின் கட்டுப்பாட்டில் இருந்து விஜயநகர அரசின் ஆளுகையின்கீழ் வந்த பிறகு இந்நாட்டுப் பிரிவு தொடர்ந்து வழக்கில் இருந்தாலும்கூடப் பெயர் மட்டும் சற்று மாற்றம் பெறுவதைக் காணமுடிகிறது. விஜயநகர மன்னர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் மதுரைப் பகுதியில் ஆட்சி செய்துவந்த சிற்றரசான வாணாதிராயர் கல்வெட்டுகள் தென்கல்லகநாட்டுப் பகுதியில் காணப்படுகின்றன. திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை வட்டம் சித்தமலை என்னும் மகாலிங்கமலைச் சிவன் கோயிலின் கருவறை வெளிப்புறக் குமுதப்பட்டிகையில் காணப்படும் சகம் 1410 இல் (பொ.ஆ. 1488)

---

[14] பல கல்வெட்டுகள் மன்னன் பெயர் குறிப்பிடப்படாமல் காணப்படுகின்றன.

வெளியிடப்பட்ட கல்வெட்டில்[15] (இ4, எ.15 மற்றும் இ5, நிழ, பள 1 மற்றும் 2) தொண்டைமண்டலத்துத் திம்மாச்சி நாயக்கர் திருமலையன் மேற்சுட்டிய சித்தமலை உடையார்க்கு அதாவது கடவுளருக்கு தேவதானமாகக் கொடுத்த நிலக்கொடை பற்றிப் பேசுகிறது. இந்நிலத்திற்கான நான்கெல்லை குறிப்பிடும்போது 'மகாபலி வாணாதிராஜா நாயக்கத்தனமாகப் புரமலைக் கல்லக நாட்டில் மேற்படி தொண்டை மண்டலத்துத் திம்மாச்சி நாயக்கர்[16] திருமலையனுக்குத் தந்த சீர்மையில் காரியப்பன் கோட்டைக்கு' எனச் சுட்டுகிறது. இதில் தென்கல்லகநாடு என்பது சற்று மாற்றம் பெற்று 'புரமலை கல்லகனாடு' என வழங்கிவந்ததைக் காணமுடிகிறது. 'தென்' என்னும் முன்னொட்டு நீக்கம் பெற்று 'புரமலை' என்பது புதிதாகச் சேர்க்கப் பட்டுள்ளமை தெளிவாகிறது. புரமலை என்பது மலைகளை அரணாகக் கொண்ட பகுதியாகும்.

ஆனையூர் கட்டக்கருப்பன்பட்டியில் உள்ள பொ.ஆ. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் கல்வெட்டு (இகஆ, 1961-62, எ.350 மற்றும் இ4, எ.12) 'தென்னாட்டு ராயர் மடமான[17] ஆனையூர்' எனக் குறிப்பிடுகிறது. இதிலிருந்து

---

[15] தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 25, எண் 44 இல் இக்கல்வெட்டு வெளிவந்துள்ளது. மூலப்பாடத்தில் பல தவறுகள் காணப்பட்டாலும் 'நாயக்கத்தனம்' என்பது சுயகதத்தன்மம் (Svaya-gata-danam = a private property) எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவத்தையே மாற்றக்கூடிய வகையில் அமைந்துள்ளது. நாயக்கத்தனம் என்பதற்கு விஜயநகர அரசில் அடங்கிய நாயக்கர் என்ற குறுநிலத் தலைவரின் ஆட்சிப் பகுதி எனப் பொருள் கொள்ளலாம் (தகசொ, 2003, ப.355). நாயக்கத்தனம் என்னும் சொல் நொபொரு கராஷிமாவின் (Noboru Karashima, The Concordance of Nayakas, 2002) நூலில் பல இடங்களில் காட்டப்பட்டுள்ளது. 'சுயகதத்தன்மம்' என்ற சொல் இந்நூலில் இடம்பெறவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் இந்நூலில் தொண்டை மண்டலத்துத் திம்மாச்சி நாயக்கர் திருமலை பற்றிய குறிப்பும் காணப்படவில்லை.

[16] திம்மாச்சிநாயக்கர் என்பது தும்மிச்சிநாயக்கர் என்பதன் மருவாகலாம்.

[17] ராயர்மடம் என்பது ஆனையூர் ஐராவதேசுவரர் கோயிலைக் குறிக்கலாம்.

தென்கல்லகநாடு என்பது மருவி தென்னாடு ஆயிற்று என்பதை அறியமுடிவதோடு 'கல்லக' என்ற சொல் நீக்கம் பெற்றுள்ளமையையும் பார்க்கமுடிகிறது.

திருமங்கலம் வட்டம், தங்களாச்சேரி வாலகுருநாதர் அங்காளஈசுவரி கோயிலுக்கு அருகில் தனிக் கற்பலகையில் சகம் 1492 இல் (பொ.ஆ. 1570) பொறிக்கப்பட்டு நடப்பட்டுள்ள தமிழ்க் கல்வெட்டு மதுரை நாயக்க மன்னன் கிட்டிணப்ப நாயக்கர் காலத்தைச் சார்ந்ததாகும் (விஜயவேணுகோபால் மற்றும் வெங்கட்ராமன், 1996, பக். 68-70 மற்றும் இ5, நிழ பள 3 மற்றும் 3.1). இக்கல்வெட்டில் 'மதுரை மண்டலத்தில் உதைய வளநாட்டுப் பிரமலைப் பற்றில் திட்டியன் (திடியன்) சீர்மைக்கு உட்பட்ட தங்களாச்சேரி' என்னும் குறிப்புக் காணப்படுகிறது. பாண்டியர் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்ட மதுரோதைய/ மதுரை உதைய வளநாடு என்பதே இதில் மதுரை மண்டலத்தில் உதைய வளநாடு எனவும் மேற்படி கல்வெட்டின் காலத்திற்கு 82 ஆண்டுகளுக்கு முன்பாக வெளியிடப்பட்ட சித்தமலையில் உள்ள தொண்டை மண்டலத் திம்மாச்சி நாயக்கர் கல்வெட்டில்[18] குறிப்பிடப்பட்ட 'புரமலை கல்லகநாடு' என்பதே மேற்சுட்டிய தங்களாச்சேரி கிட்டிணப்ப நாயக்கர் கல்வெட்டில் 'பிரமலைப்பற்று' எனவும் காட்டப்படுகிறது.

தென்கல்லக நாட்டின் எல்லை

மேற்கண்ட முடிவுகளின்படி தென்கல்லக நாட்டின் எல்லையினைக் கீழ்க்காணுமாறு வரையறை செய்யலாம்:

- வடக்கில் சித்தமகாலிங்கமலை (இன்று திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தின் அணைப்பட்டி/மேட்டுப்பட்டி பகுதி) என்றாலும்கூட இதனை ஒட்டி ஓடுகின்ற வைகை ஆறு (இ5, நிழ, பள 12).
- தெற்கில் தங்களாச்சேரி (இன்று மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம்). நாயக்கர் காலத்தில் திடியன் சீர்மைப் பகுதி.

---

[18] பார்க்க, பக். 18.

- கிழக்கில் தென்கரை (இன்று மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், சோழவந்தானின் ஒரு பகுதி). அதாவது, வைகை ஆற்றின் தென்கரை என்பது பெயர்க் காரணம்.
- மேற்கில் தொட்டப்பநாயக்கனூர் கணவாய் அல்லது ஆண்டிபட்டி கணவாய் அதாவது இடைக்காலத்தில் திருக்குறுமுள்ளூர் (ஆனையூர்) தேவதானப் பகுதி (இன்று மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தின் மேற்கெல்லை).

வருவாய்ப் பிரிவுகளின் எல்லைகள்

வடக்கு, வடகிழக்கில் பாகனூர்க் கூற்றம். தென்கல்லக நாட்டின் தென்கரைக்கு எதிரில் அதாவது வைகை ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள சோழவந்தான் ஜெனகநாராயணப் பெருமாள்கோயில் கல்வெட்டில் பாகனூர்க் கூற்றம் குறிக்கப்படுகிறது (இ5, நிழ, பஎ13). மேற்படி கோயிலின் மகாமண்டபம் வடக்குப் பக்கச் சுவரில் உள்ள பாண்டியர் கல்வெட்டு அவ்விடத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது பாகனூர்க் கூற்றத்துச் சோழகுலாந்தகச் சதுர்வேதிமங்கலம் எனக் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது (இ5,நிழ, பஎ 14). குருவித்துறைச் சக்கரத்தாழ்வார் கோயில் கல்வெட்டில் குறிப்பிடும்போது 'பாகனூர்க் கூற்றத்துச் சோழகுலாந்தக சதுர்வேதிமங்கலத்து மேல்கரை ஸ்ரீவல்லப விண்ணகர் ஆழ்வார்' எனக் காணப்படுவது (இ5, நிழ, பஎ 15) குறிப்பிடத்தக்கது. இங்குக் குறிப்பிடப்படும் மேல்கரை என்பது வைகை ஆற்றின் தென்கரை (இ5, நிழ, பஎ 16) ஆகும். ஆனால், பொதுவாகப் பாகனூர்க் கூற்றம் வைகையின் கீழ்க்கரையை அதாவது வடகரையை எல்லையாகக் கொண்டு அமைந்த வருவாய்ப் பிரிவாகும். ஆக, பாகனூர்க் கூற்றத்தின் நிலப்பகுதி தென் கல்லக நாட்டு எல்லையிலும் அமைந்திருந்தமை இதன்மூலம் புலப்படுகிறது. காட்டாக: திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில் வைகையின் தென்கரையில் இருக்கும் சித்தமலை/சித்தமகாலிங்க மலை தென்கல்லக நாட்டிலும் இச்சித்தமகாலிங்க மலைக்குத் தொடர்புடைய வைகை ஆற்றின் வடகரையில் (திண்டுக்கல்

மாவட்டம், நிலக்கோட்டை வட்டம்) அமைந்துள்ள சித்தர்நத்தம்[19] என்னும் ஊர் பாகனூர்க் கூற்றத்தில் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. சித்தர்நத்தத்தில் காணப்படும் முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் 28ஆம் ஆட்சியாண்டு (பொ.ஆ. 1296) நடுகல் கல்வெட்டு[20] இவ்வூரைப் "பாகனூர்க் கூற்றத்துப் பொருந்தலான தேவேந்திர வல்லவபுரம்" எனக் குறிப்பிடுகிறது. இப்பொருந்தல் சங்க இலக்கிய ஊராகும்.[21]

---

[19] தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீட்டில் (சீதாராம் குருமூர்த்தி, 2007, பக்.120-122) இவ்வூர் வைகை ஆற்றின் தென்கரையில் அமைந்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கா.ராஜன் வெளியிட்டுள்ள 'Catalogue of Archaeological Sites in Tamilnadu' (Rajan, 2009) என்பதில் சித்தர்நத்தம் மதுரை தெற்கில் (Madurai south) உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஆங்கிலேயர் காலத்து அடையாளமாகும். இன்று சித்தர்நத்தத்திற்கும் மதுரைக்கும் உள்ள தொலைவு 56 கி.மீ. ஆகும். அண்மையில் வெளியிடப்பட்டுள்ள 'மாமதுரை' (இராசேந்திரன் மற்றும் சாந்தலிங்கம், 2015, பக். 245-246) என்ற நூலில்கூடச் சித்தர்நத்தம் தேனி மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் அமைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

[20] பெருங்கடுவாய்ப் புலியுடன் சண்டையிட்டு வெற்றிபெற்ற வீரனுக்கான இந்நடுகல் கல்வெட்டு ஊரின் மேற்கில் பெருமாள்கோயில் அருகில் திரு.அழகேசன் என்பவரின் தோட்டத்தில் உள்ளது. 'பெருங்கடுவாய்ப் புலி' என்பது நடுகல்லில் உள்ள புலியின் உருவத்தைப் பார்த்தால் உண்மை தெரியவரும். கல்வெட்டுச் செய்தியும் மிகைப்படுத்தப் படவில்லை என்பதும் புரியும். புலி மற்றும் வீரனின் உருவங்கள் மிக நேர்த்தியாக வடிக்கப்பட்டுள்ளன.

[21] அகநானூறு, பாடல் 19 மற்றும் 351; புறநானூறு பாடல் 53. தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் துறையினர் பழந்தமிழ் நடுகல் கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்த தாதபட்டி (திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம்) மற்றும் புள்ளிமான்கோம்பை (தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம்) போன்ற இடங்களும் தென்கல்லக நாட்டின் எல்லையான வைகையின் வடகரையில் அமைந்துள்ள சித்தர்நத்தம் அருகில் வைகையின் தென்கரையில் அமைந்துள்ள ஊர்கள் என்பதும் சிறப்புக்குரியதாகும் (ஆவணம் 17, 2006, பக்.1-5 மற்றும் ஆவணம்-18, 2007, பக்.16-17).

வேள்விக்குடி செப்பேடு (பொ.ஆ. 770) பாகனூர்க் கூற்றம் பற்றிக் குறிப்பிடுகிறது. செக்கானூரணி, கொங்கர்புளியங்குளம் சமணக்குகை பழந்தமிழ்க் (பொ.ஆ.மு. 3 ஆம் நூ.) கல்வெட்டில் 'பாகன் ஊர்' (இ5, நிழ, பள 17) காணப்படுகிறது. இம்மலைக்குப் பின்புறமே பாகனூர்க் கூற்றத்துத் தேனூர் என்னும் 'ஜனநாத சதுர்வேதிமங்கலம்' அமைந்திருந்தது. திண்டுக்கல்லில் இருந்து வரும்போது மதுரைக்கு நுழைவு வாயிலாக அமையும் பரவை மற்றும் விளாங்குடி வரை பாகனூர்க் கூற்றத்தின் எல்லை இருந்ததை அறியமுடிகிறது (இகஆ 1951-52, எ.137). ஆக, சித்தர்நத்தத்தில் (பொருந்தல்) இருந்து பரவை மற்றும் விளாங்குடி வரை தென் கல்லக நாட்டிற்கு வடக்கு மற்றும் வடகிழக்கில் அமைந்திருந்த பாகனூர்க் கூற்றம் சங்ககாலம் முதல் பாண்டி நாட்டில் இருந்த ஒரு வருவாய்ப் பிரிவு என்பதால் இதனை ஒட்டிப் பெரிய நிலப்பரப்புடன் விளங்கிய தென் கல்லக நாடும் சங்க காலத்திலிருந்து ஒரு தனி வருவாய்ப் பிரிவாகவே இருந்திருக்க வேண்டும் என்பதை உணரலாம்.

தெற்கில் தென்முட்டநாடு. இந்நாட்டின் மேலத்திருமாணிக்கம் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் வெளிப்புறச் சுவரில் தென்முட்டநாடு (இ5, நிழ, பள18) குறித்த பல கல்வெட்டுகளைப் பார்க்கமுடிகிறது. வீரபாண்டியனின் 4ஆம் ஆட்சியாண்டு (பொ.ஆ. 950) வட்டெழுத்துக் கல்வெட்டிலேயே தென்முட்ட நாடு குறிப்பிடப்படுவது சுட்டத்தக்கதாகும். சில ஆவணங்கள் முட்டநாடு/முட்டநாட்டு நாட்டவரோம் எனவும் குறிப்பிடுகின்றன (சீதாராம் குருமூர்த்தி, 2008, எ.219 மற்றும் 220). மேற்படி கோயிலில் காணப்படும் குலசேகரபாண்டியனின் (13 ஆம் நூ.) கல்வெட்டில் தென்கல்லகநாடு மற்றும் பாகனூர்க் கூற்றம் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன (சீதாராம் குருமூர்த்தி, 2008, எ.213). பொ.ஆ. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டியர் கல்வெட்டு ஒன்றில் தென்முட்டநாடு மற்றும் முட்டநாடு என இரண்டும் குறிப்பிடப்படுகின்றன (சீதாராம் குருமூர்த்தி, 2008, எ.222). இதில் குறிப்பிடப்படும் முட்டநாடு என்பது ஒரு வேளை தென்கல்லக நாட்டின் தென்

எல்லையினை ஒட்டிய வடமுட்ட நாடாக இருக்கலாம். ஆனால், மேற்படி கோயிலில் காணப்படும் குலசேகரன் எனப் பெயர் பொறிக்கப்பட்ட பொ.ஆ. 13 நூற்றாண்டுக் கல்வெட்டு (சீதாராம் குருமூர்த்தி, 2008, எ.232) வடமுட்டநாடு எனத் தெளிவாகக் குறிப்பிடுவதைப் பார்க்க முடிகிறது.

திருமங்கலம் வட்டம், குப்பல்நத்தம் என்ற இடத்தில் கிடைத்த விஜயநகர அரசர் வேங்கடபதி மகாராயரின் (பொ.ஆ.1586-1614) சகம் 1509 (பொ.ஆ. 1587) இல் அதாவது இம்மன்னனின் ஆட்சித் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட செப்புப் பட்டயம் (Venkataraman, 1986) 'மதுரைச் சீமையில், பழமைவாய்ந்த முட்ட நாட்டின் மல்லபுரம் சீமையில் உள்ள குப்பல்நத்தம்' எனக் குறிப்பிடுவதிலிருந்து முட்டநாடு தொடர்ந்து அடையாளப்படுத்தப்பட்டு வந்ததை அறியமுடிகிறது. மேலும், இச்செப்பேட்டில் குப்பல்நத்தத்திற்கு எல்லைகளைக் குறிப்பிடும்போது[22] பெருங்காமநல்லூருக்குத் தெற்கு என்ற குறிப்புத் தென்கல்லக நாட்டின் தென் எல்லையை வரையறை செய்ய உதவுகிறது. இப்பெருங்காமநல்லூர் தென் கல்லகநாட்டின் தென் எல்லையாகப் பி.கன்னியம்பட்டி மலையினை ஒட்டி அமைந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கில் மாடக்குளக்கீழ். தென்கல்லகநாட்டின் மேலக்கால் மற்றும் பாகனூர்க் கூற்றத்தின் திருவேடகம் ஆகிய இரண்டும் முறையே அமைந்துள்ள வைகை ஆற்றின் தென்கரை மற்றும் வடகரையை இன்று இணைக்கக்கூடிய திருவேடகம் புதுப்பாலம் என்னும் இடத்திலிருந்து வைகையின் தென்கரையில் நாகமலைக்கு முன்பும் பின்புமாக அல்லது வடக்கிலும் தெற்கிலுமாக உள்ள

---

22 செப்பேட்டில் தெலுங்குப் பெயர்களைக் கொண்ட ஊர்கள் நான்கெல்லைகளாகக் காட்டப்படுகின்றன. அவை பிற்காலத்தில் தமிழ்ப் பெயர்களாக மாற்றம் பெற்றுள்ளன. காட்டாக, பெரிய கட்டளை (பெத்தகட்ள), சின்னகட்டளை (பின்னகட்ள) மற்றும் சேடபட்டி (ஜாடுபட்டி) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பகுதி மாடக்குளக்கீழ் என்பதாகும். மேற்படி புதுப்பாலத்திலிருந்து வைகை ஆற்றினை ஒட்டிச் சென்றால் வடகரையில் பாகனூர்க் கூற்றத்துத் தேனூரும் தென்கரையில் மாடக்குளக்கீழ் கொடிமங்கலமும் எதிரெதிர் ஊர்களாக அமைந்திருப்பதைக் காணலாம். ஆக, இன்றைய திருவேடகம் புதுப்பாலம் அமைந்துள்ள இடமே இடைக்காலத்தில் பாகனூர்க் கூற்றம், தென்கல்லகநாடு மற்றும் மாடக்குளக்கீழ் போன்ற வருவாய்ப் பிரிவுகளின் மைய எல்லையாக இருந்துள்ளமை புலப்படுகிறது. மாடக்குளக்கீழ்ப் பகுதியில் இன்றைய கொடிமங்கலம், கீழ் மாத்தூர், மேல்மாத்தூர், துவரிமான், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு எதிரில் உள்ள வடபழஞ்சி, தனக்கன் குளம், விளாச்சேரி, அச்சம்பத்து, விராட்டிப்பத்து, திருநகர், கீழக்குயில்குடி, திருப்பரங்குன்றம், பசுமலை மற்றும் பழங்காநத்தம் உள்ளிட்ட பகுதிகள் அடங்கும்.[23] இதில் பெரும்பாலானவை இன்று மதுரை மாநகராட்சிப் பகுதிகளாகும். பாண்டிய மன்னர்களின் அரண்மனையும் மாடக்குளக்கீழ்ப் பகுதியில்தான் இருந்துள்ளது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

மேற்கில் அளநாடு. தேனி மாவட்டம், தேனி வட்டம் வீரபாண்டி என்னும் ஊரில் உள்ள கண்ணீசுவரர் கோயிலில் காணப்படும் ஸ்ரீவிக்கிரம பாண்டியனின் 7ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (தெஇக 23, எ.426) "அளநாட்டு புலிநல்லூருடையார் கண்ணுடைய ஈசுவரமுடைய நாயனாற்கு . . . தென்கல்லக நாட்டு உடையார் மூலத்தானமுடைய நாயனார் திருமடைவிளாகத்தில் எடுத்த" எனக் குறிப்பதிலிருந்து தென்கல்லக நாட்டின் மேற்கில் அமைந்திருந்த வருவாய்ப் பிரிவு அளநாடு என்பதும் இவ்விரு நாடுகளுக்கும் இடையே தொடர்பு இருந்தது என்பதும் தெளிவாகிறது. ஆனையூர் சோழன் தலைகொண்ட வீரபாண்டியனின்

---

[23] கல்வெட்டுகள் மற்றும் களஆய்வில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் வாயிலாகவும், குறிப்பாக இன்றைய நில அளவை ஆவணங்களின் வாயிலாகவும் மாடக்குளக்கீழ்ப் பகுதி முடிவு செய்யப்பட்டுள்ளது.

வட்டெழுத்துக் கல்வெட்டில் (பொ.ஆ. 956) அழநாடு[24] எனக் குறிப்பிடப்படுகிறது. சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டுச் சாசனமும் 'அழநாட்டு நாட்டார்' என்றே குறிப்பிடுகிறது (பாசெப, ப. 159, பாடவரி 167-169).

இவ்வாறாக, தென்கல்லகநாட்டின் இயற்கை அமைப்பு, நாகமலையை ஊடாகக் கொண்டு இருபுறங்களிலும் நிலப்பரப்பினைக் கொண்டதாக வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதியில் வைகை ஆற்றின் கரையையும் தெற்கில் திடியன், புத்தூர், பி.கன்னியம்பட்டி, நல்லுத்தேவன்பட்டி மலைகளையும் மேற்கில் ஆண்டிப்பட்டி மலைத்தொடரையும் அரணாகக் கொண்ட கல்லக/மலையகப் பகுதியாக இருந்துள்ளமை மேற்சுட்டிய சான்றுகள் மற்றும் களஆய்வின் வாயிலாக உறுதிசெய்யப்படுகிறது.

எல்லை விரிவாக்கம்

"இடைக்காலத் தமிழ்நாட்டில் நாடுகளும் ஊர்களும் (கி.பி. 800-1300)" என்னும் நிலப்படத் தொகுப்பில் (சுப்பராயலு, 2014, நிலப்பட எண் 2) தென்கல்லக நாடு இடம்பெற்றுள்ளது. இதில், தென்கல்லக நாட்டைச் சேர்ந்த 'வாலாந்தூர்' என்னும் ஊர் வட முட்ட நாட்டைச் சேர்ந்ததாகக் காட்டப்பட்டுள்ளது. ஆனையூர் ஐராவதேசுவரர் கோயில் மகாமண்டபத் தூணில் காணப்படும் முதலாம் இராஜேந்திர சோழனின் 6ஆம் ஆட்சியாண்டுக் (பொ.ஆ. 1020) கல்வெட்டுக் (ஜெயக்குமார் 2008, பக்.136-138) குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இக்கல்வெட்டில் முதலாம் இராஜராஜனின் 26ஆம் ஆட்சியாண்டும் (பொ.ஆ. 1011) குறிக்கப் பட்டுள்ளமை சிறப்புக்குரியது. காரணம், தந்தையோடு இணைந்து

[24] 'அளம்' என்றால் உப்பளம். அழ(ற்காய்) என்றால் மிளகு எனப் பொருள் கொள்ளலாம் (தமொஅ. பக். 145, 148). இன்றைய தேனி, சின்னமனூர் (அரிகேசரிநல்லூர்), உத்தமப்பாளையம், கூடலூர், கம்பம், குமுளி போன்ற பகுதிகளை உள்ளடக்கியது அளநாடு. இப்பகுதி மலைநாடு எனப்படும் கேரளப்பகுதியை ஒட்டியிருப்பதால் மிளகு உற்பத்திக்கான பகுதியாகப் பார்க்கலாம். ஆனால் உப்பளத்திற்கு உகந்த பகுதி அன்று. எனவே 'அழநாடு' என்பதே சரியானதாக இருக்கும். மேலும், சோழன் கலைகொண்ட வீரபாண்டியனின் 10ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (ஜெயக்குமார், 2008, பக்.128-130) அளற்று நாட்டுக் கொளத்தூர் மூர்க்கவிச்சாதிரபல்லவரையன் ஆன சாத்தன் தமிழன் தென்கல்லகநாட்டுத் திருக்குறுமுள்ளூர் ஈசுவரனுக்கு வழங்கிய கொடை பற்றிப் பேசுகிறது. அளற்றுநாடு இன்றைய முதுகுளத்தூர் பகுதியை உள்ளடக்கியதாகும்.

இராஜேந்திரனும் ஆட்சிசெய்தமை இக்கல்வெட்டின் வாயிலாகப் புலப்படுவதாகும். இக்கல்வெட்டு "இராஜராஜ மண்டலத்துத் தென்கல்லகநாட்டுத் தேவதானம் திருக்குறுமுள்ளூர் எனக் குறிப்பிட்டுத் தொடர்ந்து இந்நாட்டு வாராந்துர் (வாலாந்துர்) சோலை உலகன்மண்டகத்து[25] 'எரிய படைத்தலைவன்' எனக் கூறுவதால் வாலாந்துர் தென் கல்லக நாட்டுப் பகுதியாகவே இருந்திருக்கிறது என்பது தெளிவாகும். மேலும், திருக்குறுமுள்ளூர்த் திருவக்னீசுவரர் கோயில் பணியாளர்களுக்குக் குறிப்பாக, தேவரடியார் உய்யவந்தாள் உள்ளிட்டவர்களுக்கு வாலாந்துர் ஊரார் நிலம் 8மா கொடுத்ததைக் கல்வெட்டுச் (இகஆ 1961-62, எ.340) சுட்டுவது முன்னர்ச் சுட்டியமைக்கு வலுசேர்க்கிறது.

அக்காலத்தில் நாடுகளின் எல்லைகளை வரையறை செய்யும்போது ஆறு அல்லது மலைகளையே அடையாளமாகக் கொள்வது வழக்கமாக இருந்திருக்கிறது. அந்த வகையில் வாலாந்துர் கண்மாயிலிருந்து (இ5, நிழ பஎ 123) மிக அருகில் உள்ள திடியன் மலை வரை தென்கல்லக நாட்டின் எல்லை இருந்திருக்க வேண்டும். சோழன்தலை கொண்ட வீரபாண்டியனின் கல்வெட்டு (பொ.ஆ. 956), திருக்குறுமுள்ளூரின் (ஆனையூர்) தேவதான இறையிலி நிலத்திற்கு எல்லைகள் குறிப்பிடும்போது 'வடமலை முட்டத்திற்கும்', 'கிளி ஆற்றுக்கும்', 'செம்மாங்கல்லுக்கும்' மற்றும் 'கருமலைக்கும்' எனக் குறிப்பிடுவதை இங்குச் சுட்டுதல் தகும் (இ4, எ.1).

பொ.ஆ. 8-13 ஆம் நூற்றாண்டில் காணப்பட்ட தென்கல்லக நாட்டின் எல்லைகள் பொ.ஆ. 14-15 ஆம் நூற்றாண்டிலிருந்து மாற்றம் பெற்றுள்ளன

---

25 சோலை உலகன் மண்டகம் இன்று அங்காளபரமேசுவரி கோயிலாக (வாலகுருநாதரும் உள்ளார்) இருக்கிறது. இக்கோயில் கற்களால், கற்பலகைகளால் மற்றும் கற்தூண்களால் அமைக்கப்பட்ட ஒரு சாதாரண மண்டபம் மட்டுமே (இம்மண்டபத்திற்கு மாற்றாக இப் பொழுது இதனருகில் புதிய கற்கோயில் உருவாகி வருகிறது). இன்னும் ஒருசில ஆண்டுகளில் இம்மண்டபத்தை நாம் காணமுடியாது. இம்மண்டபம் சோழப் படைகளின் பாசறையாக விளங்கிப் படைத்தலைவர்களின் கீழ் இருந்துள்ளது. சோலை, சோலையன் போன்ற பெயர்கள் இப்பகுதியில் அண்மைக்காலம் வரை ஆட்பெயராக வழங்கி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. 'சோலை' என்பது சோழ(ர்) என்பதன் மருவுப் பெயராக இருப்பதற்கும் வாய்ப்புண்டு.

மேற்சுட்டிய காலகட்டத்தில் தென்கல்லக நாட்டின் வடவெல்லை விக்கிரமங்கலம், தென்னெல்லை திடியன்மலை, கிழக்கெல்லை செக்கானூரணி,[26] மேற்கெல்லை ஆண்டிபட்டிக் கணவாய் என இருந்துள்ளது. விஜயநகர ஆட்சிக்காலத்தில் தென்கல்லக நாட்டின் வருவாய் நிலப்பரப்பு மாற்றி அமைக்கப்பட்டமைக்கான சான்றுகள் கிடைக்கின்றன. எனினும், கிழக்கு மற்றும் மேற்கு எல்லைகளில் எவ்வித மாற்றமும் நிகழவில்லை. வடக்கிலும் தெற்கிலும் விரிவாக்கம் அல்லது மாற்றம் செய்யப்பட்டுள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. விஜயநகர் காலத்தில் பாண்டி மண்டலம் பல சீர்மைகளாகப் பிரிக்கப்பட்டு விட்டன. இச்சீர்மை என்னும் நிர்வாகப் பிரிவு நாயக்கர் காலத்திலும் தொடர்ந்தது. அவ்வகையில், பொ.ஆ. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆனையூர்-கட்டக்கருப்பன்பட்டிக் கல்வெட்டு (இகஆ 1961-62, எ.350 மற்றும் ஜெயக்குமார் 2008, பக்.152-154) 'தென்னாட்டு ராயர் மடமான ஆனையூர்' எனக் குறிப்பிடுவதும் சித்தமலைக் கல்வெட்டு (இ4, எ.15, இ5, நிழ, பஎ 2 மற்றும் தெஇக 25, எ.44) 'புரமலைக் கல்லகனாட்டில் வாணாதிராஜா திருமலைக்குத் தந்த சீர்மையில்" எனக் குறிப்பிடுவதும் விஜயநகர ஆட்சிக்காலத்தில் தென்கல்லக நாட்டின் இடைக்காலக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளதையும் குறிப்பாகச் சீர்மை என்னும் நிர்வாகப் பிரிவின் தாக்கம் செல்வாக்குப் பெற்றதாக இருந்ததையும் பார்க்க முடிவதோடு தென் கல்லக நாட்டின் வடவெல்லை விஜயநகர் காலத்தில் சித்தமகாலிங்கமலையாக இருந்ததையும் அறியமுடிகிறது. பொ.ஆ. 8-13 ஆம் நூற்றாண்டில் இந்நாட்டின் வடவெல்லை விக்கிரமங்கலம் என ஏற்கனவே சுட்டப்பட்டுள்ளது. ஆனால், விக்கிரமங்கலத்திற்கும் சித்தமலைக்கும் 8 கி.மீ. தொலைவே உள்ளதால் வடவெல்லையில் பெரிய மாற்றம் நிகழ்ந்ததாகக்

---

[26] விக்கிரமங்கலம் மதுரோதைய ஈசுவரர் கோயிலில் காணப்படும் பாண்டியர் கல்வெட்டில் க்ருமாத்தூர் இடம்பெறும்போது இதன் அருகிலுள்ள செக்கானூரணியும் இதனுடன் தொடர்புடைய பகுதியாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. மேலும், செக்கானூரணியை ஒட்டிய கொங்கர்புளியங்குளம் பழந்தமிழ்க் கல்வெட்டு 'பாகன் ஊர்' எனக் குறிப்பிடுவதும், இக்குன்றுக்குப் பின்புறம், நாகமலைக்கு அருகில் (திருவேடகம் புதுப்பாலம்) வைகையின் வடகரையில் பாகனூர்க் கூற்றத்தின் திருவேடகம் மற்றும் தேனூர், தென்கரையில் தென்கல்லகநாட்டின் மேலக்கால் இவ்வூருக்கு அடுத்ததாக இதே கரையில் மாடக்குளக்கீழ் கொடிமங்கலம் ஆகியவை அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மேலக்காலுக்கு அருகில் உள்ள ஊர் செக்கானூரணி.

கொள்ள வேண்டியதில்லை. காரணம், சித்தமலை விக்கிரமங்கலத்திற்கு அருகில் உள்ள மலைப்பகுதி என்பதால் விக்கிரமங்கலம் முதல் சித்தமலை வரையிலான நிலப்பரப்பினை ஏற்கனவே தென்கல்லகநாட்டின் எல்லைக்குள் இருந்த பகுதியாகவே கொள்ள வேண்டும். மேலும் விஜயநகர் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நிர்வாகச் செயல்பாடுகளின்போது அதாவது சித்தமலை ஈசுவரனுக்குக் கொடை வழங்கப்பட்டதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆவணப் பதிவு புதிதாகப் பொறிக்கப்பட்டபோது சித்தமலையில் பொறிக்கப்பட்டுள்ளது எனக் கொள்ளலாம். எனவேதான், வடவெல்லையில் நிகழ்ந்த இம்மாற்றத்தை ஒரு பெரிய விரிவாக்கமாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லை எனலாம்.

குறிப்பாக, நாயக்கர் காலத்தில் தென்கல்லக நாட்டின் தென்னெல்லையில் சிறப்பான விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இடைக் காலத்தில் (பொ.ஆ.8-13 ஆம் நூ.) திடியன் வரை இருந்த தென்கல்லக நாட்டின் தென்னெல்லை நாயக்கர் காலத்தில் திடியன் (திட்டியன்) சீர்மை ஆக்கப்பட்டு அதன் கீழ் நாயக்கர் கட்டுப்பாட்டில் புதிய ஊர்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவ்வகையில், திடியனுக்குத் தெற்கில் சிந்துபட்டி, பொறுப்புப்பட்டி (பொறுப்பு மேட்டுப்பட்டி), தும்மக்குண்டு, சாத்தங்குடி, தங்களாச்சேரி, காளப்பன்பட்டி என பல ஊர்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. தங்களாச்சேரி கிட்டிணப்ப நாயக்கர் கல்வெட்டில் 'திடியன் சீர்மை பிரமலைப் பற்றுத் தங்களாச்சேரி' எனக் காணப்படுவதைக் கொண்டு நாயக்கர் காலத்தில் பழைய தென்கல்லக நாட்டின் தென்பகுதியின் நிலப்பரப்புத் தங்களாச்சேரி வரை விரிவாக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை உறுதிசெய்ய முடிகிறது. மேலும், இவ்விரிவாக்கப் பகுதியே பழைய வடமுட்ட நாட்டுப் பகுதிகளாக இருந்திருக்க வேண்டும் என எண்ணத் துணிவதற்கும் இடமளிக்கிறது. இதேபோன்று சொரிக்காம்பட்டி, சித்தாலை, உரப்பனூர் (பழைய வீரநாராயணன் குளக்கீழ்ப் பகுதி) போன்றவையும் மேற்சுட்டிய பகுதியுடன் இணைக்கப் பட்டிருக்க வேண்டும். ஆக, நாயக்கர் காலத்தில் பழைய தென்கல்லக நாட்டின் தென்பகுதி நிலப்பரப்பில் ஒரு பெரும் விரிவாக்கம் நடந்துள்ளது என்பது ஐயமின்றித் தெளிவாகிறது.

நாடும் நாட்டாரும்

'நாடு' என்பது அடிப்படையில் வேளாண்மையைக் கொண்ட நிலப்பகுதி என்னும் நூலாசிரியரின் (சுப்பராயலு, *1973*) கருத்தை மேற்கோள் காட்டித் தம் அணிந்துரையில் இரா.நாகசாமி 'நாடு' என்னும் சொல் 'நடு' அதாவது நடுதல் / விளைவித்தல் என்னும் சொல்லில் இருந்துதான் தோன்றியிருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளதோடு அதனால்தான், நாடு என்னும் சொல்லுக்கு எதிர்ப்பதமாக 'காடு' என்னும் சொல் வழக்கு இருந்தது எனவும் சுட்டுகிறார். 'வளநாடு' என்ற வருவாய்ப் பிரிவின் பெயரிலேயே 'வளம்' என்ற சிறப்பினம் ஒட்டிக் கொண்டிருப்பதை நோக்கும்போது அதுவும் வேளாண்மையை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட நிலப்பகுதி என்பது தெளிவாகத் தெரிகிறது. அதே போன்று, கூற்றம், கோட்டம், மண்டலம் என அனைத்து வருவாய்ப் பிரிவுகளின் அடிப்படையான பொருளியல் கூறாக விளங்கியது நடுதல் அதாவது விளைவித்தல் என்னும் காரணியே எனில் மிகையன்று. ஆக, எத்தகைய வருவாய்ப் பிரிவாக இருந்தாலும் அக்காலத்தில் வேளாண்மையே நாட்டுப் பொருளாதாரத்தின் முக்கியக் காரணியாக விளங்கியது என்பது தெளிவாகும். தென்கரை மூலநாதர் கோயில் கருவறையின் வடபுற வெளிச்சுவரின் அதிட்டானப் பட்டிகையில் காணப்படும் கோமாறன் விக்கிரமபாண்டியனின் 17ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு. மேற்படி கோயிலில் பிள்ளையார் அருளிச் செய்வதற்கு விக்கிரமசோழபுரத்துப் பிடாகையில் இருந்து நிலம் வழங்கும்போது 'பயிரேறின நிலம்' எனக் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. பாண்டிய நாடு, சோழ நாடு என்பனவற்றில் காணப்படும் 'நாடு' என்னும் சொல், ஓர் அரச மரபு சார்ந்த நிலப்பரப்பினைக் குறித்து நிற்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பல ஊர்கள் சார்ந்த நாடு நிர்வாகப் பிரிவுக்கென்று தனி நிர்வாகம், அதற்கெனத் தலைமையிடம் போன்றவை இருந்துள்ளன. ஊர் சார்ந்த நிர்வாகத்தை 'ஊரவர்' என்று குறிப்பிடும் கல்வெட்டுகள் 'நாடு' சார்ந்த செயல்பாடுகளை 'நாட்டார்' அல்லது 'நாட்டவர்' எனக் குறிக்கின்றன. தென்கல்லக நாட்டின் 'திருக்குறுமுள்ளூர் ஊரவர்', 'வாலந்தூர் ஊரவர்' போன்ற ஊர் சார்ந்த ஊரவர் அமைப்பின் நிர்வாகச் செயல்பாடுகள் இருந்ததையும்

இந்நாட்டின் விக்கிரமங்கலம் ஓர் 'நகரமாக'[27] வணிகர்கள் அங்கம் வகித்த 'நகரத்தார்' என்ற நகர நிர்வாகத்தின்கீழ் இருந்ததையும் காணமுடிகிறது.

சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 9ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (பொ.ஆ. 1260) தேசி பட்டணமான விக்கிரமசோழபுரத்து நகரத்தாரின் செயல்பாடுகளைக் குறிப்பிடுவதோடு 'நகரக் கணக்கு' பற்றியும் குறிப்பிடுகிறது. இந்நகரமான விக்கிரமங்கலம்[28] பல நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் தங்கியிருந்த வணிகத் தலமாதலால் பல வணிகப் பெருவழிகளும் உள்ளூரில் இருந்த முக்கிய சிறுவழிகளும் இணைகின்ற இடத்தில் அமைந்திருந்ததைப் பார்க்கும்போது நகரத்தின் முக்கியத்துவம் நன்கு வெளிப்படுவதை அறிய முடிகிறது. தென்கரை 'பராக்கிரமபாண்டியபுரம்' எனவும், 'குலசேகரபுரம்' எனவும் குறிக்கப்படுவதிலிருந்து அவ்வூர் இடைக்காலத்தில் முக்கிய வியாபார மையமாக இருந்தது என்பது தெரியவருகிறது. தென்பரப்பு நாட்டு இராசேந்திர சோழச் சதுர்வேதிமங்கலம் உத்தமசோழ விண்ணகர எம்பெருமாள் கோயிலில் (இன்று : வீற்றிருந்தபெருமாள் கோயில், பனங்காடி, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்) உள்ள குலசேகர பாண்டியனின் கல்வெட்டு (ஸ்ரீதர், 2005, எ.112) தென் கல்லக நாட்டுக் குலசேகரபுரத்து வியாபாரி பெருஞ்சுவாமி வணிகன் கருணாகர தேவன் தில்லை அழகன் என்பவனைப் பற்றிக் குறிப்பிடுவதிலிருந்து குலசேகரபுரமும் அக்காலத்தில் தென்கல்லக நாட்டில் இருந்த முக்கியமான வணிகத்தலம் என்பது புலப்படுகிறது.

---

[27] கல்வெட்டுகளில் 'மாநகரம்' என மதுரை குறிப்பிடப்படுவதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

[28] இடைக்காலச் சிவன் கோயிலான மதுரோதைய ஈசுவரர் கோயில் இருக்கும் இடத்திற்கும் விக்கிரமங்கலத்திற்கும் இடையே $^3/_4$ கி.மீ. தொலைவு உள்ளது. மேலும், மேற்படி கோயில் இருக்குமிடம் தனி ஊராகக் கோயில்பட்டி என வழங்கிவருகிறது. கல்வெட்டில் கோயில்பட்டி என்ற பெயர் காணப்படவில்லை. கோயிலை அடிப்படையாகக் கொண்டு கோயிலூர் என ஆனையூர் அழைக்கப்பட்டதை ஒரு கல்வெட்டில் காணமுடிகிறது(பா.ஜெயக்குமார், 2008, ப.139).

தென்கரைப் பகுதி அக்காலத்தில் சிவாச்சாரியார்களைக் கொண்ட சைவ மடங்களையும் கொண்டிருந்தது. ஆக, அக்காலத்தில் நாடு என்னும் நிலப்பரப்பு வேளாண்மையோடு மேற்சுட்டிய பல சிறப்புக் கூறுகளைக் கொண்டவையாக இருந்தது என்பதை ஒதுக்கிவிடமுடியாது. தென்கல்லக நாட்டு 'நாட்டவரின்' செயல்பாடுகள் இருந்தமையைப் பல கல்வெட்டுகளில் காணமுடிகிறது. ஒரு கல்வெட்டு 'நாட்டுக் கணக்கில்' பற்றெழுதும்படி குறிப்பிடுவது நாடு தனித்துவம் வாய்ந்த நிர்வாகத்தைப் பெற்றிருந்தது என்பதைப் புலப்படுத்துகிறது. மேலும், சின்னமனூர்ப் பெரிய செப்புப் பட்டயம், புதூர் என்னும் ஊரினைத் தானமாக வழங்கும்போது அதற்கான நான்கெல்லைகளைக் குறிக்க நாட்டார்களும் உடனிருந்தனர் (பாசெப, ப. 145, பாட வரி 167-169). அதாவது "அழநாட்டுணாட்டார் நின்றெல்லை காட்டப் பிடி சூழ்ந்த பெருநான்கெல்லை" எனக் குறிப்பிடுவதிலிருந்து நாட்டார்களின் அரசு நிர்வாகம் சார்ந்த முக்கியத்துவம் தெரிகிறது.

விஜயநகர் மற்றும் நாயக்கர் கால அரசின்கீழ் சீர்மை என்னும் புதிய நிர்வாகப் பிரிவு உருவாக்கப்பட்ட பின்னரும் அதாவது பொ.ஆ. 18-19 ஆம் நூற்றாண்டில்கூடக் குறிப்பாக நாயக்கர் ஆட்சி பாண்டி மண்டலத்தில் முழுமையாக முடிவுற்ற பிறகும்கூட நாட்டார்/நாட்டுக் கணக்கின் செயல்பாடுகள் இருந்துள்ளதைச் சான்றுகள் வாயிலாக அறியமுடிகிறது. சிந்துபட்டிப் பெருமாள் கோயிலின் அருகில் உள்ள ஒரு தனிக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் (சீதாராம் குருமூர்த்தி, 2008, எ.308) 'திடியன் சீர்மை நாட்டார்' என்னும் குறிப்புக் காணப்படுகிறது. நிலம் வழங்கியதற்கான பட்டயம் அளிப்பதற்கு நாட்டார் ஒப்புதல் வழங்கும் நிர்வாகச் செயல்பாட்டை இக்கல்வெட்டில் காணலாம். மேலும், இந்நாட்டார் அமைப்பில் எழுவரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வெழுவருமே நாயக்கர் சமூகம் சார்ந்தவர்கள் என்பது சுட்டத்தக்கது. ஆக, நாயக்கர் கால நாட்டார் அவையில் நாயக்கர் சமூகத்தின் ஆதிக்கம் இருந்துள்ளமை

தெளிவாகப் புலப்படுகிறது.[29] மேலும், சில கல்வெட்டுகளில் 'திடியன் வகையறா ஐந்து கிராமங்கள் நாட்டுக்கணக்கு' எனவும் 'சிந்துபட்டி வகையறா ஐந்து கிராமங்கள் நாட்டுக்கணக்கு' எனவும் குறிப்புகள் காணப்படுகின்றன (சீதாராம் குருமூர்த்தி, 2008, எ.313, 314 மற்றும் 317). இதிலிருந்து நாடு அல்லது சீர்மை நிர்வாகத்தில் ஐந்து கிராமங்கள் சேர்ந்தது ஓர் அலகாக (unit) இருந்திருக்க வேண்டும் என்பதை உணரமுடிகிறது. அதேவேளையில் மற்றொரு கல்வெட்டு (சீதாராம் குருமூர்த்தி, 2008, எ.303) 'பொறுப்புப்பட்டி (பொறுப்பு மேட்டுப்பட்டி) நாட்டாண்மை பெத்திநாயக்கர் மகன் தாசரி நாயக்கர்' எனக் குறிப்பிடுவதிலிருந்து 'ஊர் சார்ந்த நிர்வாகத்தில் 'நாட்டாண்மை' முக்கியத்துவம் பெற்றிருந்ததை அறியலாம்.

பொதுவாகப் பாண்டி நாட்டில் கிடைக்கின்ற கல்வெட்டுகளில் நாடு பற்றிய செயல்பாடுகளை அல்லது செய்திகளை உற்று நோக்கும்போது இடைக்காலத்தில் குறிப்பாகப் பொ.ஆ. 800-1300 வரையிலான காலக்கட்டத்தில் இருந்த நாடுகள் யாவும் ஒரே மாதிரியான தன்மையினதாக இருந்தனவா என்ற வினா எழுகிறது. சின்னமனூர்ச் சிறிய செப்புப் பட்டயத்தில் (பாசெப, ப. 73, பாட வரி 31-33) குறிப்பிடப்படும் தானத்திற்கு ஆணத்தியாக இருந்தவன் பாண்டி நாட்டின் அண்டநாட்டுக் (இன்றைய பழனி, ஒட்டன்சத்திரம் பகுதி) குண்டூர் கூற்றத்துக் குண்டூரின் உத்தரமந்திரியாகிய தாயஞ்சிங்கன் (. . . செய்து குடுத்த மிதற்காணத்தி[ப்] பட்டானண்டனாட்டுக் குண்டூர்க் கூற்றத்துக் குண்டூருத்தர

---

[29] பொ.ஆ. 19 ஆம் நூற்றாண்டு வரை இத்தகைய செல்வாக்குடன் விளங்கிய இச்சமூகம் எவ்வாறு தங்கள் பூமி மற்றும் அரசு சார்ந்த செல்வாக்கை முற்றிலும் இழந்தது என்பது குறித்து ஒரு தனித்துவம் வாய்ந்த பிந்தைய சமூக வரலாற்று ஆய்வாகப் பார்க்கலாம். மேலும், மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ள நாயக்கர் கல்வெட்டு (இகஆ, 1941-42 எ. 283) மதுரை அரசின் நான்கு சீர்மைகளில் இருந்த ரெட்டிகளின் மீதான 'ஜாதி வரி' குறைக்கப்பட்டுள்ளதைத் தெரிவிக்கிறது. நாயக்கர்களைப் போல ரெட்டிகளும் தெலுங்கினைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தபோதும் ரெட்டிகள் மீது நாயக்க அரசு ஜாதி வரி விதித்தது ஏன்? அல்லது சமூகப் படிநிலையைக் காப்பதற்காகவா போன்றவற்றையும் சிந்திக்கலாம்.

மந்திரியாயின தாயன்சிங்கன். . .) என்பதை இங்குக் காட்டாகக் கொள்ளலாம். இதன்படி பார்த்தால் கூற்றம் என்ற வருவாய்ப் பிரிவு நாடு ஆளுகையின் கீழ் இருந்ததையும், உத்திரமந்திரி ஒருவர் இருந்ததையும் இக்கூற்றத்திற்குக் குண்டூர் தலைநகராக இருந்ததையும் அறியமுடிகிறது. தென்கல்லக நாட்டு விக்கிரமசோழபுரத்தில் காணப்படுகின்ற பாண்டிய மன்னன் ஸ்ரீவல்லபனின் கல்வெட்டில்கூடக் கையொப்பம் இட்டவராக அண்டநாட்டுப் பெருமணலூர் மந்திரி மற்றும் உத்தரமந்திரி காட்டப்படுகிறார் (தெஇக 14, எ.262). இது மேற்குறிப்பிடப்பட்டுள்ள அண்டநாடு அல்ல என்பதும் இது மாடக்குளக்கீழ்ப் பகுதியை அடுத்து அமைந்துள்ள நாடு என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டியவையாகும்.

பாண்டி நாட்டில் அக்காலகட்டத்தில் இருந்த பிற நாடுகளில் குறிப்பாகக் தென்கல்லக நாட்டின்கீழ் கூற்றங்கள் ஏதும் இருந்தனவா அல்லது இதற்கெனத் தனியாக முக்கிய மந்திரி இருந்தாரா அல்லது கூற்றத்திற்கே தலைநகர் இருந்தபோது தென்கல்லக நாட்டுக்குத் தலைநகராக எது இருந்தது போன்ற ஐயங்களுக்குத் தென்கல்லகநாடு தொடர்பாக இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுகளில் இருந்து நமக்குத் தெளிவான அல்லது நேரடிச் சான்றுகள் கிடைக்கப்பெறவில்லை. ஆனால், ஆனையூர் ஐராவதேசுவரர் கோயிலில் காணப்படும் கல்வெட்டுகள் சிலவற்றில் பாண்டி நாட்டில் இருந்த பிற நாடுகள் மற்றும் கூற்றங்களுக்கான (பாகனூர்க் கூற்றம், பூங்காநாடு, குடிநாடு, சூரநாடு மற்றும் கருங்குடி நாடு) பங்குப் பகிர்மானங்களைப் பற்றிப் பேசுவதும், அளற்று நாடு, அழநாடு போன்ற பிற நாட்டு அலுவலர்களின் ஆவணங்கள் காணப்படுவதும் நாயக்கர் காலத்தில் ஆனையூர் வட்டாரத் தலைநகராக (தாலுகா) இருந்தமையும் குறிப்பாகத் திருமலைநாயக்கரின் செப்புப் பட்டயத்தில் இம்மன்னன் ஆனையூர்த் தாலுகாவில் தங்கியிருந்தார் என அறியப்படுவதும், ஆங்கிலேயர் கால ஆவணங்களிலும் இப்பகுதி குறித்த செய்திகள் பதிவு செய்யப்படும்போது ஆனையூர் முதன்மையாக அடையாளப்படுத்தப்படுவதும் போன்ற தொடர்ச்சியான செயல்பாடுகளை ஆனையூர் பெற்றிருந்ததைப் பார்க்கும்போது தென்கல்லக நாட்டின் தலைநகராகத் திருக்குறுமுள்ளூர்/ஆனையூர் இருந்திருக்கலாம் என எண்ணத் துணியலாம்.

இயல் - 3

தொன்மைச் சிறப்பு

ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பின் மேம்பட்ட பண்பாட்டுச் சிறப்புகளை வெளிப்படுத்துவதில் அப்பகுதியில் காணப்படும் தொன்மை எச்சங்கள் முதன்மைக் காரணிகளாக விளங்குகின்றன. தென்கல்லக நாட்டுப் பகுதியில் காணப்படும் தொன்மைத் தரவுகள் அந்நிலப்பரப்பின் சிறப்புகளை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. கள ஆய்வில் பெறப்பட்ட முதன்மைச் சான்றுகளின் அடிப்படையில் கற்கால மனிதனின் வருகையோடு இப்பகுதியின் தொன்மைச் சிறப்புத் தொடங்குகிறது.

நுண்கற்காலம்

தென்கல்லக நாட்டின் பல இடங்களில் நுண்கற் கருவிகள் கிடைக்கின்றன (இ2). குறிப்பாக, திடியன் மலை அடிவாரம் (நிஇ, பள 19 மற்றும் 20), விக்கிரமங்கலம் அருகில் பெரிய உண்டாங்கல்லு மலை அடிவாரம் (இ5, நிழ, பள 21), தெப்பத்துப்பட்டி மற்றும் தெற்குமலை அடிவாரம், பி.கன்னியம்பட்டி மலை அடிவாரம் (இ5 நிழ, பள 22) மற்றும் சித்தர்மலை அடிவாரம் எனத் தென்கல்லக நாட்டுப் பகுதியின் மலைசார்ந்த இடங்களில் நுண்கற்கருவிகள் மிகுதியாகக் கிடைக்கின்றன. இக்கருவிகள் தேர்வு செய்யப்பட்ட நேர்த்தியான கல் வகைகளைக் கொண்டு உருவாக்கப் பட்டுள்ளன. குறிப்பாக, குவார்ட்ஸ் (Quartz) என்னும் பளிங்குக்கல் வகை மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவற்றோடு ஜாஸ்பர் (Jasper), சால்சிடோனி (Chalcedony), செர்ட் (Chert) மற்றும் அகேட் (Agate) வகை கற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. திடியன் (இ5, நிழ, பள 20 மற்றும் 23) மற்றும் தெப்பத்துப்பட்டி (இ5, நிழ, பள 24) ஆகிய இடங்களில் குவார்ட்ஸ், செர்ட் மற்றும் ஜாஸ்பர் வகை மூலக் கற்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன.

சுரண்டுவதற்குப் பயன்படுத்தக்கூடிய பல்வேறு வகையான செதில்கள், ஊசிமுனைக் கருவிகள் அல்லது துளைப்பான்கள், அரைவட்ட வடிவம் கொண்ட அதாவது பிறை வடிவிலான தட்டையான கருவிகள், இரண்டு பக்கமும் கூர்விளிம்பு கொண்ட கருவிகள் (blade), அம்புமுனைக் கருவிகள், வெட்டுக் கருவிகள், சிறிய சுரண்டிகள் எனப் பலவகையான கருவிகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். ஓர் அங்குலத்திற்கும் குறைவான அளவுள்ள கருவிகள் மிகுதியாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. இக்கருவிகள் யாவும் தொல்லியல் பார்வையில் 'லெவல்லாய்சியன் நுட்பத்தைக்' (Levalloisean technique) கொண்டு உருவாக்கப்பட்டவையர்கும். பழங்கற்காலத்தின் கடைசிக் காலக்கட்டத்தில் இருந்து இத்தகைய மேம்பட்ட தொழில்நுட்பத்தை மக்கள் கற்கருவிகள் செய்வதற்குப் பயன்படுத்தியுள்ளனர்.

தென்கல்லக நாட்டில் குறிப்பாகத் திடியன் மலைப்பகுதி செர்ட், ஜாஸ்பர், குவார்ட்ஸ் மற்றும் சால்சிடோனி போன்ற அரியவகைக் கற்களைக் கொண்டு நுண்கற் கருவிகளைத் தயாரித்த 'தொழிற்கூட மையமாக' (factory site) இருந்துள்ளது. இங்குக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கற்கருவிகள் திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஒருசில பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கருவிகளோடு ஒத்தவையாகக் காணப்படுவது சிறப்புக்குரியதாகும் (Jain, 1979, p. 87). மேலும் மேற்சுட்டிய மாவட்டங்களில் காணப்படும் 'தேரி' வகை (Teri-sites) இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட நுண்கற்கருவிகளுடன் திடியன் கற்கருவிகளையும் ஒப்பிடலாம்.

இரும்புக் காலம்

நுண்கற்கருவி காலத்திற்குப் பிறகு இந்நிலப் பகுதி இரும்புக் காலப் பண்பாட்டு எச்சங்களை மிகுதியாகக் கொண்டு விளங்குகிறது. இப்பகுதியில், இதுவரை புதிய கற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது சுட்டத்தக்கது. ஆதலால், இந்நிலப்பரப்பில் புதிய கற்காலப் பண்பாடு ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்று தெரிகிறது. இரும்புக் காலத்துக்கு

உரிய கருப்பு-சிவப்பு மற்றும் கருப்பு மண்கலச் சில்லுகள் இப்பகுதியில் பரவலாக அனைத்து இடங்களிலும் கிடைக்கின்றன (இ2). குறிப்பாக, திடியன் (இ5, நிழ, பஎ 25), ஆனையூர், தங்களாச்சேரி, சித்தர்மலை மற்றும் புத்தூர் மலை எனப் பல இடங்களில் இரும்புக்கால மண்கலச் சில்லுகள் கிடைக்கின்றன.

திடியன் மலை அடிவாரப் பகுதியில் கிடைத்துள்ள கருப்பு-சிவப்பு மண்கலச் (Black and Red ware) சில்லுகள் இரண்டில் வெள்ளை வண்ணப் (ரசட் கலவை) பூச்சுடன் (Russet-coated painted pottery) கிடைத்திருப்பது குறிப்பிடத் தக்கது (இ5, நிழ, பஎ 26). இதேபோன்ற மண்கலச் சில்லு ஒன்று திடியன் அருகிலுள்ள அம்பட்டையம்பட்டி என்ற சிற்றூரிலும் கிடைத்திருப்பதைக் கே.வி.இராமன் (IAR 1960-61, p. 19) பதிவு செய்துள்ளார். இவ்வண்ணப் பூச்சுக் கொண்ட மண்கலங்கள் அக்காலத் தொழில்நுட்பத் திறனுக்குச் சான்றுகளாகத் திகழ்வனவற்றுள் மிக முக்கியமான ஒன்றாகும். இவைபோன்ற மண்கலங்கள் தமிழகத்தில் பெரும்பாலான இரும்புக்கால (Iron age) மற்றும் தொடக்ககால வரலாற்று (Early Historical) மக்கள் வாழ்ந்த பகுதிகளில் மேற்கொள்ளப் பட்டுள்ள அகழாய்வுகளில் கிடைத்துள்ளன. இத்தகைய வண்ணப் பூச்சுக் கொண்ட மண்கலங்கள் ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சென்னிமலைக்கு அருகில் நொய்யல் ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள சங்ககால வாழ்விடமான கொடுமணலில் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை மேற்கொண்ட அகழாய்வுகளில் மிகுதியாகக் கிடைத்துள்ளன.[1]

---

[1] ஆய்வாளர், கொடுமணல் அகழாய்வுகள் முழுவதும் பங்குபெற்றவர். இதுவரை கொங்குப் பகுதியில் மட்டும் கிடைத்துவந்த இம்மண்கலம் முதல்முறையாக மத்திய தொல்லியல் துறை சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகில் கீழடிப்பள்ளிச்சந்தைப் புதூரில் மேற்கொண்ட அகழாய்வில் கிடைத்துள்ளதாக அதன் அகழ்வாளர் எம்.ராஜேஷ் தெரிவித்திருப்பது (தி இந்து, 26.7.2015) சரியான தகவல் அன்று என்பது இங்குச் சுட்டப்படுகிறது.

தென்கல்லக நாட்டுப் பகுதியில் இரும்புக்காலப் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றான முதுமக்கள் 'தாழி' வகை ஈமச்சின்னங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஏற்கனவே, ஆய்வாளரின் கள ஆய்வில் புத்தூர் மலையின் அடிவாரத்தில் தாழிகள் மிகுதியாகக் கண்டறியப்பட்டுள்ளதோடு அதனுள் கருப்பு-சிவப்பு மற்றும் கருப்பு மண்கலங்கள் இருந்தமையும் வெளிக்கொணரப் பட்டது (ஜெயக்குமார், 2008, பக். 16-17). இவை பெரும்பாலும் குடுவைகளும், குவளைகளும், கிண்ணங்களுமாகும். தாழியினுள் காணப்படும் மண் கலங்களில் சில இரும்புப் பொருள்களும் கசடுகளும் இருந்ததோடு ஒரு மண் குடுவையில் உமி இருந்தமையும் அறியப்பட்டது. புத்தூர் மலைக்கு அருகிலுள்ள திடியன் மலை அடிவாரத்தில் இரும்பு மூலப்பொருள்களும் கசடுகளும் பெருமளவில் காணப்படுகின்றன (இ5, நிழ, பள 27). இது, இப்பகுதி மக்கள் இரும்புக் காலத்தில் இரும்பு உலோகப் பொருள்களை மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளனர் என்பதோடு வேளாண்மையிலும் ஈடுபட்டமை புலப்படுகிறது. மேலும், திடியனில் இரும்புக்கால மக்கள் வீடுகளின் தரைகளை மெழுகுவதற்குப் பயன்படுத்திய கற்கள் (இ5, நிழ, பள 28). மண்கலத் தெல்லுகள் (Hop-scotches) போன்றவையும் (இ5, நிழ, பள 29) சேகரிக்கப்பட்டுள்ளன. இவை அம்மக்களின் வாழ்க்கை முறைகளை அறிவதற்கு உதவுகின்றன. இங்கு மேலும் இரண்டு வட்டச் சில்லுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (இ5, நிழ, பள 30). கருப்பு-சிவப்பு மண்கலத்தில் உருவாக்கப்பட்டுள்ள இவ்வட்டச் சில்லுகளில் ஒன்று 2.5 கிராமும் மற்றொன்று 1.5 கிராமும் எடை கொண்டதாகும். இச்சில்லுகளை அக்காலத்தில் எடைக் கற்களாகவும் பயன்படுத்தியிருக்கலாம்.

பெரும்பாலான இரும்புக்கால வாழ்விடப் பகுதிகள் இன்றும் மேடாகக் காட்சியளிப்பதைக் காணலாம். தென்கல்லக நாட்டின் ஊரிருக்கையாக நாயக்கர் காலத்தில் சேர்க்கப்பட்ட திருமங்கலம் வட்டத்திலுள்ள தங்களாச்சேரி பழங்காலத்தில் பெரிய பரப்பளவைக் கொண்ட இரும்புக்கால ஊரிருக்கையாக

இருந்தது என்பதற்கு அங்குள்ள மண்மேடு சான்றாக விளங்குகிறது (இ5, நிழ பள 31). மேலும், இம்மண்மேட்டில் கருப்பு-சிவப்பு மண்கலச் சில்லுகளும், வட்டச் சில்லுகளும் (Hop-scotches), சுடுமண் அணிகலன்களும் (teracotta beads) கிடைக்கப்பெற்றன (இ5, நிழ, . பள 32). இத்தகைய இரும்புக்கால வாழ்விடப் பகுதிகள் தொடர்ந்து இடைக்கால மக்களாலும் பின்னர், விஜயநகர்-நாயக்கர் கால மக்களாலும் தங்கள் வாழ்விடங்களாகவும் மாற்றம் பெற்றன என்பது களஆய்வின் மூலமாக அறியப்பட்டது. குறிப்பாக, பெருங் கற்கால வாழ்விடப் பகுதியான திடியன் (இ5, நிழ, பள 33) மற்றும் மலைப்பட்டி (இ5, நிழ பள 34) போன்ற இடங்களில் இடைக்கால மக்கள் பயன்படுத்திய மண்கல வட்டச் சில்லுகளும் சித்தாலை மற்றும் சொரிக்காம்பட்டி போன்ற இடங்களில் முறையே இடைக்காலக் கோயிலின் சிதைவுற்ற கட்டுமானமும் கடவுளர் சிற்பங்களும் (இ5, நிழ, பள 35) மற்றும் நாயக்கர் காலக் கோயில் கட்டுமானமும் (இ5 நிழ, பள 36) அக்கோயில் தொடர்பான நாயக்கர் காலக் கல்வெட்டும் (இ5, நிழ பள 37 மற்றும் இ4, எ.16) கிடைத்துள்ளமை மேற்சுட்டிய கருத்துக்கு மேலும் வலுசேர்க்கிறது.

பாறை ஓவியங்கள்

உலகளவில், தொல்லியல் எச்சங்களில், வரலாற்றுக் காலத்திற்கு (Historical period) முந்தைய காலத்தைச் சேர்ந்த பாறை ஓவியங்கள் (Pre-Historic Rock Paintings) குறிப்பிடத்தக்க இடத்தை அடைகின்றன. அக்காலப் பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்தக்கூடிய பாறை ஓவியங்கள் தமிழகத்தில் இதுவரை ஐம்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் தென்பகுதியைக் காட்டிலும் வடபகுதியில் பாறை ஓவியங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. குறிப்பாக, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரிப் பகுதிகளில் மிகுதியான பாறை ஓவியங்கள் பல ஆய்வாளர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும், பாண்டி நாட்டுப் பகுதியிலும் பாறை ஓவியங்கள் சில இடங்களில் காணப்படுகின்றன. தென்கல்லக நாட்டின்

சித்தர்மலை என்னும் சித்த மகாலிங்க மலையின் கிழக்குப் பக்க அடிவாரத்தில் கலியாணிபட்டி விளக்குக்கும் மேட்டுப்பட்டிக்கும் (அணைப்பட்டிக்கு அருகில் உள்ளது) இடையில் சாலையின் ஓரமாக ஸ்ரீசின்னவீரம்மாள் கோயிலுக்கு அருகில் ஒரு சமணக் குகைத்தலம் உள்ளது (இ5, நிழ, பள 38). இங்குப் பாறையின் விதானத்தில் வெண்மை வண்ணத்தில் ஓவியங்கள் பல தீட்டப்பட்டுள்ளன (இ5, நிழ, பள 38.1). அவற்றில் சில : காளைமாட்டின் மீது மனிதன் செல்வதுபோல (இ5, நிழ, பள. 39), மனிதன் ஒரு விலங்கின் மீது அமர்ந்து செல்வதுபோல (இ5, நிழ, பள. 40), கோபுரம் அல்லது ஏணியின் கீழ் மனிதர்கள் நிற்பதுபோல (இ5, நிழ, பள. 41), குதிரையின் மீது மனிதன் நின்றுகொண்டு செல்வது போல (இ5, நிழ, பள. 42), ஆண், பெண் உருவங்களின் கூட்டம் (இ5, நிழ, பள. 43) என அக்காலப் பண்பாட்டினை வெளிக் கொணரக்கூடிய வகையில் ஓவியங்கள் அமைந்துள்ளமை சிறப்புக்குரியது. ஆர்.வெங்கட்ராமன் (1983) கட்டுரையினை மேற்கோள் காட்டி இங்குக் குதிரையைச் செலுத்துவதுபோலச் செந்நிறத்தில் ஓவியம் ஒன்று இருப்பதாக இரா.பவுன்துரை (1986, பக். 84-85) குறிப்பிடுகிறார் (இ5, நிழ, பள. 44). ஆனால் இது போன்ற ஓவியம் அங்கு இப்போது காணப்படவில்லை என்பதை இங்குப் பதிவு செய்ய வேண்டும். ஒருவேளை ஓவியம் இருந்து பின்னர் அழிந்திருக்கலாம். எனினும், குதிரையின் மீது நின்றுகொண்டு இடக் கையால் குதிரையின் கடிவாளக் கயிற்றையும், வலக் கையில் ஏதோ ஓர் ஆயுதம் அல்லது கேடயத்தையும் பிடித்துக் கொண்டு செல்வது போல் உள்ள வெள்ளைநிற ஓவியம் காணப்படுவது மேலே குறிப்பிடப்பட்டுள்ளது (இ5, நிழ, பள. 42). புதிய கற்காலத்திற்கும் இரும்புக் காலத்தின் தொடக்கநிலைக் காலத்திற்கும்' இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த (பொ.ஆ.மு. 5000-1000) இப்பாறை ஓவியங்கள் பாண்டி நாட்டின் தலைநகரான மதுரைக்கு அருகில் நாகமலைக்கு (மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு) எதிரே முத்துப்பட்டியின் கரடிப்பட்டி மலையில் உள்ள சமணக் குகையிலும் ('நாகப்பேரூர்' என்னும் பெயர் இங்குள்ள பழந்தமிழ்க் கல்வெட்டில்

காணப்படுகிறது), அழகர்மலை கிடாரிப்பட்டி சமணக் குகையிலும் மேற்சுட்டிய ஓவியங்கள் காணப்படுவதும் இங்குச் சுட்டத்தக்கதாகும். மேலும், மதுரை தேசிய நெடுஞ்சாலையில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு அடுத்ததாக உள்ள கொங்கர் புளியங்குளம் மலையில் அமைந்துள்ள சமணக் குகைத்தலத்தின் விதானப் பகுதியிலும் வெள்ளை மற்றும் சிவப்பு நிற ஓவியங்கள் இருப்பது அண்மையில் வெளிக்கொணரப்பட்டுள்ளது (ராம்ஜி, 2010, பக். 161-162). இங்கும் சித்தர்மலைக் குகைத் தலத்தில் காணப்படுவது போல மனிதன், விலங்கு, விலங்கின் மீது அமர்ந்து செல்லும் மனிதன், ஏணி போன்ற உருவங்கள் காணப்படுவது ஒப்புநோக்கத்தக்கதாகும். மேற்சுட்டிய கொங்கர்புளியங்குளம் மற்றும் முத்துப்பட்டி ஆகியன தென்கல்லக நாட்டின் எல்லையில் அமைந்துள்ள பகுதிகள் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. மேலும், இக்குகைத்தலங்கள் சமணர் வசித்த இடங்கள் என்றாலும்கூட அவை ஏற்கனவே புதிய கற்கால மற்றும் இரும்புக்கால மக்கள் வாழ்ந்து விட்டுச்சென்ற இடங்கள் என்பதற்கு இப்பாறை ஓவியங்கள் சான்றாகக் காட்சியளிக்கின்றன.

சமணர் குகைகள்

பாண்டி நாடு சமணத் தொடர்புக்குச் சிறப்புப் பெற்றது என்பது யாவரும் அறிந்தது. குறிப்பாகத் தென்கல்லகநாடு சமண எச்சங்களை மிகுதியாகக் கொண்ட பகுதியாகும். இப்பகுதியின் மிகப் பழமையான சமணர் குகைத் தலமாகத் திடியன் மலையில் உள்ள குகையைக் கருதலாம் (இ5, நிழ, பஎ. 45). கற்படுக்கையுடன் கூடிய இக்குகைத் தலத்தின் முன்பாகப் பாறையில் அவர்கள் பயன்படுத்திய சிறுகுழியும் (சிறு உரல் அல்லது பெரிய கிண்ணம் போன்ற அமைப்புடையது) காணப்படுகிறது. இச்சமணக் குகைத்தலம் குறித்து இதுவரை எந்த ஆய்வாளரும் முக்கியமாகப் பாண்டி நாட்டுச் சமணம் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொண்டவர்கள்கூடக் குறிப்பிடவில்லை. ஒருவேளை இக்குகைத் தலத்தில் பழந்தமிழ் எழுத்துகள் காணப்படாதது

அல்லது இக்குகைத்தலத்திற்குச் சென்றடைவதில் உள்ள கடினம் காரணமாக இருக்கலாம்.

தென்கல்லக நாட்டுப் பகுதியில் உள்ள மற்றொரு முக்கியமான சமணக் குகைத்தலம் சித்தமலை எனப்படும் சித்தமகாலிங்க மலையில் உள்ள 'பஞ்ச பாண்டவர் படுக்கை' ஆகும் (இ5, நிழ, பஎ 46 மற்றும் 47). பெரியதாகவும், உட்பக்கம் குடையப்பட்டு நீண்டு செல்லும் அறையையும் கொண்டு மிகப் பாதுகாப்புடன் நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ள இக்குகைத் தலத்தின் புருவத்திலும் கற்படுக்கைகளின் தலைப்பகுதிகளிலும் பொ.ஆ.மு. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த் பழந்தமிழ் எழுத்துகள் காணப்படுகின்றன.[2] இங்குள்ள ஒரு கற்படுக்கையில் 'திடி இல் அதன்' (இ5, நிழ, பஎ 48) என எழுதப்பட்டுள்ளது. 'திடிஇல்' என்பதை 'திடியன்' எனப் பொருள் கொண்டால் இச்சமணப் படுக்கைக்கு உரியவன் திடியனைச் சேர்ந்தவன் (அதன்) எனக் கொள்ளலாம். அவ்வாறெனில், இச்சமணன் மேலே குறிப்பிடப்பட்டுள்ள திடியன் சமணக் குகையைச் சேர்ந்தவனாக இருக்கலாம். இங்குள்ள மற்றொரு படுக்கையில் 'குவிர அந்தைவேள் அதன்' (இ5, நிழ, பஎ 49) எனவும் மற்றொன்றில் 'அந்தை இரவாதன்' எனவும் எழுதப்பட்டுள்ளது (இ5, நிழ, பஎ. 50). இதுபோல மேலும் சில கற்படுக்கைகளின் தலைப்பகுதிகளில் எழுத்துப் பொறிப்புகள் இங்குக் காணப்படுவது சிறப்புக்குரியதாகும். இவ்வாறான பெயர்கள் கொடுமணல் அகழாய்வில் மண்கலங்களில் எழுதப்பட்டுள்ளதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

---

[2] இந்த ஆய்வின் நோக்கம் தென்கல்லக நாட்டின் ஒட்டுமொத்தச் சிறப்பினை வெளிக் கொணர்வதாகும். இது பழந்தமிழ் (தமிழ் பிராமி) எழுத்துகளின் ஆய்வன்று. பாண்டி நாட்டின் சமணக் குகைகளில் காணப்படும் பழந்தமிழ் எழுத்துகள் பற்றிப் பல ஆய்வாளர்கள் பல்வேறு காலக்கட்டங்களில் தங்கள் பங்களிப்பினைச் செய்துள்ளனர். ஒட்டுமொத்த தொகுப்பான ஐராவதம் மகாதேவனின் 'Early Tamil Epigraphy' *(2002)* என்ற நூலில் விளக்கமாகக் காணலாம்.

இப்பெயர்கள் சங்ககால இலக்கியம், மொழியியல் மற்றும் மொழிக் கலப்புப் போன்ற ஆய்வுகளுக்குச் சான்றுகளாகப் பெரிதும் உதவும். மேலும், இக்குகையின் முகப்புப் புருவத்தில் 'அமணன் மதிரை அத்திரன் உறை உதயனஸ' என எழுதப்பட்டுள்ளது. இது மதுரை 'மதிரை' எனவும் அவ்வூரைச் சேர்ந்த சமணன் அத்திரன் எனவும் குறிப்பிடுகிறது. அழகர்மலைக் குகையில் உள்ள கற்படுக்கையில் மதுரை என்பது 'மதிர' எனக் குறிப்பிடப் பட்டுள்ளதையும் இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு எதிரிலுள்ள வடபழஞ்சிக்கு அருகில் முத்துப்பட்டி-கரடிப்பட்டி மலையில் உள்ள குகைத் தலத்தில் ஒரு கற்படுக்கையில் பழந்தமிழ் எழுத்தில் காணப்படும் 'திடிக்காத்தான்' என்ற பெயரில் உள்ள 'திடி' என்பதைத் திடியனோடு அடையாளப்படுத்துவதையும் (சாந்தலிங்கம், 2013, ப.53) கொண்டு திடியன் சமணத்தின் மிக முக்கியமான மற்றும் பழமையான பள்ளி என முடிவு செய்யலாம்.

திடியனில் உள்ளது போன்று சித்தர்மலை குகைத் தலத்திலும் சிறு உரல் (அல்லது பெரிய கிண்ணம்) போன்ற அமைப்புகள் பாறையில் காணப்படுகின்றன. இந்த உரல்கள் மூலிகை அரைக்கப் பயன்படுத்தப் பட்டனவாகவும் இதன் மூலம் சமணர்கள் இப்பகுதி மக்களுக்குச் சித்தவைத்தியம் செய்ததாகவும் இதனால் இம்மலைக்கும் 'சித்தர்மலை' எனப் பெயர் வழங்கப் பட்டதாகவும் நம்பப்படுகிறது. எனினும், இங்குள்ள சிவன் கோயிலில் காணப்படும் பொ.ஆ. 1488 ஆம் ஆண்டுக் கல்வெட்டில் 'சித்தமலை உடையார்' என்னும் பெயர் காணப்படுகிறது. ஆக, 'சிவனே சித்தர்' என்பதால் இம்மலைக்கு மேற்சுட்டிய பெயர் வழங்கப்பட்டிருக்கலாம். நீண்ட சடைகளுடன் குளிக்காத மேனியுடன் குன்றுகளிலும் மலைகளிலும் வாழ்ந்தவர்கள் சித்தர்கள். சமணர்களும் இதேபோன்ற வாழ்க்கை முறையைக் கொண்டிருந்ததால் சித்தர்களாகப் பாவிக்கப்பட்டதன் அடிப்படையும் இப்பெயர் வழக்கிற்குக் காரணமாக இருக்கலாம்.

நீடிய சடையோடு ஆடாமேனிக்
குன்றுறை தவசியர் போல

என்னும் நற்றிணைக் (பாடல் 141) குறிப்பிலிருந்து இவர்களின் வாழ்க்கைமுறை வெளிப்படுகிறது. சங்க இலக்கியங்களில் சமணர்கள் பற்றிய பல குறிப்புகள் காணப்பட்டாலும் மதுரைக்காஞ்சி வரிகள் (475-488) சமணர்களைப் பற்றிச் சிறப்பாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. இவையாவும் சமணர்கள் அக்காலத்தில் சிறப்புக்குரியவர்களாக முக்கியத்துவம் பெற்றிருந்தனர் என்பதை வெளிப்படுத்துகின்றன.

இவர்கள் வசித்த குகைக்குள் மழைநீர் உட்புகாமல் விளிம்பு வழியாகப் பாறையின் வெளிப்பகுதியிலேயே சென்றடையும்படி செதுக்கப்பட்டுள்ள புருவ அமைப்பும், அவர்களின் வழவழப்பான கற்படுக்கைகளும் அப்படுக்கைகளுக்குள் இயற்கையாக மலையில் ஊரும் சுனைநீர் செல்லாமல் இருப்பதற்காகச் சிறிய வாய்க்கால் போன்ற அமைப்பும் அக்காலத் தொழில் நுட்பத்திற்குச் சிறப்புச் சேர்ப்பவையாகும். மேலும், வசிப்பதற்கு மிக இன்றியமையாத் தேவையான தண்ணீருக்காகத் தனியாகப் பாறையைக் குடைந்து தொட்டி போன்ற அமைப்பில் நீரூற்று அமைக்கப்பட்டுள்ளது (இ5, நிழ, பஎ 51). இந்நீரூற்றை இன்றைய மக்கள் 'யானைப் பள்ளம்' எனச் சுட்டுகின்றனர். இந்நீரூற்றுப் பள்ளம் சமணர்களின் வசிப்பிடமான குகைக்குச் சற்றுத் தொலைவில் அமைக்கப்பட்டிருப்பது நோக்கத்தக்கதாகும். விலங்குகளிடம் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே நீரூற்றை சற்றுத் தொலைவில் அமைக்கும் வழக்கம் இருந்திருக்கலாம். பொதுவாக பாண்டி நாட்டுப் பகுதியில் காணப்படும் அனைத்து குகைத் தலங்களிலுமே இம்முறையே பின்பற்றப்பட்டிருப்பதும் மேற்சுட்டிய கருத்துக்கு வலு

சேர்ப்பதாக அமைகிறது. இந்நீரூற்றில் எப்பொழுதுமே தண்ணீர் வற்றாமல் இருப்பதைக் காணமுடிகிறது.[3]

தென்கல்லக நாட்டின் மற்றொரு முக்கியமான சமணக் குகைத்தலம் விக்கிரமங்கலம் பேருந்து நிலையத்தில் இருந்து, செக்கானூரணி செல்லும் வழித்தடத்தில் 1.5 கி.மீ. தொலைவில் வலப் பக்கம் அமைந்துள்ள பெரிய உண்டாங்கல்லு மலையில் (இ5, நிழ, பள 52) அமைந்துள்ள குகைத்தலமாகும் (இ5, நிழ, பள 53). இக்குகைத் தலத்திலும் ஆறு பழந்தமிழ்க் கல்வெட்டுகள் (பொ.ஆ.மு. 3ஆம் நூ.) காணப்படுகின்றன. இவற்றில் மூன்று கல்வெட்டுகள் குகையின் நெற்றியிலும் மற்ற மூன்று கல்வெட்டுகள் கற்படுக்கையிலும் எழுதப்பட்டுள்ளன. குகையின் நெற்றியில் எழுதப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு 'எம் ஊர் சிழிவன் அதன்' என்பதாகும் (இ5, நிழ, பள 54). இதற்கு, எமது ஊரைச் சேர்ந்த சிழிவன் ஆதன் கொடுத்தது (கொடை) என்பது பொருளாகும். அரிட்டாபட்டி கல்வெட்டு ஒன்றிலும் 'சிழிவன்' என்ற பெயர் காணப்படுவது இங்குச் சுட்டத்தக்கதாகும். சிழிவன் என்பது 'செழியன்' என்பதன் சிதைந்த வடிவமாகக் கொள்ளலாம் (சாந்தலிங்கம், 2015, பக். 28-29). செழியன் என்பது பாண்டியரின் மரபுக்குரிய சிறப்புப் பெயராகும். இக்குகைத்தலத்திற்கு அருகிலும் 'யானைப் பள்ளம்' என்னும் வற்றாத நீரூற்று (இ5, நிழ, பள 55) இருப்பது நோக்கத்தக்கதாகும். இங்கும் சித்தர் மலையிலும் உள்ள நீரூற்றுகளின் தோற்றம் யானையின் உருவத்தை ஒத்ததாக இருப்பதால் யானைப் பள்ளம் எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

இம்மலையின் பின்பக்கம் மேற்படி வழித்தடத்தினை ஒட்டிச் சின்ன உண்டாங்கல்லு மலையில் 'ராக்கிப் பொடவு' என்னும் குகைத்தலம் உள்ளது (இ5, நிழ, பள 56). இதன் புருவத்தில் பழந்தமிழ் எழுத்தில் (பொ.ஆ.மு. 3ஆம் நூ.) 'வேம்பற் ஊர் பேர் அய்அம் சேதவர்' என எழுதப்பட்டுள்ளது (இ5, நிழ,

---

[3] கோடைக் காலத்தில் களஆய்வு மேற்கொண்டபோது சித்தர்மலை யானைப் பள்ளத்தில் நீர் வற்றாமல் இருந்ததைப் பார்க்க முடிந்தது.

பஎ57). 'பேரயம்' அதாவது இங்குள்ள பெரியகுளம் அல்லது நீரூற்றினை வேம்பற்றூரைச் சேர்ந்தவர்கள் செய்து கொடுத்தார்கள் என்பது மேற்சுட்டிய கல்வெட்டின் பொருளாகும். தென்கல்லக நாட்டு குகைத் தலங்களில் காணப்படும் அனைத்து எழுத்துப் பொறிப்புகளும் தொன்மை நிலையின் முதல் கட்டத்தைச் சேர்ந்தவை என்பது சிறப்புக்குரியது (Mahadevan, 2002, pp. 97-98). சின்ன உண்டாங்கல்லு மலைக்கு அருகில் ஒரு குகைத்தலம் முருகன் குகைக் கோயிலாக (இ5, நிழ, பஎ 58) அடையாளப்படுத்தப்படுகிறது. ஆனால், முருகனுக்கு உரிய அடையாளம் எதுவும் இங்குள்ள சிற்பத்தில் இல்லை என்பதும் அச்சிற்பம் சமணத் தீர்த்தங்கரர் சிற்பம் என்பதும் களஆய்வில் அறியப்பட்ட து.

தென்கல்லக நாட்டுக் குகைத் தலங்களை மதுரையைச் சுற்றியுள்ள சமணக் குகைத் தலங்களோடு ஒப்பீடு செய்தால் கீழவளவுக்கு அருகில் அம்மன் கோயில்பட்டிக்கும் ரெங்கசாமிபுரத்திற்கும் இடையில் உள்ள மலையில் காணப்படும் இரு குகைத்தலங்களே பெரிய குகைத்தலமாக அதாவது பெரிய பள்ளியாக இருந்தமை தெரியவருகிறது (இ5, நிழ. பஎ 59 மற்றும் 60). மலையின் மேலுள்ள குகைத்தலம் மலையடிவாரத்தில் உள்ள குகைத் தலத்தைக் காட்டிலும் வேலைப்பாடு மிகுந்ததாக அதேவேளையில் வேறு எந்த சமணப் பள்ளியும் இதன் அழகுக்கு இணையாகாதவாறு உள்ளது. ஒவ்வொரு குகைத்தலத்துக்கும் தனித்தனி நீரூற்றுகள் பாறையில் தோண்டப்பட்டுள்ளன. குறிப்பாக, இச்சமணப்பள்ளியில் நூற்றுக்கும் மேற்பட்ட சமணர்கள் தங்கியிருக்க வாய்ப்புள்ளதை அப்பள்ளிகளின் தோற்றம் உணர்த்துகிறது. எனினும், மதுரை மாவட்டத்தைச் சுற்றியுள்ள பகுதியில் காணப்படும் சமணப் பள்ளிகளில் மிகவும் உயரமான இடத்தில் அமைக்கப்பட்டுள்ள பள்ளிகள் தென்கல்லக நாட்டில் உள்ள சித்தர்மலை மற்றும் பெரிய உண்டாங்கல்லுமலை (விக்கிரமங்கலம் அருகில்) ஆகிய இடங்களில் அமைந்துள்ளவையேயாகும். மேலும், எளிதில் சென்றடைய முடியாதபடியும் அமைக்கப்பட்டுள்ளன.

சித்தர்மலைச் சமணப்பள்ளி சுமார் 65மீ. உயரத்திலும் பெரிய உண்டாங்கல்லுமலைச் சமணப்பள்ளி 20மீ. உயரத்திலும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். திடியன்மலைச் சமணக் குகைத் தலமும் மிக உயரமான இடத்தில் செங்குத்தான பாறையில் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றை நோக்கும்போது பாண்டிய நாட்டுப் பகுதியில் தோன்றிய சமணப் பள்ளிகளில் தொன்மையானவை முறையே மேற்சுட்டிய திடியன்மலை, சித்தர்மலை மற்றும் பெரிய உண்டாங்கல்லுமலைச் சமணப் பள்ளிகளே என்பதில் ஐயமில்லை.

பாண்டி நாட்டில் பொ.ஆ.மு.3ஆம் நூ. முதல் பொ.ஆ.3ஆம் நூ. வரை அதாவது சங்க காலத்தின் உச்சநிலைக் காலத்தில் செழிப்புடன் விளங்கிய சமணம் பின்னர் களப்பிரர் ஆட்சிக்குப் பிறகு குறிப்பாகப் பக்தி இயக்கக் காலத்தில் திருஞானசம்பந்தர் மதுரையில் ஆற்றிய சமயப் பணிகளினால் மக்களின், மன்னர்களின் செல்வாக்கை இழந்தது எனலாம். எனினும், பாண்டி நாட்டுப் பகுதியில் சமணம் மீண்டும் (பொ.ஆ. 9ஆம் நூ. முதல் 11 ஆம்நூ. வரை) சிறப்பாகச் செயல்பட்டுள்ளமையைப் பல்வேறு சமண எச்சங்கள் வாயிலாக அறியமுடிகிறது. இத்தகைய மீட்சிக்கு வித்திட்டவர், தமிழகமெங்கும் பயணம் செய்து மக்களின் நன்மதிப்பைப் பெற்ற சமணத் துறவி அச்சணந்தி (பொ.ஆ. 9ஆம் நூ.) ஆவார். திருத்தக்கத்தேவர் அருளிய சீவகசிந்தாமணியின் நாயகன் சீவகனின் ஆசிரியராக அச்சணந்தி குறிப்பிடப்படுவதும் சுட்டத்தக்கதாகும். இவர் காலத்தில் பாண்டி நாட்டின் அனைத்துச் சமணத் தலங்களிலும் திருவுருவங்கள் எழுப்பப்பட்டன. இதுபோன்று அமைக்கப்பட்ட ஒன்றுதான் மேற்சுட்டிய சின்ன உண்டாங்கல்லு மலையில் இன்று முருகன் அல்லது பழனியாண்டியாக மாற்றம் பெற்றுள்ள சமணத் தலமாகும். மேலும், தென்கல்லக நாட்டுப் பகுதியான உசிலம்பட்டி வட்டம், மலைப்பட்டிக்கு தெற்கில் 1கி.மீ. தொலைவில் கருப்புசாமிக்

கோயிலுக்கு மேற்கில் புத்தூர் மலையடிவாரத்தில்[4] (உ.முத்துராமலிங்க தேவர் கல்லூரிக்கு எதிரில் தென்திசை நோக்கி நேராக 3கி.மீ. தொலைவு நடந்து சென்றால் இவ்விடத்தைச் சென்றடையலாம்) உள்ள குகைத் தலத்தில் ஒரு பெரிய கல்லில் நின்ற நிலையில் ஆதிநாதர், அமர்ந்தநிலையில் பார்சுவநாதர், மகாவீரர் மற்றும் பாகுபலி ஆகியோரின் புடைப்புச் சிற்பங்கள் நாகக் குடையுடன் வடிக்கப்பட்டுள்ளன (இ5, நிழ, பஎ 67). இது, இடைக்காலத் தமிழகத்தில் அல்லது பிற்காலப் பாண்டியர் காலத்தில் சமணம் மக்களின் ஆதரவுடன் தென்கல்லக நாட்டுப் பகுதியில் சிறப்புற்றிருந்தது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. பிற்காலத்தில், மக்கள் மேற்சுட்டிய திருவுருவங்களின் நெற்றியில் வைணவக் குறியீடுகளைத் தீட்டி வைணவக் கடவுளர்களாக மாற்ற முயன்றுள்ளனர். மேலும், பார்சுவநாதருக்கும் மகாவீரருக்கும் இடையில் மிகவும் பிற்காலத்திய எழுத்துப் பொறிப்பும் தெளிவற்ற நிலையில் காணப்படுகிறது. இதிலுள்ள வாசகங்களில் 'கல்லழகர்' (கள்ளழகர் என்பதன் திரிபு) மற்றும் 'பிறம்மா' போன்ற பெயர்கள் படிக்கும்படியாக உள்ளன. இதனைப் பிற்காலத்தில் இப்பகுதியில் ஏற்பட்ட சமயப் பூசலின் தாக்கமாகக் கொள்ளலாம்.

திருக்கோயில்களும் வரலாறும்

தமிழர்களின் சமயம் சார்ந்த பண்பாட்டுத் தலமாகத் திருக்கோயில்கள் விளங்கின. சமணர் சிறப்புக் குன்றி நாயன்மார் மற்றும் ஆழ்வார்களினால் பக்தி இயக்கம் தோன்றிய பிறகு திருக்கோயில்களின் எண்ணிக்கையும் பெருகியதாகக் கொள்ளலாம். தென்கல்லக நாட்டிலும் பல கற்கோயில்கள் பாண்டியர் காலம் முதல் நாயக்கர் காலம் வரை எழுப்பப்பட்டுள்ளமையைக் (இ3) கல்வெட்டு மற்றும் கட்டட மற்றும் சிற்பக் கலை வாயிலாக அறியமுடிகிறது. ஒவ்வொரு கோயிலும் ஒவ்வொரு வகைப்பாட்டில் சிறப்புகளைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கோயில்களில் பல பாண்டிய மன்னர்களால் எழுப்பப்-

[4] மலையடிவாரத்தில் இருந்து 15 நிமிடத்தில் இக்குகைத் தலத்தைச் சென்றடையலாம்.

பட்டுள்ளபோதும், மகாமண்டபம் மற்றும் முகமண்டபம் போன்ற கட்டுமானங்கள் சோழர் மற்றும் நாயக்கர் காலத்தில் விரிவாக்கம் பெற்றுள்ளமையையும் அறியமுடிகிறது. இன்று ஒருசில கோயில்கள் ஓரளவு வழிபாட்டில் இருந்து வருகின்றன. சில கோயில்கள் முற்றிலும் வழிபாடின்றி உள்ளன. சில கோயில்கள் முற்றிலும் அழிக்கப்பட்டு ஒருசில எஞ்சிய எச்சங்களுடன் தொன்மைச் சிறப்பினை மட்டும் காட்டி நிற்பதைப் பார்க்க முடிகிறது. இதற்குக் காட்டாகப் பாண்டியர் மற்றும் நாயக்கர் காலத்தைச் சேர்ந்த முறையே குன்னவராயன் கோட்டை மற்றும் தொட்டப்ப நாயக்கனூர் கோயில்களைக் குறிப்பிடலாம். மேலும், தென்கல்லக நாட்டுப் பகுதியில் காணப்படும் பழமையான கோயில்கள் யாவுமே சிவன் கோயில்களாகும். ஆக, அக்கால அரசுகளின் பாதுகாப்பில் இருந்த சைவக் கோயில்கள் பின்னாள் எப்படித் தங்கள் செல்வாக்கினை இழந்தன என்பது தனி ஆய்வுக் களமாகும்.

தென்கல்லக நாட்டில் காணப்படுகின்ற பழமையான கோயில்களில் காலத்தால் முந்தையதாகக் காணப்படுவது தென்கரை மூலநாதர் கோயிலும் (இ5, நிழ, பள 62) ஆனையூர் ஐராவதேசுவரர் கோயிலுமாகும் (இ5, நிழ, பள 63 மற்றும் 64). இப்பகுதியில் இவ்விரண்டு கோயில்களும் சமகாலத்தில் சிறப்புற்றிருந்ததைச் சான்றுகளின் வாயிலாக அறியமுடிகிறது. வடக்கு நோக்கி அமைந்துள்ள மூலநாதர் கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் இருந்து காலத்தால் முந்தைய செய்தியாக, பாண்டிய மன்னன் சேந்தனைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. பொதுவாக, இம்மன்னன் காலத்தில் உருவாக்கப்பட்ட ஏரியைப் பற்றிப் பிற மன்னர்களின் கல்வெட்டுகளில் 'சேந்தனேரி கட்டிக் கள்ளூர்' எனக் குறிப்பிடப்படுகிறது. இதிலிருந்து தென்கரைப் பகுதியின் பழைய பெயர் கட்டிக்கள்ளூர் என்பதும் அங்குள்ள பெரிய ஏரி சேந்தனால் உருவாக்கப்பட்டதால் அவன் பெயரையும் சேர்த்து சேந்தனேரி' என வழங்கும் பழக்கம் இருந்ததையும் உணரமுடிகிறது. ஆக, மூலநாதர் கோயில் சேந்தன் கட்டியது என்பதற்கு நேரடிச் சான்றுகள் இல்லை.

மூலநாதர் கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் மிகப் பழமையானது மகாமண்டபத் தூணில் உள்ள முதலாம் இராஜராஜனின் கல்வெட்டாகும். கல்வெட்டுகளும் தூண்களின் அமைப்பும் இம்மண்டபம் மேற்சுட்டிய மன்னனின் காலத்தில் கட்டியதை உறுதிசெய்கின்றன. இம்மன்னனுக்குப் பிறகு ஆட்சிசெய்த மாறவர்மன் பராக்கிரமபாண்டியனின் கல்வெட்டுகள் மூலநாதர் கோயில் இருக்கும் இடத்தைப் பராக்கிர பாண்டியபுரம் எனவும் இவருக்குப் பின்னர் ஆட்சிசெய்த முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனின் கல்வெட்டுகள் இத்தலத்தைக் குலசேகரபுரம் எனவும் அழைக்கப்பட்டதைக் காட்டுகின்றன. திருமலைநாயக்கர் காலத்தில்தான் இத்தலத்திற்குத் தென்கரை (வைகையின் தென்கரை) என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. எனினும், கோயில் யார் காலத்தில் கட்டப்பட்டது என்பதற்குச் சான்றுகளில்லை.

ஓலைச்சுவடியில் இருந்து எடுத்து எழுதப்பட்ட 'பில்வாரண்ய மகாத்மியம்' என்னும் வடசொல் கலந்த தமிழ் உரைநடை நூல் (பொ.ஆ. 19ஆம் நூ.) மூலநாதர் கோயில் நிர்மாணம் குறித்துப் பேசுகிறது (சந்திரமூர்த்தி மற்றும் வேதாசலம், 2002, பக். 38-52). இது 'தென்கரைப் புராணம்' எனவும் அழைக்கப்படுகிறது. 'பில்வாரண்யம்' என்றால் வில்வமரங்கள் நிறைந்த காடு எனப் பொருளாகும். வில்வமரமும் அதன் இலைகளும் சிவ வழிபாட்டோடு மிகுந்த தொடர்புடையன. உடலில் தோன்றும் வெம்மையை வில்வ இலைகள் தணிக்குமென்று ஒரு நம்பிக்கையுண்டு. பாண்டிய மன்னன் வீரபாண்டியனுக்கு உடலில் தோன்றிய கருங்குஷ்டம் வில்வ இலை நிறைந்த தீர்த்தத்தில் நீராடி அருகிலிருந்த லிங்கத்தை வணங்கியதால் அகன்றது என்றும் இம்மன்னனே மூலநாதருக்குக் கோயிலை நிர்மாணித்தான் என்றும் இப்புராணம் தெரிவிக்கிறது. இப்புராணம், இக்கோயில் கருவறையின் தென்பக்கச் சுவரின் மாடத்தில் காணப்படும் பொ.ஆ. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பால விநாயகர் சிற்பம் (இ5, நிழ, பள 65) மற்றும் இக்கோயில் கருவறையின் வடக்குப்பக்க

அதிட்டானத்தில் காணப்படும் மாறவர்மன் விக்கிரமபாண்டியனின் ஒரு நீண்ட கல்வெட்டில்[5] குறிப்பிடப்படும் 'வீரபாண்டியன் பதினெட்டடிக் கோல்' என்பது மூலநாதர் கோயில் பொ.ஆ.10ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சிறப்பாகப் பாண்டி நாட்டினை ஆட்சிசெய்த சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் காலத்தது என எண்ணத் துணிய இடமளிக்கிறது. மேலும், இம்மன்னனின் ஆட்சிக்காலத்தில் இவன் சிறப்புப் பெயர்களுள் ஒன்றான 'சோழாந்தகன்' என்னும் பெயரில் 'சோழந்தகச் சதுர்வேதிமங்கலம்' (வைகையின் வடகரையில் உள்ள இன்றைய சோழவந்தான் பகுதி) என்னும் அந்தணர் குடியிருப்புப் பிரம்மதேயமாகப் பாகனூர்க் கூற்றத்தில் அமைக்கப்பட்டது என்பதையும் அறியும்போது மேற்சுட்டிய கோயில் நிர்மாணம் தொடர்பான கருத்துக்கு மேலும் வலுசேர்ப்பதாக அமைகிறது.

மேற்கு நோக்கி அமைந்துள்ள ஆனையூர் ஐராவதீசுவரர் கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் காலத்தால் முந்தையது. அக்கோயில் கருவறை நுழைவாயில் நிலையில் இரு பக்கங்களிலும் தமிழ் எழுத்துக்களில் உள்ள சோழன் தலைகொண்ட வீரபாண்டியனின் 10ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும் (இ4, எ.1). இக்கல்வெட்டினைக் கொண்டு இக்கோயில் அதாவது தென்கல்லகத் நாட்டு திருக்குறுமுள்ளூர் (இன்று:ஆனையூர்), திருவக்னீசுவரர் (இன்று:ஐராவதீசுவரர்) கோயில் சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது என்பது புலப்படுகிறது. மேலும், இக்கல்வெட்டில் உள்ள "நமக்கு யிராச்சியத்தைத் தந்தருளின நாயனாற்கு" என்னும் வரிகள் (22-25) வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. அதாவது, இக்கடவுளின் அருளினால் பாண்டியர் ஆட்சியை மீண்டும் பெற்றதாக இம்மன்னன் பதிவு செய்திருப்பதன் மூலம் இத்தலத்தின் சிறப்பு வெளிப்படுகிறது. இதற்காக இம்மன்னன் இக்கோயிலுக்கு 'பெருநான்-கெல்லைக்குட்பட்ட' அதாவது ஒரு பரந்த நிலப்பரப்பினைத் தேவதானமாக்

[5] களஆய்வின்போது ஆய்வாளரால் நேரில் படிக்கப்பட்ட கல்வெட்டு.

வழங்கியுள்ளமையும் தெரியவருகிறது. வீரபாண்டியன் ஒரு சிவ பக்தனாகப் பாண்டி நாட்டில் பல கோயில்களை உருவாக்கிய பெருமைக்குரியவனாவான். தென்கல்லக நாட்டின் எல்லையில் அமைந்துள்ள தென்முட்ட நாட்டு மேலத்திருமாணிக்கம் மற்றும் மாடக்குளக்கீழ்க் கீழ்மாத்தூர் சிவன் கோயில்களை நிர்மாணித்தவனும் இம்மன்னனே. இவை தவிர, மேலும் பல கோயில் திருப்பணிகளைப் பாண்டியநாடு முழுவதும் மேற்கொண்ட பெருமைக்குரிய மன்னன் வீரபாண்டியன் என்பதற்கு இம்மன்னனின் பல வட்டெழுத்துக் கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன.[6] இம்மன்னனின் காலத்தில் பாண்டிநாடு ஒரு சைவ சமயப் புரட்சியைக் கண்டது எனில் மிகையன்று. ஆனால், வேறு எந்தக் கோயில் கல்வெட்டிலும் மேற்சுட்டிய ஆவணப் பதிவான “நமக்கு யிராச்சியத்தைத் தந்தருளின நாயனாற்கு”[7] என்ற சிறப்புக் குறிப்பினைக் காணமுடியவில்லை. எனவே, இச்சிறப்பினைத் தென்கல்லக நாட்டுத் திருத்தலமான ஆனையூருக்கு மட்டும் உரியதாகக் கருதலாம்.

வீரபாண்டியனைத் தொடர்ந்து பாண்டியன் ஸ்ரீவல்லபன் முதல் கடைசி அரசன் முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் வரை அனைவருமே இத்தலத்தின் மீது அக்கறை கொண்டமை கல்வெட்டுகளின் வாயிலாகத் தெரியவருகிறது. எனினும், இக்கோயிலின் மகாமண்டபம் (இ5, நிழ, பஎ 66) முதலாம் இராஜராஜன் மற்றும் முதலாம் இராசேந்திரன் காலத்தில் கட்டப்பட்டது என்பதற்கு இங்குள்ள தூண்களில் காணப்படும் இம்மன்னர்களின் கல்வெட்டுகள் சான்றுகளாக நிற்கின்றன. மேலும், சோழர் காலத்தில் இக்கோயிலுக்கு அருகிலேயே தனியாக ஒரு கற்கட்டுமானம் உருவாக்கப் பட்டுள்ளது (இ5, நிழ, பஎ 67). முழுமையடையாத இக்கட்டுமானம்

---

[6] பாண்டி நாட்டுப் பகுதியில் கிடைக்கும் வட்டெழுத்துக் கல்வெட்டுகளில் இம்மன்னனின் ஆவணங்களே அதிகமாக இருக்க வேண்டும்.

[7] பராந்தக சோழனின் ஆதிக்கத்திற்குப் பிறகு பாண்டிய அரியணையைச் சோழர்களிடம் இருந்து மீண்டும் பெற்றதை இங்கு நினைவில் கொள்ளலாம்.

இப்பொழுது முற்றிலும் சிதிலமடைந்து காணப்படுகிறது. இம்மன்னர்களின் கல்வெட்டுகளின் மூலம் சோழராட்சிக் காலத்தில் பாண்டிய நாட்டில் இவ்வூர் ஓர் முக்கியப் படைத்தளமாக விளங்கியமையை அறியமுடிகிறது. கே.வி.இராமன் இப்படையினை 'நிலைப்படை' (Standing Army) எனக் குறிப்பிடுகிறார் (Raman, 1973, p. 18). இப்படைகள் 'படைத்தலைவர்களின்' கட்டுப்பாட்டில் இருந்ததைக் கல்வெட்டுகள் உறுதிசெய்கின்றன (ஜெயக்குமார், 2008, பக். 132-139). வாலாந்தூர் சோலை உலகன் மண்டபம் (இன்று : அங்காள ஈசுவரி கோயில்) படைகளின் கூடாரமாகப் படைத்தலைவர்களின்கீழ் இருந்தமை தெரியவருகிறது. எரிய படைத்தலைவன் காடன் ஊரன், படைத்தலைவனான மாறன் நாசகன், படைத்தலைவன் சோமன் நாசகன், படைத்தலைவன் வேளாண் சேந்தன், படைத்தலைவன் அரையன் பல்லவன், படைத்தலைவன் எழுநூற்றுவன் எனப் படைத் தலைவர்களின் பல பெயர்கள் சோழர் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.[8] இவர்கள் உள்நாட்டுப் பாதுகாப்புப் பணியுடன் கோயில் நிர்வாகத்தையும் தங்கள் வசம் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இக்கோயிலின் முகமண்டபம் (இ5, நிழ, பஎ 68) நாயக்கர் காலக் கட்டுமானமாகும்.

பாண்டியர் பயன்படுத்திய மீன் சின்னமான 'இணைக்கயல்' உருவத்தையே இலட்சினையாக நாயக்கர் ஆட்சியாளர்களும் பயன்படுத்தினர் என்பதற்கு ஆதாரமாக மேற்சுட்டிய முகமண்டபத்தில் மீன் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளமை (இ5, நிழ, பஎ 69) சான்றாகும். இக்கோயிலிலுள்ள மீனாட்சி அம்மன் சன்னதியும் நாயக்கர் காலத்ததாகும்.

---

[8] எழுநூற்றுவன், எரியபடை, நாசகன் மற்றும் அரையன் என்பவை படைகளின் தன்மையைக் காட்டுவதாகக் கொள்ளலாம். இவற்றில் எழுநூற்றுவன் என்பது வணிகர்களின் பாதுகாப்பிற்காகவும், எரிய படை மற்றும் நாசகன் போன்றவை பலத்த அழிவுகளை ஏற்படுத்தக்கூடியதாகவும், அரையன் என்பது குறுநிலத் தலைவனுடன் தொடர்புடையது எனவும் கொள்ளலாம்.

வீரபாண்டியன் காலம் (பொ.ஆ. 10 ஆம் நூ.) முதல் திருக்குறுமுள்ளூர், திருக்கோவிலூரான திருக்குறுமுள்ளூர் (கோயில் சிறப்பினைக் காட்டுவது) என அழைக்கப்பட்டு வந்த இத்தலம் விஜயநகர் காலத்தில் முதன்முதலாக 'ஆனையூர்' என அழைக்கப்படுவதைப் பொ.ஆ. 14ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு வாயிலாக அறியமுடிகிறது (ஜெயக்குமார், 2008, பக். 152-154). திருவிளையாடற் புராண நிகழ்வு ஒன்றினை இப்பெயர்க் காரணத்தோடு ஒப்பிடலாம் (Baliga, 1960, p. 428). இப்புராணத்தில் வெள்ளை யானைக்குச் சாபம் கொடுத்த பகுதி ஒன்று உள்ளது. ஒருமுறை இந்திரன் அவைக்கு வருகை தந்த முனிவர் துர்வாசர், தாம் இந்திரனுக்காகக் கொண்டுவந்த மலரினைக் கொடுக்க அதை இந்திரன் பெற்று அம்மலரினைத் தனது வாகனமான வெள்ளை யானையின் (ஐராவதம்) மேல் வைக்க, யானை அம்மலரினை தரையில் போட்டு மிதித்து முனிவரை அவமதித்தது. இதுகண்டு கடும் சினம் கொண்ட முனிவர் யானையைச் சாபமிட, யானை கருப்பாக நிறம் மாறியது. யானை தான் மீண்டும் வெள்ளை நிறத்தை அடையும் எண்ணத்தில் மதுரையில் இருந்து மேற்கு நோக்கி ஓடிச்சென்று முட்புதர்களால் சூழப்பட்ட வேடவர்கள் அடங்கிய ஓர் இடத்தை அடைகிறது. அங்குச் சுயம்புலிங்கத்தையும் அதனருகில் இருந்த புனிதப் பொற்றாமரைக் குளத்தினையும் காண்கிறது. அப்பொற்றாமரைக் குளத்தில் தொடர்ந்து நீராடி, லிங்கத்தை வணங்கி, வழிபட்டுத் தன் அசல் நிறமான வெள்ளையைப் பெற்று அங்கேயே இறந்துவிடுகிறது. அங்கு இதன் பெயரில் ஓர் ஊரும் நிர்மாணிக்கப்படுகிறது. பரஞ்சோதி முனிவரால் பொ.ஆ. 12-13ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மேற்படி புராணத்திற்கு நா.மு.வேங்கடசாமி நாட்டார் (1956, ப.276) எழுதிய உரையிலும் இவ்விளக்கத்தைக் காணமுடிகிறது. எனவே, இப்புராணத்தில் காட்டப்பட்டுள்ள இயற்கை அமைப்பையும் இன்றைய ஆனையூரின்

அமைப்பினையும்[9] நோக்கினால் இரண்டும் ஒன்றே என்பது நன்கு புலப்படும். மேலும், இங்குள்ள கோயிலும் ஐராவதீசுவரர் கோயில் என்று வழங்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். திருவிளையாடற் புராணத்தில் சொல்லப்படும் இயற்கை அமைப்பும் தொன்மை வரலாற்றுச் சிறப்புமிக்க இடமும் மதுரைக்கு மேற்கே இந்த ஆனையூரைத் தவிர வேறு இல்லை என்பதும் இங்குச் சுட்டத்தக்கதாகும். நாயக்கர் காலத்திலும் இப்பெயர் தொடர்ந்து நிலைபெற்றுக் குறிப்பாகத் திருமலைநாயக்கர் காலத்தில் *(1623-1654)* தாலுகாவாக அதாவது வட்டாரத் தலைநகராகச் சிறந்து விளங்கியதை உத்தப்பநாயக்கனூர் என்ற இடத்தில் கிடைத்துள்ள இம்மன்னன் காலத்துச் செப்புப் பட்டயம் உறுதிசெய்கிறது.[10]

கோயில்பட்டி (விக்கிரமங்கலம்) மதுரோதைய ஈசுவரர் கோயிலும் (இ5, நிழ, பஎ 70) தென்கல்லக நாட்டுப் பகுதியில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தலமாகும். இக்கோயிலில் கிடைக்கப்பெறும் கல்வெட்டுகள் அனைத்தும் திருச்சுற்றின் உட்சுவர்களில் மட்டுமே காணப்படுகின்றன. பிற கோயில்களில் காணப்படுவதுபோலக் கருவறை நுழைவாயில்நிலை, அர்த்தமண்டபச் சுவர் அல்லது அதிட்டானப் பகுதிகளில் கல்வெட்டுகள் காணப்படவில்லை. இதனால் இக்கோயில் கட்டுமானத்தின் காலத்தினைத் துல்லியமாகக் கணிக்க

---

[9] மதுரைக்கு மேற்கே முட்புதர்களால் சூழப்பட்ட இடத்தில் ஐராவதம் தங்கியிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. பாண்டியர் கல்வெட்டுகளில் 'திருக்குறுமுள்ளூர்' என்று குறிப்பிடப்படும் இடப்பெயர் முட்செடிகளை அடிப்படையாகக் கொண்டு வழங்கப் பட்டது; இன்றும்கூட ஆனையூரில் முட்செடிகளின் நெருக்கத்தைக் காணலாம். ஊர்ப் பெயர் ஆனையூர், கோயில் பெயர் ஐராவதீசுவரர் என்பதும் வரலாற்று அடிப்படையில் புராணத்தோடு பொருத்தமானதே.

[10] ". . . மதுறாபுரித் தலத்திலிருக்கும் றாசமானியறாயர் ஷத்திரி திறுமலை நாயக்கரவர்கள் ஆனையூர் தாலுகாவில் வந்துயிறுக்கும்போது. . ." என்னும் செய்தியைத் தெரிவிக்கும் இச்செப்புப் பட்டயம் சு.இராஜகோபால் மற்றும் வெ.வேதாசலம் ஆகியோரால் நாட்டார் மங்கலம் ஆசிரியர் திரு.பழனியப்பன் என்பவரிடம் இருந்து பெறப்பட்டதாகும்.

இயலவில்லை. எனினும், முதலாம் சடையவர்மன் குலசேகரனின் 5ஆம் ஆட்சியாண்டுக் (பொ.ஆ. 1195) கல்வெட்டு, சடையவர்மன் சுந்தர பாண்டியனின் 9ஆம் ஆட்சியாண்டுக் (பொ.ஆ. 1260) கல்வெட்டு, விஜயநகர மன்னன் அச்சுதப்பராயர் கல்வெட்டு எனப் பல மன்னர்களின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. ஆண்டு குறிப்பிடப்பட்ட ஆவணம் என்ற அடிப்படையில் முதலாம் சடையவர்மன் குலசேகரனின் கல்வெட்டுப் பழமையானதாகும். இம்மன்னனின் மேலும் சில கல்வெட்டுகள் இங்குக் காணப்படுகின்றன. எனினும், மருதப்பா கோயிலுக்கு அருகில் முற்றிலும் சிதிலமடைந்த நிலையிலுள்ள கோயில் கட்டுமானத்தின் நுழைவாயிலின் இரு நிலைகளில் ஆண்டுக் குறிப்பு இல்லாமல் காணப்படும் திரிபுவனச் சக்கரவர்த்தி முதலாம் சடையவர்மன் ஸ்ரீவல்லபனின் கல்வெட்டு (தெஇக 14, எ.262) விக்கிரம சோழபுரத்து மதுரோதைய ஈசுவரருக்குத் திருப்படிமாற்று உள்ளிட்ட வேண்டும் நிமந்தங்களுக்காகச் செக்காலை என்னும் நிலப்பரப்பை ஸ்ரீவல்லவநல்லூர் என்னும் புதிய ஊராகப் பெயர் மாற்றி வழங்கியதை அறியும்போது இம்மன்னனின் காலத்தில்[11] இக்கோயில் கட்டுமானம் எழுப்பப்பட்டு இருக்கலாம் அல்லது புனரமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இம்மன்னனின் ஆட்சிக் காலத்திலும் (பொ.ஆ. 1122-1162), இவன் மூத்த சகோதரர் மாறவர்மன் பராக்கிரமபாண்டியன் காலத்திலும் (பொ.ஆ. 1097-1120) சோழ மன்னர்களாக இருந்தவர்கள் முதலாம் குலோத்துங்கனும் (பொ.ஆ. 1070-1120) அவன் மகன் விக்கிரமசோழனும் (1120-1138) ஆவர். சோழரின் ஆளுகையின் அடையாளமாக விக்கிரமசோழனின் பெயரிலோ முதலாம்

[11] ஸ்ரீவல்லபனின் 2ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (பொஆ. 1124) ஆனையூர் ஐராவதீசுவரர் கோயிலில் காணப்படுகிறது (ஜெயக்குமார், 2008, பக். 142-144). இக்கல்வெட்டிலும் இம்மன்னன் திருக்குறுமுள்ளூர் கடவுளருக்குத் தறியிறை, தட்டார்ப்பாட்டம், இடங்கை வலங்கை வரி, காராண்மை, மீயாட்சி, பல சிற்றாயங்கள், சில ஊர்கள் மற்றும் 57¾ மாடைப் பொன் என அனைத்தையும் இறையிலித் தேவதானமாக வழங்கியுள்ளமை தெரியவருகிறது.

குலோத்துங்கனின் சிறப்புப் பெயரான விக்கிரமசோழன் என்ற பெயரிலோ (Sastri, 2000, p. 330) விக்கிரமசோழபுரம் என்னும் வணிக நகரம் உருவாக்கப்பட்டிருக்கலாம். எனவே, மதுரோதைய ஈசுவரர் கோயில் ஸ்ரீவல்லபனின் ஆட்சிக் காலத்திற்கு முன்பாகவே எழுப்பப்பட்டிருப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

ஆனையூர் ஐராவதீசுவரர் கோயில் மகாமண்டபத் தூணில் எழுதப் பட்டுள்ள சோழ அரசப் பிரதிநிதியான சடையவர்மன் சுந்தரசோழ பாண்டியனின் 5ஆம் ஆட்சியாண்டுக் (பொ.ஆ. 1023) கல்வெட்டு ". . . தென் கல்லக நாட்டுத் திருக்குறுமுள்ளூரான திருக்கோவிலூர் தேவர்க்கு இந்நாட்டு நகரம் விக்கிரமசோழபுரத்து வியாபாரி குற்றாலம் நம்பநான (இ)ளைஞ் சிங்கத்தன்ம செட்டி இத்தேவர்க்கு நித்தம் ஆடியருள வைச்ச பால். . ." எனக் குறிப்பிடுகிறது. இதன்படி விக்கிரமசோழபுரம், செட்டி என்னும் வணிகர்களைப் பெற்றிருந்தது என்பதும் அவர்கள் கோயில்களுக்கு நிரந்தரமான கொடையாளர்களாகவும் இருந்தனர் என்பதும் தெரிவதோடு முக்கிய வரலாற்றுச் செய்தியாக விக்கிரமசோழபுரம் என்னும் நகரம் மேலே குறிப்பிட்ட ஸ்ரீவல்லபன் காலத்திற்கும் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே இருந்தது என்பதையும் தெரிவிப்பது இங்கு நோக்கத்தக்கது. எனவே, விக்கிரமசோழபுரம் முதலாம் இராஜேந்திரன் காலத்திலேயே உருவாக்கப்பட்ட நகரமாக இருத்தல் வேண்டும். முதலாம் இராஜேந்திரனுக்கும் 'விக்கிரமசோழன்' என்னும் சிறப்புப் பெயர் இருந்தது என்பதும் (Sastri, 2000, pp. 206 and 238) மேற்சுட்டிய கருத்துக்கு வலுசேர்க்கிறது.

ஸ்ரீவல்லபனைத் தொடர்ந்து பிற பாண்டிய மன்னர்களும் இக்கோயிலின் மீது அக்கறை கொண்டிருந்தனர். விஜயநகர ஆட்சியாளர் அச்சுதப்பராயர் காலத்தில் இக்கோயிலின் மகாமண்டபம் மற்றும் முகமண்டபம் ஆகியன புனரமைக்கப்பட்டும் விரிவாக்கம் பெற்றும் காணப்படுகிறது. கருவறையின் வெளிப்புறச் சுவரிலுள்ள வடக்கு, தெற்கு மற்றும் மேற்கு மாடங்களில்

முறையே ஞானசக்தி, இச்சாசக்தி மற்றும் கிரியாசக்தி என்னும் பெண் தெய்வங்கள் காணப்படுகின்றன. தென்கல்லக நாட்டின் பிற இடங்களில் உள்ள கோயில்களில் அம்மன் சன்னதியின் வெளிப்புறச் சுவரின் மாடங்களில் மேற்படி சக்திகள் காணப்படுகின்றன (காட்டாக மூலநாதர் கோயில்). விக்கிரமங்கலம் மதுரோதைய ஈசுவரர் கோயிலில் அம்மன் சன்னதி காணப்படவில்லை. எனினும், மாறவர்மன் பராக்கிரம பாண்டியனின் கல்வெட்டும் (இகஆ, 1926, எ. 615) சடையவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டும் (இகஆ, 1926, எ. 617) இங்கு வீரபாண்டிய-நாயக்கர் மற்றும் சிவநேசவல்லி என்னும் கடவுளர்களுக்குத் தினபூஜை நடைபெற்றதாகவும், இதற்காகக் குலோத்துங்க சோழனின் 40ஆம் ஆட்சியாண்டில் கொடை வழங்கப்பட்டமையும் இக்கடவுளர்களை விக்கிரமங்கலத்து வணிக நகரத்தார் உதவியுடன் திருப்பரங்குன்றத்து கிழை மடத்தைச் சேர்ந்த கயிலாயதேவன் என்னும் சிவதேவன் பிரதிட்டை செய்தளித்ததாகவும் தெரிவிப்பதில் இருந்து இங்கு அம்மன் வழிபாடும் இருந்து வந்துள்ளமை புலப்படுகிறது. இக்கோயிலின் திருச்சுற்றில் தென்மேற்கு மூலையில் ஒரு தொட்டி போன்ற அமைப்பு (தண்ணீர்த் தொட்டி/கல்தொட்டி அன்று) உள்ளது. இது மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் செல்லும் சுரங்கப்பாதை (நிலவறை) என்றும், அவசரகாலங்களில் அல்லது போர்க் காலங்களில் பாண்டிய மன்னர்கள் இவ்வழியைப் பயன்படுத்தியதாக மரபுவழியாக நம்பப்படுகிறது. இக்கோயிலின் முன்பாகப் பெரிய பொற்றாமரைக் குளமும் உள்ளது (இ5, நிழ, பள 71). இக்கோயில் தலத்தை இடைக்காலக் கல்வெட்டுகள் யாவும் விக்கிரம சோழபுரம்[12] என அழைக்கின்றன. முன்னர்ச் சுட்டிய ஸ்ரீவல்லபன் கல்வெட்டு மட்டுமல்லாமல் தென்கரை மூலநாதர் கோயில் கருவறை வெளிப்புற அதிட்டானத்தில் காணப்படும் முதலாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியனின்

[12] 'புரம்' என்றால் நகரம்; மாடமாளிகைகளைக் கொண்ட இடம் அல்லது மேட்டுக் குடியினர் வசிக்கும் இடம் எனக் கருதலாம்.

17ஆம் ஆட்சியாண்டுக் (பொ.ஆ. 1235) கல்வெட்டு 'விக்கிரமசோழபுரம்' (இ5, நிழ, பஎ 72அ) என அழைப்பதுடன் இவ்வூரில் உள்ள நிலத்தை மூலநாதர் கோயிலைச் சேர்ந்த தேவர்கந்மிகள், ஸ்ரீமாகேஸ்வரக் கண்காணி, ஸ்ரீகாரியவர் ஆகியோருக்கு வழங்கியமை குறித்துப் பேசுவது, அக்காலத்தில் இவ்வூரின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதாக அமைகிறது. எனினும், இப்போது மதுரோதைய ஈசுவரர் கோயில் உள்ள இடம் மலையை அரணாகக் கொண்டு (இ5, நிழ, பஎ 72 ஆ) கோயில்பட்டி (விக்கிரமங்கலம் அல்ல) என அழைக்கப் படுகிறது. இதுவே கல்வெட்டுகள் காட்டும் விக்கிரமங்கலம் என்பதில் ஐயமில்லை.

மேலும் முதலாம் சடையவர்மன் குலசேகரன் காலத்தில் வெளியிடப்பட்ட மதுரோதைய ஈசுவரர் கோயில் பிரகாரத்தின் மேற்குச் சுவரில் உள்ள கல்வெட்டும் (10வது ஆட்சியாண்டு) வடக்குச் சுவரில் (துர்க்கைக்கு எதிரில்) உள்ள இரு கல்வெட்டுகளும் (5வது ஆட்சியாண்டு) விக்கிரம சோழபுரத்தை "தேசிபட்டினமான விக்கிரமசோழபுரத்து நகரத்தோம்" எனக் குறிப்பிடுகின்றன. பொதுவாக ஒரு இடம் 'நகரம்' என்றழைக்கப்பட்டால் அவ்விடம் வணிகர்களைக் கொண்டதாக இருக்கும். 'நகரத்தோம்' என்பது வணிகர்களைக் கொண்ட நிர்வாக அமைப்பைக் குறிக்கும். இங்குக் குறிப்பிடப் பட்டுள்ள 'தேசிபட்டினம்' என்பதற்கு (தேசி) பிற தேசங்களில் இருந்து வந்த வணிகர்களை அதாவது பரதேசிகளைக் (தேசிகள்) கொண்ட இடம் என்பது பொருளாகும் (ஜெயக்குமார், 2001, பக். 202-203). இதிலிருந்து விக்கிரமங்கலத்தின் வணிகச் சிறப்புப் புலப்படுகிறது. மேலும், மேற்சுட்டிய ஒரு கல்வெட்டில் நகர சபைக்காகக் கையொப்பம் இட்டுள்ளவர்களில் ஒருவராக 'தேவன் பெரியானான மாசாத்துவரையன்' எனக் குறிப்பிடப்படுவது விக்கிரமங்கலம் பெரும் வணிகர்களைக் (மா = பெரிய + சாத்துவன் = வணிகன்) கொண்ட இடமாக இருந்ததை உணர்த்துகிறது.

ஆனையூர் ஐராவதீசுவரர் கோயில் அர்த்தமண்டபத்தில் உள்ள சோழன் தலைகொண்ட வீரபாண்டியனின் இரு கல்வெட்டுகள் (பொ.ஆ. 956) இம்மன்னனின் உயர் அலுவலரான 'அளற்றுநாட்டு[13] குளத்தூரைச் சேர்ந்த 'மூர்க்கவிச்சாதிர பல்லவரையனான சாத்தன் தமிழன்' என்பவனைப் பற்றிக் குறிப்பிடுகிறது (ஜெயக்குமார், 2008, பக். 128-130). இச்சாத்தன் தமிழன் வணிகம் சார்ந்த சங்க கால வணிகர் மரபில் வந்தவனாக இருக்கலாம். திருப்பரங்குன்றம் குடைவரையில் காணப்படும் மாறன் சடையனின் கல்வெட்டுக் (பொ.ஆ. 773) குறிப்பிடும் 'பாண்டி அமிர்தமங்கல வரையனாயின சாத்தன் கணபதி' என்பவரை (தெஇக 14, எ.3) மேற்சுட்டிய சாத்தன் தமிழனோடு ஒப்பிடலாம். எகிப்து, நைல்நதிக் கரையில் அமைந்துள்ள பழந்துறைமுக நகரான குவசிர்-அல்கதிர் என்ற இடத்தில் நடைபெற்ற அகழாய்வில் மண்கலச் சில்லுகளில் கிடைக்கப்பெற்ற 'கண்ணன் சாத்தன்' என்ற பழந்தமிழ்ப் பெயரினையும் (Salomon, 1991, pp. 731-736) மேற்சுட்டிய வணிகம் சார்ந்த பெயர்களோடு ஒப்புநோக்கினால் தென்கல்லக நாட்டின் சங்ககால வணிகச் சிறப்பினை உணரலாம்.

தென்கல்லக நாட்டின் 'கட்டிக்கள்ளூர்' எனத் தொன்மைப் பெயருடைய தென்கரை மாறவர்மன் பராக்கிர பாண்டியன் காலத்தில் 'பராக்கிரம பாண்டியபுரம்' எனவும் (தெஇக 5, எ.295), முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் காலத்தில் 'குலசேகரபுரம்' எனவும் (தெஇக 5, எ.293) வணிக நகராகப் பெயர்மாற்றம் பெற்று வணிகத் தலமாக விளங்கியதை அறியும் பொழுது இப்பகுதியின் வணிகச் செயல்பாட்டில் பாண்டிய மன்னர்கள் அதிக கவனம் செலுத்தியமை வெளிப்படுகிறது.

விக்கிரமங்கலம் மதுரோதைய ஈசுவரர் கோயில் திருச்சுற்றின் வடக்குச் சுவரில் உள்ள சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 9ஆம் ஆட்சியாண்டுக்

---

[13] அளற்றுநாடு குறித்து இயல்-2 இல் ப. 24 இல் காணலாம்.

(பொ.ஆ. 1260) கல்வெட்டு (தெஇக 5, எ.303) இவ்வூரை, 'தென்கல்லக நாட்டுத் தேசிபட்டணமான ஐயம்பொழில் விக்கிரமசோழபுரத்து நகரத்தோம்' எனக் குறிப்பிடுவது சுட்டத்தக்கதாகும். இதில் காணப்படும் 'ஐயம்பொழில்' என்பது இடைக்காலத்தில் தென்னிந்தியா முழுவதும் இயங்கிய 'ஐந்நூற்றுவர்' என்னும் ஒரு பெரிய வணிகக் கூட்டமைப்பு (கசொஅ, பக். 124-125). இவர்களை 'திசையாயிரத்து ஐந்நூற்றுவர்' எனவும் அழைக்கலாம். இக்கல்வெட்டுச் செய்தி, விக்கிரமசோழபுரம் தென்னிந்திய அளவில் மட்டுமல்லமல் உலகளாகிய வணிகத் தலமாகப் பாண்டிய நாட்டின், தென்கல்லக நாட்டில் அமைந்திருந்தமை இப்பகுதிக்கு மட்டுமல்லாது பாண்டிய நாட்டிற்கும் சிறப்புச் சேர்ப்பது எனலாம்.

மேலே சுட்டப்பட்டுள்ள சடையவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு விக்கிரமசோழபுரத்தைப் பல சிறுவழிகளும் (Public roads), பெருவழிகளும் (Trade-highways) இணைப்பதாகக் குறிப்பிடுவது அங்கு மேற்கொண்ட கள ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டது. நான்கு சாலைகள் இணையும் இடத்தில் விக்கிரமங்கலம் அமைந்திருப்பதை இன்றும் காணலாம். இன்று விக்கிரமங்கலத்தில் இருந்து மேற்கு நோக்கிச் செல்கின்ற சாலை அணைப்பட்டி, குன்னுவராயன் கோட்டை[14] வழியாகக் கொடைக்கானல், தாண்டிக்குடி போன்ற மலை நாடுகளோடு இணைக்கப்பட்ட பெருவழியாகும். இதனை, மேலும் வலுப்படுத்தும் விதமாக இப்பெருவழியில் உள்ள ஊர்களான மேலப்பெருமாள்பட்டியில் வணிகச் சின்னங்களுடன் சூலக்கல் இரண்டு (இ5, நிழ, பஎ 73) காணப்படுவதும், எஸ்.கிருஷ்ணபுரத்தில் சாலையை ஒட்டிப் பாண்டியர் காலப் பெருவழிக் கிணறு (இ5, நிழ, பஎ 74) காணப்படுவதும்

[14] குன்னவராயன்கோட்டைப் பழைய சிவன் கோயிலில் உள்ள வணிகக் கல்வெட்டில் (இ4, எ.19) இப்பெருவழி வாயிலாகச் செல்லும் பொருள்களுக்கு விதிக்கப்படும் வரியில் முதன்மையான பங்கு விக்கிரமங்கலம் மதுரோதைய ஈசுவரருக்கு வழங்கப்பட்ட செய்தி காணப்படுவது இங்குச் சுட்டத்தக்கது.

குறிப்பிடத்தக்கது. இக்கிணறு எட்டு மூலைகளைக் கொண்டு எண்கோண வடிவத்தில் அமைந்துள்ளதால் இப்பகுதி மக்கள் இவ்விடத்தை 'எட்டு மூலைப்பட்டி' என அழைக்கின்றனர். தெப்பத்துப்பட்டியில் மலையை ஒட்டிய ஒட்டமுனியாண்டி கோயிலின் முன்பாகப் பிற்காலப் பாண்டியர் பெருவழிக் கிணறு ஒன்றும் (இ5, நிழ, பஎ 75) உள்ளது. மற்றொன்று குமுளி, தேனி, உசிலம்பட்டி, செக்கானூரணி மற்றும் மேலக்கால் வழியாக விக்கிரமங்கலத்தை அடைந்தது. இப்பெருவழியில் செக்கானூரணியில் சாலையின் ஓரமாகப் (இரண்டு ஆதிசிவன் கோயில்களுக்கும் நடுவில்) பாண்டியர் காலப் பெருவழிக் கிணறு ஒன்று காணப்படுவதும் (இ5, நிழ, பஎ 76) குறிப்பிடத்தக்கது. இக்கிணற்றில் எழுத்தமைதியைக் கொண்டு இடைக்காலத்தைச் சேர்ந்த கல்வெட்டு மிகவும் அழிந்த நிலையில் உள்ளது. இதன் வழியாக விக்கிரமங்கலம் வருபவர்கள் தலைநகரான மதுரைக்கு ஏற்கனவே வந்த வழியில் அதாவது விக்கிரமங்கலத்தில் இருந்து கிழக்கு நோக்கி நேராகச் செல்லும் சாலையில் மேலக்கால் வந்து அங்கிருந்து இரண்டு வழிகளில் அதாவது ஒன்று வைகையின் தென்கரையில் கீழ்மாத்தூர், துவரிமான் வழியாகவும், மற்றொன்று செக்கானூரணி நாகமலைப் புதுக்கோட்டை வழியாகவும் சென்றடைந்தனர். விருதுநகர், அருப்புக்கோட்டை, செங்கோட்டைப் பகுதியிலிருந்து வரும் வணிகர்கள் திருமங்கலம், உறப்பனூர், செக்கானூரணி, மேலக்கால் வழியாக விக்கிரமங்கலத்தை அடைந்திருக்க வேண்டும். இதனை, உறப்பனூர் கண்மாயினை ஒட்டி நாயக்கர் காலக் கிணறு அமைந்துள்ளமை (இ5, நிழ, பஎ 77) உறுதிசெய்கிறது. மேலும், இக்கிணற்றில் நாயக்கர் அரசி மங்கம்மாள் தம் உயர் அலுவலர்களுடன் இருக்கும் புடைப்புச் சிற்பத் தொகுதி காணப்படுவதால் பிற்கால அரச மரபுகளும் தென்கல்லக நாட்டுப் பகுதியில் நேரடி கவனம் செலுத்தியமை தெரியவருகிறது. திண்டுக்கல், வாடிப்பட்டி, சோழவந்தான் வழியாக விக்கிரமங்கலம் வந்தடையும் கொங்குப் பெருவழியிலும் நாயக்கர்காலப் பெருவழிக் கிணறு மீன் சின்னங்களுடன் (இ5, நிழ, பஎ 78) காணப்படுவது சுட்டத்தக்கதாகும்.

இக்கிணறு முதலில் பிற்காலப் பாண்டிய மன்னர்களால் உருவாக்கப்பட்டிருப்பதற்கும் வாய்ப்புள்ளது. விக்கிரமங்கலத்தில் இருந்து தென்கிழக்கில் உண்டாங்கல்லு மலையினை ஒட்டிச் செக்கானூரணி வழியாக ஒரு வழி மதுரைக்குச் செல்கிறது. இதேபோன்று மற்றொரு வழி வடமேற்காகக் குருவித்துறைச் சக்கரத்தாழ்வார் வைணவத்தலம் நோக்கிச் செல்கிறது. அது அணைப்பட்டி குன்னவராயன்கோட்டை வழியாக கொடைக்கானல் செல்லும் பெருவழியுடன் இணைகிறது. இதுபோன்ற சிறு வழிகளும் தென்கல்லக நாட்டின் முக்கியத்துவம் பெற்று விளங்கின. அக்காலத்தில் வணிக மையமாகவும் விளங்கிய வைணவத்தலமான குருவித்துறை (இன்று சிறப்புடன் விளங்கும் குரு தலம்) பாகனூர்க் கூற்றத்து வருவாய்ப் பிரிவில் இருந்தாலும் வைகையின் தென்கரையில் தென்கல்லக நாட்டு எல்லையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறாகத் தென்கல்லக நாட்டின் விக்கிரமங்கலம் வணிகச் செயல்பாடுகளில் பாண்டிய நாட்டின் முதன்மையான தலமாக விளங்கிய சிறப்புக்குரியது.

தென்கல்லக நாட்டின் எல்லையில், இன்று திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில் அமைந்துள்ள குன்னவராயன்கோட்டை பாண்டியர் காலக் கோயில் தலமாகும். குன்றரண்கோட்டை (குன்று + அரண் + கோட்டை) என்னும் பெயர் திரிந்து இன்று குன்னவராயன்கோட்டை ஆயிற்று. இடைக்காலப் பாண்டிநாட்டு வணிகப் பெருவழியில், வேகவதி ஆறும் (வைகை ஆறு) அரித்ரா ஆறும் (மஞ்சளாறு) கலக்குமிடத்தில் வடகரையில் மேற்கு நோக்கிச் சிவன்கோயில் அமைந்துள்ளமை சிறப்புக்குரியது. முற்றிலும் சிதிலமடைந்துள்ள இச்சிவன் கோயிலை (இ5, நிழ, பஎ 79) இப்பகுதி மக்கள் 'பழைய கோயில்' எனவும் 'இடிஞ்ச கோயில்' எனவும் அழைக்கின்றனர். இக்கோயிலின் தென்புறச் சுவரில் எழுத்தமைதியின் அடிப்படையில் பொ.ஆ. 12-13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டின் ஒரு பகுதி மட்டும் காணப்படுகிறது (இ4,எ.19 மற்றும் இ5, நிழ, பஎ 80). ஆனால், இக்கல்வெட்டின்

தொடக்கப்பகுதி காணப்படவில்லை. இக்கல்வெட்டு இடைக்காலத் தமிழ் நாட்டின் பன்னாட்டு வணிகக் குழுவாகத் திகழ்ந்த பதினெண்விசையத்தார் தொடர்பானது. இவ்வணிகக் குழுவினர் கிழக்கு நோக்கிப் போகும் பொதிக்கு[15] மதுரை உதைய நாயனாற்கு ஒரு புதுக்காசும்,[16] கண்ணுடைய விண்ணகர எம்பெருமானுக்கு பொதிக்கு அரை புதுக்காசும் சாரிகையாகக் (பொருட்களை பெருவழியில் கொண்டு செல்வதற்கு வரியாக) கொடுப்பதற்குச் சம்மதித்துள்ளமை கல்வெட்டின் செய்தியாகக் காணப்படுகிறது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் மதுரை உதைய நாயனார் என்பது தென்கல்லக நாட்டின் நகரமாக விளங்கிய விக்கிரமசோழபுரத்து மதுரோதைய ஈசுவரர் கோயிலைக் குறிப்பிடுகிறது என்பதில் ஐயம் வேண்டியதில்லை. 'கண்ணுடைய விண்ணகர எம்பெருமான்' எது என்பதைக் கல்வெட்டுச் செய்திகளை உள்நோக்கிப் பார்த்து அறிய வேண்டியுள்ளது. குன்னவராயன் கோட்டையில் உள்ள விசாலாட்சி சமேத விசுவநாதர் கோயில்[17] கருவறையின் உட்கூரையில் பதிக்கப்பட்டுள்ள கற்பலகையில் காணப்படும் கல்வெட்டில் (இ5, நிழ, பள 80.1) 'திருமேற்கோயில் கண்ணுடைய' என்னும் பெயர் குறிப்பிடப்படுகிறது. இக்கல்வெட்டும் முன்னர்ச் சுட்டிய 'பழைய கோயில்' கல்வெட்டும் எழுத்தமைதியைக் கொண்டு ஒரே காலத்தைச் சேர்ந்தவை என்பதோடு இரண்டும் சேர்ந்து ஒரே கல்வெட்டு என்பதையும் கல்வெட்டின் தொடக்கப் பகுதி ஓரிடத்திலும் கல்வெட்டின் முக்கியத்துவத்தைத் தெரிவிக்கும் பகுதி ஓரிடத்திலும் இருப்பதையும் களஆய்வின்போது

[15] வணிகர்கள் கொண்டு செல்லும் (குறிப்பாக தலைச்சுமையாக) பொருள்களைக் கணக்கிடும் கொள்ளளவு முறை.

[16] புதுக்காசு என்பது இக்கல்வெட்டிற்குரிய மன்னனின் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பட்ட காசு.

[17] இக்கோயிலின் பரம்பரைக் கோயில் குருக்களான திரு விசுவநாதப் பட்டர் அவர்கள் செய்த உதவிக்கு விசாலாட்சி சமேத விசுவநாதருக்கு நன்றியுடையேன்.

கண்டுபிடிக்க முடிந்தது. மேற்சுட்டிய இரு கல்வெட்டுப் பகுதிகளிலும் காணப்படும் 'திருமேற்கோயில் கண்ணுடைய. . .' என்பதும் 'கண்ணுடைய விண்ணகர எம்பெருமான்' என்பதும் ஒன்றாகும். குருவித்துறைச் சக்கரத்தாழ்வார் கோயிலில் காணப்படும் மேற்சுட்டிய குன்னவராயன் கோட்டைக் கல்வெட்டுகளின் எழுத்தமைதியோடு முழுமையாக ஒப்பிடத்தக்க கல்வெட்டு (இ5, நிழ, பஎ 15) 'மேல்கரை ஸ்ரீவிண்ணகர ஆழ்வார்' எனக் குறிப்பிடுகிறது. ஆக, மேற்சுட்டிய 'திருமேற் கோயில் கண்ணுடைய விண்ணகர எம்பெருமான்' என்பதும் 'மேல்கரை ஸ்ரீவிண்ணகர ஆழ்வார்' என்பதும் ஒன்றே. இங்குக் குறிப்பிடப்படும் 'திருமேற் (கோயில்)' மற்றும் 'மேல்கரை' என்பன இக்கோயில் வைகையின் மேல் கரையில் அதாவது மேற்குக் கரையில் அமைந்திருக்கும் கோயில் என்பதை உணர்த்துகிறது. எனவே, இவ்வைணவத் தலம் விக்கிரமங்கலம் அருகிலுள்ள குருவித்துறைச் சக்கரத்தாழ்வார் கோயில் என்பது புலப்படுகிறது. அக்காலத்தில் தென்கல்லக நாட்டு விக்கிரமங்கலமும், இந்நாட்டின் எல்லைக்குள் அமைந்திருந்தும் பாகனூர்க் கூற்றத்து வருவாய்ப் பிரிவின்கீழ் வருகின்ற சோழந்தக சதுர்வேதி மங்கலத்தின் குருவித்துறையும் பாண்டிய நாட்டின் அக்கால 'மாநகரமான' மதுரையை நோக்கி மேற்கில் இருந்து கிழக்காகச் சென்ற பெருவழியில் சிறப்புடன் அமைந்திருந்த முறையே சைவ மற்றும் வைணவத் தலங்கள் என்பதும் அவை பதினெண்விசையத்து வணிகக்குழுவினரின் ஆதரவு பெற்ற தலங்களாக விளங்கின என்பதும் தெளிவாகிறது.

மேற்சுட்டிய குன்னவராயன்கோட்டைப் பழைய கோயில் கல்வெட்டு 'சமையத்தன்மை இனிது நடாத்துகின்ற பதினெண் விசையத்தோம்' என்று குறிப்பிடுவதிலிருந்து இவ்வணிகக் குழுவினரின் பொதுவான அதே வேளையில் முக்கியமான பணியாகச் சமயப்பணி இருந்துள்ளமை வெளிப்படுகிறது. தென்கரை மூலநாதர் கோயிலிலுள்ள பாண்டிய மன்னன் ஸ்ரீவல்லபனின் 4ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (பொ.ஆ. 1126)

இக்கோயிலுக்கு ஸ்ரீவல்லபுரத்து வியாபாரி திருவிளக்கு அளித்தமையும் (தெஇக 5, எ.298), மலைமண்டலத்தைச் (இன்றைய கேரளப் பகுதி) சேர்ந்த வல்லநகரம் என்ற இடத்தைச் சேர்ந்த வணிகன் இக்கோயிலுக்குத் தூண்களைக் கொடை அளித்தமையும் (இகஆ 1910, எ.136), இக்கோயிலில் உள்ள முதலாம் சடையவர்மன் குலசேகரனின் 2ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுத் (பொ.ஆ. 1192) திருவாரூர் தக்ஷிணகோளகி மடத்தின் ஆசாரியார்[18] மதுரை திருஞான சம்பந்தர் மடத்துக்கு[19] வருகை புரிந்தமையும் இவரின் சமயப் பணிக்காக ஸ்ரீவல்லபன் கட்டளை,[20] பராக்கிரம பாண்டியன் கட்டளையில் இருந்து நிலம் வழங்கியமையும்(தெஇக5, எ.301), விக்கிரமங்கலத்தில் படியெடுக்கப்பட்டுள்ள சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 9ஆவது ஆட்சியாண்டுக் (பொ.ஆ. 1260) கல்வெட்டுத் திருப்பரங்குன்றத்துக் கோளகி மடத்தின் கிளை மடத்துக்கு விக்கிரமசோழபுரத்து நகர அமைப்பானது ஒரு பெரிய நிலப்பரப்பை வழங்கியமையும் (தெஇக 5, எ.303), குருவித்துறைச் சித்திரரதவல்லப

---

[18] ஆசாரியார் = சமய குரு அல்லது ஆசிரியர்.

[19] திருஞானசம்பந்தர் மடத்தின் கிளை மடங்கள் தென்கல்லக நாட்டில் மட்டும் அல்லாமல் பாண்டிய நாட்டின் பிற பகுதிகளிலும் இருந்துள்ளன. காட்டாக, தென்கல்லக நாட்டின் எல்லையான வைகையின் தென்கரையை அடுத்து வடகரையில் பாகனூர்க் கூற்றத்தில் அமைந்திருந்த திருவேடகத்திலும் திருஞானசம்பந்தர் மடத்தின் கிளை இருந்ததைக் குறிப்பிடலாம் (இகஆ 1905, எ.681). மேலும், இங்குள்ள ஏடகநாதர் கோயிலில் ஞானசம்பந்தர் மற்றும் சமண முனிவர் சிற்பங்கள் எதிரெதிர்த் தூண்களில் உள்ளன. இது சைவத்துக்குப் பெருமையாகக் கருதப்படும் ஞானசம்பந்தரின் சமணத்துக்கு எதிரான புனல் வாதம் மற்றும் அனல் வாதத்தைக் குறிப்பதாக இருக்கலாம். இரண்டாம் வரகுணனின் (பொ.ஆ. 862) அமைச்சர் மாணிக்கவாசகர் நரியைப் பரியாக்கியதுகூட மேற்சுட்டியது போலப்பாண்டிய நாட்டுச் சைவ சமய பக்தி இயக்கத்தின் வெளிப்பாடே. சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டுச் சாசனம் குறிப்பிடும் 'ஒரு பாண்டியன் தன்னுடை குருவை காப்பதற்காகத் தன் கழுத்தை அரிந்து கொண்டான்' என்ற செய்திகூடப் (பாசெப, 1999, ப. 142) பாண்டி நாட்டில் அக்காலக் குரு பக்தியின் வெளிப்பாடே எனலாம்.

[20] கட்டளை = நிலத்தின் தரத்தைக் குறிப்பது.

பெருமாள் கோயிலுக்கு ஸ்ரீவல்லபபுரத்து[21] வியாபாரி தூண் செய்து வழங்கியமையும்[22] தென்கல்லக நாட்டுப் பகுதியில் அக்கால வணிகர்கள் ஆற்றிய சமயப் பணிக்கு உகந்த சான்றுகளாகும்.

தெப்பத்துப்பட்டி, தெற்கு மலையினை ஒட்டிக் கிழக்கு நோக்கிய பழமையான சிவன் கோயில் உள்ளது. இக்கோயில் கருவறை விதானத்தின் வடகிழக்கு மூலையில் சதுரவடிவ ஓட்டை[23] ஒன்று காணப்படுகிறது (இ5, நிழ, பஎ 81). இதனால் இக்கோயிலை 'ஓட்டக்கோயில்' எனவும் 'ஓட்ட முனியாண்டி கோயில்' எனவும் மக்கள் அழைக்கின்றனர். இக்கோயில் இன்று முற்றிலும் வழிபாடற்ற நிலையில் வழிப்போக்கர்கள் தங்கும் சாவடி போன்று காட்சியளிக்கிறது. இக்கோயிலின் கட்டுமான அமைப்பு விக்கிரமங்கலம் மதுரோதைய ஈசுவரர் கோயிலினை ஒத்ததாகக் காணப்படுவது இங்கு முக்கியமாகச் சுட்டத்தக்கதாகும் (இ5, நிழ, பஎ 82). இதனால், இக்கோயிலைப் பாண்டியர்காலக் கோயிலாகக் கருதலாம். எனினும், இக்கோயிலில் கல்வெட்டுகள் எவையும் காணப்படாமை[24] ஆச்சரியமான ஒன்றாகும்.

---

[21] ஸ்ரீவல்லபன் பெயரால் இவ்வூர் (குருவித்துறை) ஸ்ரீவல்லபபுரம் என அழைக்கப்பட்டது.

[22] குருவித்துறைச் சக்கரத்தாழ்வார் கோயில் கருவறை முன்பாகத் தூண்களுடைய மண்டபத்தின் வலப்பக்கத் தூணில் உள்ள கல்வெட்டு, ஆய்வாளரால் படிக்கப்பட்டது

ஸ்வஸ்திஸ்ரீ சீவல்
லவபுரத்து வியாப
ாரி உரையாவுடை
வில்லி சிறியான் ஆ
ன இருந்தகோன்
சேவிச்ச தூண்1

[23] பாண்டி நாட்டிலுள்ள வேறு கோயில்களில் கருவறையின் விதானத்தில் ஓட்டை இருப்பதாகத் தெரியவில்லை. கருவறைக்கு ஒளி கிடைப்பதற்காகக்கூட இது அமைக்கப்பட்டு இருக்கலாம். எனினும், ஆகம விதிகளின்படி இந்த ஓட்டை எதற்காக என்பது ஆராயப்படவேண்டும்.

[24] இத்தகைய பழமையான கோயில்களில் ஒரு கல்வெட்டுகூட இல்லாமல் இருப்பது இது மட்டுமே இருக்கும். ஒருவேளை கல்வெட்டுகள் இருந்து அழிக்கப் பட்டிருக்கலாம்.

இதனால் இக்கோயிலோடு தொடர்புடைய அரசு மரபு சார்ந்த வரலாற்றுச் சிறப்புகளை வெளிக்கொணர இயலவில்லை. இருப்பினும், இக்கோயிலில் காணப்படும் ஒருசில சிற்பங்களையும் தூண்களின் அமைப்பினையும் கொண்டு ஓரளவு செய்திகளை அறியமுடிகிறது. கருவறை பிற்காலப் பாண்டியர்களுடையதாக இருந்தாலும் மகாமண்டபத்தை தூண்களின் மேல்பகுதி பூமுனை அமைப்புடன் காணப்படுவதால் (இ5, நிழ, பள 83) இம்மண்டபம் விஜயநகர்[25] காலத்தைச் சேர்ந்ததாக உறுதிசெய்யலாம். முகமண்டபம், நாயக்கர் காலத்தது. இக்கோயிலின் திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் காணப்படும் பெரிய விநாயகர் சிற்பம் நாயக்கர் காலத்ததாகும். நாயக்கர் காலத்தில் விநாயகர் சிற்பங்கள் பெரியவையாக வடிக்கப்படும் வழக்கம் தோன்றிற்று. இதற்கு 'முக்குறுணி விநாயகர்' எனப் பெயர் வழங்கப்படுகிறது. நாயக்கர் காலத்தில் பெரிய அளவிலான முக்குறுணி விநாயகர் சிற்பம் ஒன்று மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் எழுப்பபட்டுள்ளதை இன்றும் காணலாம். தென்கல்லக நாட்டுப் பகுதியில் உள்ள பெரும்பாலான கோயில்களில் பெரிய விநாயகர் சிற்பம் காணப்படுவதும் நாயக்கர்காலத் தாக்கமாகும். காட்டாக, சித்தாலைச் சுந்தரவல்லியம்மன் கோயில் விநாயகரைக் குறிப்பிடலாம் (இ5, நிழ, பள 84). மகாமண்டபத்தில் காணப்படும் ஒரு தனிக்கல்லில் வடிக்கப்பட்டுள்ள அரசனின் சிற்பம் (இ5, நிழ, பள 86) மிகப் பழமையானதாகக் (பொ.ஆ. 11-12 ஆம் நூ.) காணப்படுவது இக்கோயிலுக்கும் பாண்டியர்களுக்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

கருவறைத் தென்பக்க வெளிப்புறச் சுவரின் மாடத்தில் உள்ள பாலகணபதியின் சிற்பமும் (இ5, நிழ, பள 86) பழமையானதாகக் (பொ.ஆ.

---

[25] விஜயநகர் காலத்துச் சித்தமகாலிங்கசுவாமி கோயில் மலை, தெப்பத்துப்பட்டியில் இருந்து 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இது, இப்பகுதியில் அக்காலத்தில் விஜயநகர ஆட்சியின் செயல்பாடுகள் சிறப்பாக இருந்தமையைக் காட்டுவதாகக் கொள்ளலாம்.

10ஆம் நூ.) காணப்படுகிறது. இப் பாலவிநாயகர் சிற்பம் போன்று இந்நாட்டுப் பகுதியில் உள்ள தென்கரை மூலநாதர் கோயில் (இ5, நிழ, பள 65), விக்கிர மங்கலம் மதுரோதைய ஈசுவரர் கோயில் என அனைத்துக் கோயில்களிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, மேற்சுட்டிய மூலநாதர் கோயில் விநாயகர் சிற்பம் பொ.ஆ. 9-10ஆம் நூற்றாண்டுக்கு உகந்தது என்பது சிறப்புக்குரியது. கருவறை வெளிப்புறச் சுவரின் மாடத்தில் இதுபோன்ற பாலவிநாயகர் சிற்பம் இந்நாட்டுக் கோயில்களில் மட்டுமல்லாமல் இந்நாட்டின் எல்லையில் அமைந்துள்ள தென்முட்ட நாட்டின் மேலத்திருமாணிக்கம் மீனாட்சி சொக்கநாதர் கோயிலிலும் பாகனூர்க் கூற்றத்துச் சோழவந்தான் வட கரையிலுள்ள பிரளயநாதர் கோயிலிலும் காணப்படுகின்றது. இவ்விரு கோயில்களிலும் காணப்படும் சிற்பங்களில் பிரளயநாதர் கோயில் பாலகணபதி (இ5, நிழ, பள 87) சிற்ப அமைப்பைக் கொண்டு பொ.ஆ. 8ஆம் நூற்றாண்டு எனக் கருதலாம். பிரளயநாதர் கோயில் பிற்காலக் கோயிலாகக் காணப்படுவதால் இப்பாலகணபதி சிற்பம் முன்னர் இப்பகுதியில் வேறு இடத்திலிருந்து பின்னர் பாதுகாப்புக் கருதி இங்குக் கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கலாம். எவ்வாறாயினும், பாலவிநாயகர் வழிபாடு என்பது இப்பகுதியின் தொன்மையான வழிபாடாகக் கொள்ளலாம்.

உசிலம்பட்டியின் மேற்கே தொட்டப்பநாயக்கனூர் என்னும் ஊரில் நாயக்கர்காலக் கோயில் இரண்டு சன்னதிகளாகக் காணப்படுகின்றது (இ5, நிழ, பள 88). அப்பகுதி மக்களுக்கும் இக்கோயிலுக்கும் எவ்விதத் தொடர்பும் இன்றி முற்றிலும் சிதைந்துள்ள நிலையில் இக்கோயில் காட்சியளிக்கிறது. அடித்தளம் (foundation) இல்லாமல் பூமியின் மேல் பரவியுள்ள பாறையின்மீது கற்களைக் கொண்டு அடுக்கி இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் கட்டுமானத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள கற்கள் தரமற்றவையாக இருப்பதும் இக்கோயில் நீண்டகாலம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முடியாமல் போனதற்கு ஒரு முக்கியக் காரணமாகவும் இருக்கலாம். எவ்விதக்

கல்வெட்டுகளும் இங்குக் காணப்படவில்லை என்றாலும்கூட நாயக்கர்காலக் கோயில் கட்டுமானப் பாணிக்கு இக்கோயில் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அதிட்டானத்திற்கு மேலுள்ள காலபாகத்தில் தொடர்ச்சியாகப் பல்வேறு கடவுளர்களின் சிற்பங்களும் பிற சிற்பங்களும் புடைப்புருவங்களாக மிக நேர்த்தியாகக் கண்கவரும் வண்ணம் வடிக்கப்பட்டுள்ளமை இக்கோயிலின் சிறப்பாகும்.[26] இங்குக் காணப்படும் சிற்பங்களில் முருகன் (இ5, நிழ, பஎ 106), பிச்சாடனர் (இ5, நிழ, பஎ. 90), அனந்தசயனர் (இ5, நிழ, பஎ 91), வீரபத்ரர் (இ5, நிழ, பஎ 92), சிவனின் மாறுகால் நடனம் (இ5, நிழ, பஎ 93), காளி நடனம் (இ5, நிழ, பஎ 94), முனிவரும் நடனமங்கையும் (இ5, நிழ, பஎ 95) மற்றும் குரங்கும் ஆடல்மகளிரும் (இ5, நிழ, பஎ 96) போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

செக்கானூரணி, கண்ணனூருக்கு அருகிலுள்ள ஒரு குன்றின்மீது கிழக்கு நோக்கிய முருகன் கோயில் உள்ளது (இ5, நிழ, பஎ 97). இதனால் இவ்விடம் குமரன்கோயில்பட்டி என அழைக்கப்படுகிறது. குன்றின் மீதுள்ள சன்னதியில் கடவுளர் உருவம் எதுவும் இல்லை. எனினும், இச்சன்னதியின் வெளிப்புறச் சுவரில் காணப்படும் கல்வெட்டுக் (இ4, எ. 17) குறிப்பினைக் கொண்டு இக்கோயிலை அழகர் நாயக்கர் என்பவர் கட்டிமுடித்தமையை அறியமுடிகிறது. இத்திருப்பணியைப் பிந்தைய நாயக்கர் காலத்ததாகக் கொள்ளலாம். எனினும், இக்குன்றினை முதலில் சமணர்கள் பயன்படுத்தியதற்கான கூறுகள் காணப்படுகின்றன. இக்குன்றின் வெளித்தோற்றம் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அம்மன்கோயில்பட்டி மலையில் உள்ள சமணர் குகைத் தலத்தினைப் (இ5, நிழ, பஎ 59) போன்ற அமைப்புடையதாகக் காணப்படுகிறது. இதில் விநாயகர் உருவமும் செதுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள முற்றிலும் சிதைக்கப்-பட்ட முருகன் சிற்பம் (இ5, நிழ, பஎ 98) நாயக்கர்காலச் சிற்பக்கலைப் பாணியில் அமைந்துள்ளது. இடிந்துபோன அடிக்கட்டுமானத்திலுள்ள கல்லில்

---

[26] சிற்ப மற்றும் கட்டடக்கலை மாணவர்கள் குறிப்பாகக் கலை வரலாற்று மாணவர்கள் பார்வையிட வேண்டிய கோயிலாகும்.

இரு பல்லிகளின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளமை (இ5, நிழ, பட 99) குறிப்பிடத்தக்கது. இது வளமையைக் குறிப்பதாக இருக்கலாம். எனினும், ஒரு காலத்தில் சமணர் வாழ்ந்த குன்றாக இருந்து பின்னர் விநாயகர் மற்றும் முருகக் கடவுளர்களின் வழிபாட்டுத் தலமாக மாற்றம் பெற்றுள்ளமையும் நன்கு புலப்படுகிறது. மேலும், நாயக்கர் காலத்தில் அங்காள ஈசுவரி வாலகுருநாதன் என்னும் பெயரில் பல இடங்களில் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. இதற்குக் காட்டாகத் தங்களாச்சேரி மற்றும் வாலாந்தூர்க் கோயில்களைக் கூறலாம். சித்தமலை மகாலிங்கம் கோயில் விஜயநகரக் காலத்ததாகும். திடியன் கைலாசநாதர் கோயில் மற்றும் மேலக்கால் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்கள் பழமையானவையாகக் காணப்பட்டாலும் நாயக்கர் காலக் கூறுகளே இப்போது விஞ்சி நிற்கின்றன.

சிற்பங்கள்

தென்கல்லக நாட்டுக் கோயில்களில் சில பழமையான சிற்பங்களும் காணப்படுவது சிறப்புக்குரியதாகும். ஆனையூர் ஐராவதீசுவரர் கோயிலில் உள்ள சிற்பங்களில் ஜேஷ்டா தேவி (இ5, நிழ, பட 100) சிற்பம் மிகவும் முக்கியமானதாகும். இச்சிற்ப அமைப்பினைக் கொண்டு இதன் காலத்தைப் பொ.ஆ. 9-10ஆம் நூற்றாண்டாகக் கருதமுடியும். தென்கல்லக நாட்டுப் பகுதியில் வேறு எங்கும் இத்தேவியின் சிற்பத்தைக் காணமுடியவில்லை என்பதை இங்குச் சுட்டுதல் தகும். எனினும், 8ஆம் நூற்றாண்டிலேயே இத்தேவி வழிபாடு பாண்டி நாட்டில் இருந்துள்ளது. ஆகவே, ஆனையூர் ஜேஷ்டா தேவியைச் சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் காலத்ததாகக் கருதவும் இடமுண்டு. இத்தேவி, 'மூதேவி' எனப் பிற்காலத்தில் தவறாகச் சித்தரிக்கப்பட்டதால் வழிபாட்டில் முக்கியத்துவம் இழந்தவளாகக் காணப்படுகிறாள். ஆனால், இப்பெண் தெய்வமும் காக்கும் சக்தி உடையவளே என்பதைத் திருக்குறள் வாயிலாகவும் பிற சமூக நம்பிக்கைகளின் வாயிலாகவும் அறியலாம் (ஜெயக்குமார், 2008, பக். 47-51). இக்கோயிலின் அர்த்தமண்டப

நுழைவாயிலின் வடக்குப் பக்கத்தில் உள்ள விநாயகர் சிற்பமும் (இ5, நிழ, பள 101) மேற்சுட்டிய ஜேஷ்டாதேவியின் காலத்தை ஒத்ததாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

தென்கல்லக நாட்டுக் கோயில்களில் காணப்படும் துவாரபாலகர் சிற்பங்களில் ஆனையூர் ஐராவதேசுவரர் கோயிலின் அர்த்தமண்டப நுழை வாயிலின் முன்பாக இருபுறமும் நின்றநிலையில் காணப்படும் துவாரபாலகர் சிற்பங்களே மிகப் பழமையானவையாகும் (இ5, நிழ, பள 102 மற்றும் 103). மிகவும் பிரம்மாண்டமான, பார்ப்பவர்கள் அஞ்சுகின்ற வகையில் வடிக்கப்பட்டுள்ள இத்துவாரபாலகர் சிற்பங்கள் சோழர்காலக் கலைப்பாணியை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளமை சிறப்புக்குரியதாகும்.

ஆனையூர் கோயிலின் அர்த்தமண்டபம் நுழைவாயிலின் தெற்குப் பக்கம் உள்ள முருகன் சிற்பமும் (இ5, நிழ, பள 104) மகாமண்டபத்தில் மீனாட்சி சன்னதிக்கு முன்பாக ஒரே கல்லில் வடிக்கப்பட்டுள்ள நந்தியும் (இ5, நிழ, பள 105) விஜயநகர அல்லது நாயக்கர் ஆட்சியின் தொடக்க காலத்தைச் சேர்ந்தவையாகக் காணப்படுகின்றன. இங்குள்ள மீனாட்சி சிற்பம் (இ5, நிழ, பள 106) மிக அழகாக, சாந்த முகத்துடன், புன்னகையுடன், பல மடிப்புகளுடன் பூ வேலைப்பாடுடைய ஆடை மற்றும் ஆபரணங்களுடன் மிக அலங்காரமாக இடப்பக்கம் சாய்ந்து நின்ற நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. இச்சிற்ப அமைவினைக் கொண்டு பின் இடைக்காலத்தைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம். சோழர்களுக்கும் நாயக்கர்களுக்கும் இடைப்பட்ட கலைப்பாணியை அதாவது இவ்விரண்டு அரச மரபுகளின் கலைக்கூறுகளின் தாக்கங்களையும் பெற்றுள்ளமை இச்சிற்பத்தின் சிறப்பு எனக் கருதலாம். குறிப்பாக, நாயக்கர் காலத்தின் தொடக்கக் காலகட்டத்தைச் சேர்ந்தது இச்சிற்பம்.

மேலே சொல்லப்பட்டுள்ள சமயம் சார்ந்த சிற்பங்கள் தவிரச் சமயம் சாராத சிற்பங்கள் சிலவும் இப்பகுதியில் காணப்படுகின்றன. தென்கரை

மூலநாதர் கோயிலுக்கு வெளியே வடபுறம் ஒரு கற்சிற்பம் தலையை அரிந்து கொள்வது போலக் காணப்படுகிறது (இ5, நிழ, பள 107). தலைப்பலி நடுகல் அல்லது சாவான்கல் எனப்படும் இச்சிற்பம் இடைக்காலத்தைச் சேர்ந்ததாகும். நாயக்கர் கால 'வீரன் ' சிற்பங்கள் தென்கல்லக நாட்டுப் பகுதியில் பல இடங்களில் காணப்படுகின்றன. இப்பகுதியிலுள்ள கோயில்களுக்கு முன்பாகவும் வயல்வெளிகளிலும் சாலை ஓரங்களிலும் பரவலாக இச்சிற்பங்கள் நடப்பட்டுள்ளதைக் காணலாம். காட்டாக, ஆரியபட்டிக் கல்யாணகருப்புசாமிக் கோயிலுக்கு முன்பாகவும் (இ5, நிழ, பள 108) சித்தாலைச் சுந்தரவல்லியம்மன் கோயிலுக்கு முன்பாகவும் (இ5, நிழ, பள 109) காணப்படும் சிற்பங்களைக் குறிப்பிடலாம். இத்தகைய சிற்பங்கள் கண்ணனூர், கன்னியம்பட்டி, போத்தம்பட்டி, புத்தூர், எருமார்பட்டி எனப் பல இடங்களிலும் காணப்படுகின்றன. பொதுவாக இக்கற்களை 'பட்டவன்சாமி' (அல்லது பட்டசாமி) எனவும் மக்களுக்காகத்தான் சார்ந்த ஊருக்காக நடந்த சண்டையில் உயிர் நீத்ததால் 'வீரக்கல்' எனவும் அழைப்பதால் இவற்றைப் பிற்கால நடுகற்களாகக் கொள்ளலாம். பொதுவாக இச்சிற்பங்கள் கைகளில் வளையல்கள், காதில் குண்டலம், காலில் காப்பு, கழுத்தில் ஆபரணங்கள், இடையில் குறுவாள், கைகளில் குறுவாள், ஈட்டி மற்றும் வேல் போன்றவற்றுடன் காட்சியளிக்கின்றன. சில நடுகற்களில் நாய்களும் (சிறிய நாய், பெரிய நாய்) இடம்பெற்றுள்ளதைக் காணலாம். புதுப்பட்டி மற்றும் குமாரக்கோவில் ஆகிய இடங்களில் காணப்படும் நடுகற்களில் (செல்வகுமார், 1999, ப. 105) பாய்ந்து செல்லும் குதிரையின்மீது கடிவாளத்தைப் பிடித்தவாறு அமர்ந்துள்ள வீரனின் உருவம், குதிரையின்கீழ்க் குடை பிடித்தவாறு நிற்கும் உருவம், ஆண் பெண் உருவங்கள் எனக் காட்டப்பட்டுள்ளன. இச்சிற்பங்களிலும் ஆயுதம், கேடயம் போன்றவை காணப்படுகின்றன. மேற்சுட்டிய அனைத்து நடுகல் சிற்பங்களையும் அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் வழிபட்டு வருகின்றனர். இவ்வழிபாடு முன்னோர் வழிபாடாகக்

கருதப்படுகிறது. இச்சிற்பங்கள் பொதுவாக நாயக்கர் காலத்தின் பிற்பகுதியைச் சேர்ந்தவை எனில் மிகையன்று.

கொடிக்குளம் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள குதிரையுடன் காணப்படும் வீரனின் சிற்பங்கள் (இ5, நிழ, பள 110) நாயக்கர் காலத்துச் சிற்பக் கலைப் பாணியைக் கொண்டவை என்றாலும்கூட மேற்சுட்டிய சிற்பங்களில் இருந்து முற்றிலும் வித்தியாசமானவை என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். கனமான கற்பலகைகளில் நாயக்கர் கால கலைநுட்பத்துடன் இச்சிற்பங்கள் இரண்டும் மிக நேர்த்தியாக வடிக்கப்பட்டுள்ளன. நூற்றாண்டு காலமாக மண்ணில் புதைந்து கிடந்ததால் உருவங்களின் முகங்கள் சற்று தேய்ந்துள்ளன. ஒருவேளை இம்முகங்களை ஒருகாலக் கட்டத்திலோ அந்த உருவத்துக்கு உரியவர்கள் வாழ்ந்த சமகாலத்து மக்களோ சிதைத்திருக்கலாம். ஒரு சிற்பத்தில் உயர் வகையைச் சேர்ந்த, கம்பீரமான தோற்றத்தை உடைய ஆண் குதிரையின் மீது அமர்ந்துள்ளவர் விறைப்புடன் கூடிய அக்குதிரையைச் சாட்டையை ஓங்கியவாறு தன் கட்டுப்பாட்டில் கொண்டுவருவது போலவும், கீழே நிற்கும் பணியாள் குதிரையின் மீது அமர்ந்துள்ளவருக்கு உதவுவது போலவும், பெண் ஒருவர் அச்சத்துடன் நிற்பது போலவும், நாய் ஒன்றும் காட்டப்பட்டுள்ளனர். இந்நாய் நன்றாக வளைந்துள்ள வாலுடன், சதைப் பிடிப்புடைய கால்களுடன், நிமிர்ந்த காதுகளுடன் கட்டுமஸ்தான உடல் வாகைக் கொண்டதாகவும் காட்டப்பட்டுள்ளது. மேற்சுட்டியவற்றைக் கொண்டு பார்க்கும்போது இச்சிற்பம் வேட்டைக்குச் செல்லுகின்ற காட்சியை நினைவூட்டுகிறது. உலகப்புகழ்பெற்ற விலங்கியலாளரான டெஸ்மாண்ட் மோரிஸ் எழுதிய "Dogs-The Ultimate Dictionary of Over 1000 Dog Breeds" நூலில் காணப்படும் குறிப்புகளை மேற்கோள் காட்டி ராணிப்பேட்டை அரசு கால்நடை மருத்துவரும் இந்திய நாய் இனங்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து வைத்திருப்பவருமான கிஷோர்குமார் தஞ்சாவூர்ப் பெரியகோயில் சோழர்கால ஓவியங்களில் காணப்படும் நாய் குறித்து "அவ்வோவியத்தில்

காட்டப்பட்டுள்ள நாய் தமிழ்நாட்டு நாய் இனங்களில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் அலங்கு நாய் என்றும் வேட்டைக்கும் பாதுகாவலுக்கும் அலங்கு நாயை மிஞ்சியது வேறு இல்லை என்றும் தமிழக நாய்களைப் பொறுத்தவரை ராஜபாளையம், சிப்பிப்பாறை ஆகிய இரண்டு நாய் இனங்களும் நாயக்கர் ஆட்சிக்காலத்தில் தமிழகத்துக்கு வந்தவை என்றும்" தெரிவிப்பதால் (தி இந்து, *15.10.2014*, ப. 7) சோழர் மற்றும் நாயக்கர் ஆட்சிகளில் வேட்டைக்கெனத் தனித்துவம் வாய்ந்த நாய்கள் இருந்தன என்பதும் அவ்வகையில் மேற்சுட்டிய சிற்பத்தில் காட்டப்பட்டுள்ள நாய் அக்காலத்தில் இருந்த வேட்டைநாய் இனங்களில் ஒன்று என்பதும் புலப்படுகிறது.

அடுத்த சிற்பத்தில் ஒருவர் நடந்து செல்வது போலவும் வில்லின் நாணினை இழுத்து அம்பினை எய்துவது போலவும் காட்டப்பட்டுள்ளது. வலப்பக்கத் தோளின் பின்புறம் தூணி (அம்புகள் வைக்கும் கூடு) காட்டப் பட்டுள்ளது. இச்சிற்பத்திலும் பெண் ஒருத்தி அச்சத்துடன் அவரின் பின்னால் நிற்பதுபோலக் காட்டப்பட்டுள்ளது. மேற்சுட்டிய இரு சிற்பங்களிலும் உள்ளவரின் தோற்றம் மற்றும் ஆடை அணிகலன்கள் ஒரு சாதாரண மனிதனுக்கான தோற்றமின்றி ஓர் அரசருக்குரிய தோற்றத்தைக் காட்டுகின்றன. குதிரையின் மீது அமர்ந்து வந்து (ஒரு சிற்பத்தில்) வேட்டைக்குச் செல்வதுபோல (அடுத்த சிற்பத்தில்) காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், மதுரை நாயக்கர் மன்னர்களில் சிறந்தவராகக் கருதப்படும் திருமலை நாயக்கர் நாகமலை, விக்கிரமங்கலம், மேலக்கால் மற்றும் கொடிக்குளம் பகுதிகளில் அடிக்கடி வேட்டையாடுவதற்காக வந்து சென்றதற்கான சான்றுகள் ஏற்கனவே சில பட்டயங்களின் வாயிலாக அறியப்பட்டுள்ளன (சாந்தலிங்கம், *2012*, பக். *196-198*). திருமலை நாயக்கர் ஒரு சிறந்த குதிரை வீரராகவும் இருந்துள்ளார் (Rajaram, 1982, p. 16). இவற்றின் அடிப்படையிலும் சிற்பங்களில் உள்ளவரின் தோற்றம் குறிப்பாக முகம் மதுரை புதுமண்டபத்தில்

காணப்படும் திருமலை நாயக்கரின் சிற்பத்தினை ஒத்திருப்பதாலும் மேற்சுட்டிய இரண்டு சிற்பங்களிலும் உள்ளவர் திருமலை நாயக்க மன்னர் என எண்ணத் துணியலாம்.[27] மேலும், தென்கல்லக நாட்டுப் பகுதியில் காணப்படும் மேலே காட்டப்பட்டுள்ள நாயக்கர்காலக் குதிரைவீரன் சிற்பங்கள், நடுகல் சிற்பங்கள் மற்றும் பாண்டி நாட்டின் பிற பகுதிகளில் காணப்படும் இத்தகைய சிற்பங்கள் என அனைத்தையும் கொடிக்குளம் திருமலை நாயக்கர் (காலம்) சிற்பங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் கொடிக்குளம் சிற்பங்கள் இரண்டும் அரிதான தனித்துவம் வாய்ந்தவை என்பது புலப்படும்.

செப்புப் படிமங்கள்

பாண்டி நாட்டில் பொ.ஆ. 9-10ஆம் நூற்றாண்டிலிருந்துதான் செப்புப் படிமங்கள் காணப்படுகின்றன (*சந்திரமூர்த்தி, 2004, பக். 164-174*). தென்கல்லக நாட்டிலுள்ள கோயில்களில் தென்கரை மூலநாதர் கோயில் மற்றும் ஆனையூர் ஐராவதீசுவரர் கோயில்களுக்கெனச் செப்புப் படிமங்கள் பல உள்ளன.

---

[27] களஆய்வில் இச்சிற்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை 'செய்தியாக' பெரும்பாலும் அனைத்து நாளிதழ்களிலும் வெளிவந்தது. The New Indian Express (*9.04.2014*), தினமணி (*9.04.2014*), The Hindu (*10.04.2014*) மற்றும் தினமலர் (*10.04.2014*). இச்செய்தியைப் படித்த திருச்சி கண் மருத்துவர் இரா.கலைக்கோவன் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அன்றைய துணைவேந்தர் திரு.ம.திருமலைக்கு எழுதிய கடிதத்தில் இச்சிற்பங்கள் வேட்டைக்குச் செல்வதாகத் தெரியவில்லை; நாயக்க மன்னர் திருமலையும் இல்லை; இதைக் குதிரை மீது அமர்ந்திருப்பவனுக்கும், கீழே நிற்பவனுக்கும் இடையே சண்டை நடப்பதாகக் கொள்ளலாம் எனவும் கருத்துத் தெரிவித்திருந்தார். இவரின் கருத்துகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என ஆய்வாளரால் பதில் அனுப்பப்பட்டது. எனினும், இச்சிற்பங்கள் குறித்து ஆய்வாளர் கொண்டுள்ள கருத்தில் எவ்வித மாற்றத்திற்கும் இடமில்லை என்பதும் மொழி, இனம் சார்ந்திராத தமிழகப் பல்துறை வல்லுநர்களைக் கொண்டு இச்சிற்பங்கள் என்னவாக இருக்கும் என்பதை மெய்ப்பிக்க ஆய்வாளர் எப்போதும் மகிழ்வுடன் காத்திருப்பார் என்பதை இந்த ஆய்வின் முடிவாகத் தெரிவிப்பது ஆய்வாளரின் கடமையாகும்.

ஆனையூர் ஐராவதேசுவரர் கோயிலுக்குரிய செப்புப் படிமங்கள் சோழவந்தான் ஜெனகை மாரியம்மன் கோயிலில் வைக்கப்பட்டுள்ளன. பொதுவாகத் தமிழகச் செப்புப் படிமங்களில் நடராஜர் படிமம் உலகளவில் சிறப்புக்குரியதாக விளங்குகிறது. மூலநாதர் கோயிலில் இருக்கும் ஆடும் கூத்தனின் படிமம் பிற்காலத்தைச் சேர்ந்ததாகக் குறிப்பாகப் பொ.ஆ. 18ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நகரத்தார் கலைப்பாணியில் அமைந்துள்ளது (சந்திரமூர்த்தி மற்றும் வேதாசலம், 2002, ப. 207).

ஜெனகை மாரியம்மன் கோயிலில் உள்ள ஆனையூர் ஐராவதீசுவரர் கோயிலின் ஆனந்ததாண்டவ மூர்த்தி என்னும் ஆடவல்லான் படிமம் (இ5, நிழ, பஎ 111) பாண்டியர் மற்றும் சோழர் கலைக்கூறுகளைக் கொண்டதாகப் பிற்காலப் பாண்டியர் படைப்புகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.[28] இப்படிமம் ஐம்பொன் கலவையால் கனமாக வார்க்கப் பட்டுள்ளதோடு கலையழகும் மிக்கது. தாமரை இருக்கையின்மீது விழுந்து கிடக்கும் முயலகன் மேல் வலத் திருவடியைக் குறுக்காக ஊன்றி இடத் திருவடியைத் தூக்கி ஆடும் நிலையில் நான்கு கரங்களுடன் காட்சியளிக்கிறது. மேல் வலக்கை ஒலிமிக்க உடுக்கையை டமருக முத்திரையிலும், மேல் இடக்கை எரியகலை அர்த்தசந்திர முத்திரையிலும் கொண்டு காட்சியளிக்கிறது. முன் வலக்கை அபய முத்திரையிலும் முன் இடக்கை மார்பின் குறுக்கே நீண்டு வேழ முத்திரையிலும் காட்டப்பட்டுள்ளன. நீண்ட சடைமுடியை உயர்ந்த மகுடமாக்கி அதன் முன்புறத்திலும் பக்கங்களிலும் மலர்ந்த பூரிமங்கள் பதித்து எழில்மிகு தலைக்கோலமாக அலங்கரித்துள்ளனர். இப்படிமத்தில் வலக்காது அணியின்றி நீண்ட தொள்ளைக் காதாகவும் சுருண்ட ஓலைக் குழையோடும் இடக்காது பத்ரகுண்டலத்துடனும் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இடப்பக்கப் பின் தோளை ஒட்டிச் சடைக்கற்றையின் பகுப்பும், நெற்றியில் இரத்தினப் பட்டம்,

[28] இப்படிமச் சிறப்புகளை வேறு ஆய்வாளர்கள் எவரும் தங்கள் ஆய்வுகளில் அல்லது நூல்களில் இதுவரை வெளிப்படுத்தவில்லை என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

செவிகளில் மகரவட்டக் குழை, தோளில் வாகுமாலை, கழுத்தில் முத்தாரம், கண்டிகை, சரப்பளி, மேற்கையில் இலைக்கருக்கணி முகப்புடைய தோள்வளை, முழங்கையில் கடகம், முன்கையில் மூன்று வகைக் காப்பு, சிறிய மேல் அங்கி, வயிற்றைச் சுற்றிக் கச்சை, இடையில் இருந்து மேல் தொடை வரை வேலைப்பாடுமிக்க தோல் ஆடை, இடையைச் சுற்றிலும் பொன்னாலான நாண், மலர்க் கச்சை, அரைப்பட்டிகை, இடைவார் ஆகியன அணிசெய்கின்றன. இடையின் பக்கங்களில் குஞ்சங்கள் சரிந்த நிலையில் உள்ளன. பாதங்களில் சலங்கை கோத்த கழலும், கணுக்காலில் தண்டையும், கருக்கணி முகப்புடைய வளையமும் அலங்கரிக்கின்றன. இத்திருமேனியின் அகன்ற நுதலும், வளைந்த புருவமும், நெற்றிக்கண்ணும், நீளமான நாசியும், விரிந்த இடையும், ஒளிமிக்க பார்வையும், நீண்டு ஒடுங்கிய முகமும், புன்னகை புரியும் அதரமும், அங்கங்களின் அசைவும், ஆடை அணிகலன்களும் மிகக் கவனமாக வார்க்கப்பட்டுள்ளமை சிறப்புக்குரியது.

மேற்சுட்டிய ஆனையூர் ஐராவதீசுவரர் கோயிலில் காணப்படும் முதலாம் இராஜேந்திரனின் 6ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (பொ.ஆ. 1018) 16 பலம்[29] எடையுள்ள வெண்கலத்தாலான இரண்டு திருவடி நிலைகளை[30] இக்கோயிலின் (திருக்குறுமுள்ளூர் உடையார் திருவக்னீசுவரர்) தேவரடியார் பூண்டான் சோலை வழங்கியமை பற்றித் தெரிவிக்கிறது (இகஆ 1962-63, எ.502 மற்றும் ஜெயக்குமார், 2008, ப. 138). ஆக, முதலாம் இராஜேந்திரனின் காலத்தில் வெண்கலத்தாலான விக்கிரக பீடம் செய்யப்பட்டுள்ளதால் மேற்படி நடராஜர் படிமம் முதலாம் இராஜேந்திரன் அல்லது வீரபாண்டியன் காலத்தில் வடிக்கப்பட்டதாகக் கொள்ள இடமுண்டு.

---

[29] பலம் என்பது அக்காலத்தில் உலோகத்தினை நிறுப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட எடை அளவு.

[30] திருவடி நிலை என்பது விக்கிரக பீடம் ஆகும்.

படிமக்கலையில் பாண்டியர் பெற்றிருந்த திறமைக்குச் சீரிய சான்றாக இதுவரை விளங்குவது கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பாக மதுரை மாவட்டம் பொறுப்பு மேட்டுப்பட்டியில் புதையலில் கண்டுபிடிக்கப்பட்டு இப்போது சென்னை அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள பொ.ஆ. 10-11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நடராஜர் திருமேனி (Sivaramamurti, 1963, pp.65 and 78) ஆகும். வழக்கத்திற்கு மாறாக இடக் காலை ஊன்றி (பொதுவாக வலக் கால் ஊன்றியிருக்கும்) ஆடுவது இப்படிமத்தின் சிறப்பாகும். மேலும், இப்படிமத்தில் வழக்கத்திற்கு மாறாக வலக்கையில் அனலும் இடக்கையில் துடியும் காணப்படும். இதுபோன்ற தனிச் சிறப்பு வாய்ந்த உருவத்தை மதுரை வெள்ளியம்பலத்திலும் காணலாம். பாண்டிய மன்னனின் வேண்டுகோளை ஏற்றுச் சிவபெருமான் கால்மாறி ஆடியதாகத் திருவிளையாடற் புராணம் குறிப்பிடுவதை ஆய்வாளர்கள் இப்படிமத்தோடு தொடர்புபடுத்துவர். இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க நடராஜர் படிமமும் தென்கல்லக நாட்டுப் பகுதியில்[31] கிடைத்திருப்பது கூடுதல் சிறப்பாகும்.

சைவ சமயம் சார்ந்த பண்பாட்டுக்கு உகந்த தலங்களைப் பெற்றிருந்த தென்கல்லக நாடு நாயக்கர் காலத்தின் இறுதிப் பகுதியில் ஒரு இராஜதானி மற்றும் எட்டு நாடுகளாகப் பிரிக்கப்பட்டு[32] (கண்ணன், 2006, பக். 151-239) தங்களுக்கெனத் தனித்தனிக் கோயில்கள், தனித்தனிக் கடவுளர்கள் (காட்டாக : வாலாந்தூர் (அங்காள ஈசுவரி), ஆரியபட்டி (கல்யாணக் கருப்பு சாமி),

---

[31] இப்படிமம் கண்டுபிடிக்கப்பட்ட பொறுப்புமேட்டுப்பட்டி என்ற இடம் தென் கல்லக நாட்டில் நாயக்கர் காலத்தில் விரிவாக்கம் செய்யப்பட்ட நிலப் பகுதியில் திடியனுக்கும் சிந்துபட்டிக்கும் இடையே அமைந்திருக்கிறது.

[32] தென்கல்லக நாடு இப்போது உரப்பனூர் இராஜதானி மற்றும் திடியன் நாடு, வாலாந்தூர் நாடு, கருமாத்தூர் நாடு, புத்தூர் நாடு, பாப்பாபட்டி நாடு, கொக்குளம் நாடு, வேப்பனூத்து நாடு மற்றும் தும்மக்குண்டு நாடு என எட்டு நாடுகளாகக் காணப்படுகின்றது.

அய்யனார்குளம்-நல்ல குரும்பன், திடியன்-சோணைமுத்தையா, பாப்பாபட்டி-மாயாண்டிசாமி, ஒச்சாண்டம்மன், சித்தாலை-சுந்தர வல்லியம்மன் (இ5, நிழ, பள 112), தும்மக் குண்டு-வைரவசாமி (இ5, நிழ, பள 113), சிந்துபட்டி-கருப்புசாமி (இ5, நிழ, பள 114), கருமாத்தூர்-மூணுசாமி மற்றும் ஒச்சாண்டம்மன், கன்னியம்பட்டி-காமாட்சி அம்மன், கொக்குளம்-பேக்காமகருப்பசாமி போன்று இன்னும் பல) என உருவாக்கி வாழத் தொடங்கினர். இவை இப்போது இப்பகுதியிலுள்ள மக்களால் முக்கிய தெய்வங்களாகப் பார்க்கப்படுகின்றன.

இவ்வாறாகச் சுமார் 350 ஆண்டுகளுக்கு முன்பாகத் தோன்றிய குலதெய்வ வழிபாடுகளின் மீது மக்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கை தென்கல்லக நாட்டில் இருந்த வரலாற்றுச் சிறப்புடைய பழமையான சைவ சமயக் கோயில்களின் சிறப்புக் குன்றியமைக்குக் காரணமாகும்.

கண்மாய்/ஏரி

தென்கல்லக நாட்டுப் பகுதியில் 'கண்மாய்' எனப்படும் ஏரிகள் பல உள்ளன. வேளாண்மைக்காக நீர் தேக்கி வைக்கக்கூடிய இக்கண்மாய்கள் தொன்மைச் சிறப்புகளைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. அத்தகைய கண்மாய்களில் ஒருசிலவற்றை மட்டும் காட்டாக விளக்குவது இங்கு அவசியமாகும். தென்கரைக் கண்மாய் மிகப் பெரியதாகும். கரையின் ஒரு முனையில் இருந்து மறுமுனைக்குச் செல்ல குறைந்தது 2 கி.மீ. தொலைவு நடக்க வேண்டும். இக்கண்மாய்[33] தென்பகுதியில் நாகமலையின் அடிவாரத்தை அரணாகவும் வடபகுதியில் நீண்ட கரையையும் கொண்டுள்ளது. இக்கண்மாயில் பல மடைகளும் நீர்ப் பகிர்மானத் தொட்டிகளும்

---

[33] பெரியாறு-வைகையின் வடிநிலப்பகுதியில் அமைந்துள்ள தென்கரை கண்மாய் எட்டு மடைகளுடன் 1435.91 ஏக்கர் பாசனப் பரப்பைக் கொண்டதாகும். இக்கண்மாயின் பயன்பாடு இன்று இந்தளவுக்குச் சிறப்புக்குரியது எனில் 1300 ஆண்டுகளுக்கு முன்பு இதன் முக்கியத்துவமும் பயன்பாடும் நினைத்துப் பார்க்கமுடியாத ஒன்றாகும்.

காணப்படுகின்றன. இவற்றில் இரு மடைகளும் இவற்றுக்குரிய இரு நீர்ப் பகிர்மானத் தொட்டிகளும் தொன்மை வரலாற்றுச் சிறப்பினைக் கொண்டவையாகும். இவ்விரு மடைகளில் ஒன்றும் அதேபோன்று நீர்ப் பகிர்மானத் தொட்டிகளில் ஒன்றும் (இ5, நிழ, பள 115 மற்றும் 116) பாண்டிய மன்னன் சேந்தனின் காலத்தையும் மற்றொரு மடையும் நீர்ப் பகிர்மானத் தொட்டியும் (இ5, நிழ, பள 117) மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் மற்றும் இம்மன்னனின் சரிசம ஆட்சிப் பொறுப்புப் பெற்றிருந்த ஸ்ரீவல்லபனின் காலத்தையும் சேர்ந்ததாகும். இத்தென்கரைக் கண்மாய்க் கல்வெட்டுகளில் 'தென்கல்லக நாட்டுச் சேந்தனேரி கட்டிக்கள்ளூர்' எனக் குறிப்பிடப்படுகிறது (தெஇக 5, எ. 294, 295 மற்றும் 298). இதிலுள்ள தென்கல்லகநாடு என்பது நாட்டுப் பிரிவையும் கட்டிக்கள்ளூர் என்பது தென்கரையின் பழைய பெயரையும் சுட்டி நிற்பனவாகும். சேந்தன் ஏரி என்பது சேந்தனேரி எனச் சுட்டப்படுகிறது. கடுங்கோன் வழிவந்த முற்காலப் பாண்டியர் வரிசையில் மூன்றாவதாகக் குறிப்பிடப்படும் மன்னன் இச்சேந்தன் செழியன் (பொ.ஆ. 7ஆம் நூ.) ஆவார். இம்மன்னனின் கல்வெட்டுகள் எவையும் இப்பகுதியில் காணப்படவில்லையெனினும், இம்மன்னனுக்குப் பிறகு ஆட்சிசெய்த மன்னர்களின் கல்வெட்டுகளில் 'சேந்தனேரி' என்னும் பெயர் தொடர்ந்து குறிப்பிடப்படுவதால் இக்கண்மாயைத் தோற்றுவித்தவன் மேற்சுட்டிய செழியன் சேந்தன் என்பதில் ஐயமில்லை. இம்மடையின் நீர்ப் பகிர்மானத் தொட்டியின் (இ5, நிழ, பள 116) நடுவில் சேந்தன் காலத்து விநாயகர் உருவம் செங்குத்தான கல்லில் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. சேந்தனேரியில் இருந்து பாசனத்துக்காக இம்மடை வழியாக நீர் திறந்துவிடும்போது ஒவ்வொரு முறையும் முதலில் வெளியேறும் நீர் இவ்விநாயகரைத் தொட்டுச் செல்ல வேண்டும் என்னும் மங்கலகரமான நோக்கில் இவ்விநாயகர் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று துணிந்து கூறலாம்.

பராக்கிரம பாண்டியன் காலத்ததாகக் கருதப்படும் மற்றொரு மடையில் நீர்ப் பகிர்மானத் தொட்டியின் உள்பக்கச் சுவர்களில் இடைக்காலத் தமிழ் எழுத்துகளில் எழுதப்பட்டுள்ள துண்டுக் கல்வெட்டுகள் பல காணப்படுகின்றன. இத்துண்டுக் கல்வெட்டுகளில் இருந்து முதலாம் சடையவர்மன் குலசேகரனின் பெயரையும், இம்மன்னன் மதுரோதைய வளநாட்டு 'குலசேகரன் படைவீட்டில்[34] இருந்தபோது இவ்வாணையை வெளியிட்டமையும், சோழந்தகச் சதுர்வேதிமங்கலத்தைப் பற்றியும், இங்கிருந்த ஒரு கோயிலுக்குத் தேவதானமாக வழங்கப்பட்ட நிலத்திற்கான நான்கெல்லை மற்றும் புரவுவரி திணைக்கள நாயகம் எனப்பல குறிப்புகள் காணப்படுகின்றன. இவை மேற்சுட்டிய மன்னனின் காலத்தில் இருந்த தென்கரைப் பகுதியின் வேளாண்மை முக்கியத்துவத்தினைக் காட்டுவனவாகும்.

முதலாம் சடையவர்மன் குலசேகரனுக்கு முன்னர் ஆட்சியாளர்களாக இருந்த பராக்கிரம பாண்டியன் மற்றும் ஸ்ரீவல்லபன் ஆகியோர் காலத்திலேயே சேந்தனேரி மேலும் பலப்படுத்தப்பட்டு இக்கண்மாய்க்கு வைகை ஆற்றின் நீர் பெருமளவு வந்துசேரும் வண்ணம் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றை ஸ்ரீவல்லபனின் கல்வெட்டுகளில் இருந்து (தெஇக 14, எ. 223, 229 மற்றும் தெஇக 5, எ. 294) தெரிந்துகொள்ள முடிகிறது. வைகை ஆறு கல்வெட்டுகளில் வைகைப் பேராறு எனக் குறிப்பிடப்படுகிறது. கல்வெட்டுகளில் 'பராக்கிரமபாண்டியன் பேராறு' எனக் குறிப்புக் காணப்படுவது நோக்கத்தக்கது. மாறவர்மன் பராக்கிரமபாண்டியன் (முதலாம் குலோத்துங்க சோழனின் சமகாலத்து மன்னர்) காலத்தில் (பொ.ஆ. 1096-1119) குருவித்துறைக்கு அருகில் வைகை ஆற்றின் குறுக்காக ஓர் அணை கட்டப்பட்டு

---

[34] 'குலசேகரன் படைவீடு' என்பது பாண்டிய மன்னன் முதலாம் சடையவர்மன் குலசேகரனின் பெயரில் இம்மன்னன் கோட்டைக் கொத்தளங்களுடன் உருவாக்கிய இராணுவப் படைத்தளமாகும். இது இப்போது குலசேகரன்கோட்டை என்னும் பெயரில் வாடிப்பட்டியில் ஒரு பகுதியாக உள்ளது.

அது 'பராக்கிரம பாண்டியன் கல்லணை' என்ற பெயரில் அழைக்கப் பட்டுள்ளது. மேலும், 'பராக்கிரம பாண்டியன் கல்லணைக்குக் கல்லிறக்கும் கற்கழத்துக்கு' என்ற கல்வெட்டு வரியிலிருந்து மேற்சுட்டிய கல்லணை கற்களைக் கொண்டு கட்டப்பட்டது என்பதும், அதனால் இது கல்லணை எனப் பெயர் பெற்றது என்பதும் தெளிவாகிறது. இக்கல்லணையில் இருந்து தென்கரைப் பகுதிக்கு நீரினைக் கொண்டுசென்ற பெரிய கால்வாயும் 'பேராறு' என்னும் பொருளில் பராக்கிரமபாண்டியன் பெயரில் பராக்கிரம பாண்டியன் பேராறு என அழைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆக, வைகைப் பேராறு என்னும் நிலை வேறு என்பதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். கல்வெட்டுகளில் 'ஸ்ரீவல்லபன் பேராற்றுக்கால்'[35] என்ற ஒரு பாசன அமைப்பும் காணப்படுகிறது. இத்தகைய 'கால்கள்' பெரிய கால்வாயில் அதாவது பராக்கிரம பாண்டியன் பேராறு என்பதில் இருந்து நிலப் பகுதிகளுக்குள் நீரினைக் கொண்டு செல்லும் நீர்வழித் தடங்களாகும். மேலும் இக்கால்வாய்களில் இருந்து நீரினை வயல்களின் ஊடாகக் கொண்டு செல்வதற்குப் பிலாறு, வதி மற்றும் கண்ணாறு போன்ற பாசன அமைப்புகள் இருந்துள்ளன. இதிலிருந்து, பாண்டிய நாட்டின் மிகப் பழமையான கண்மாய்களில் தென்கல்லக நாட்டின் சேந்தனேரி எனப்படும் இன்றைய தென்கரைக் கண்மாயும் ஒன்று என்பதும், இடைக்காலத் தொடக்க நிலையிலேயே பாண்டி நாட்டில் பாசனத்திற்கென அணைகளும்

---

[35] குருவித்துறைக்கு அருகில் வைகை ஆற்றிலிருந்து ஒரு கால்வாய் வெட்டப்பெற்று அது 'வீரபாண்டியன் கால்' என்ற பெயரில் இருந்ததாக ஆய்வாளர்கள் சிலர் குறிப்பிட்டுள்ளனர் (*சந்திரமூர்த்தி மற்றும் வேதாசலம், 2002, ப. 164*). ஆனால், இக்கால் கல்வெட்டுகளில் (*தெஇக 14, எ. 223 மற்றும் 224*) நெல் அளக்கும் 'கால்' (மரக்கால்) எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வீரபாண்டியன் பொ.ஆ. 10ஆம் நூற்றாண்டில் சிறந்த மன்னனாக விளங்கிய 'சோழன்தலைகொண்ட' என்ற சிறப்புப் பெயருக்குரிய வீரபாண்டியன் என்பதில் ஐயமில்லை. இது போன்ற கால்வாயே பின்னாளில் கர்னல் பென்னி குவிக் கட்டிய தென்கரைக் கால்வாய்க்கும் அடித்தளமிட்டிருக்கலாம்.

கால்வாய்களும் கட்டுவதற்கெனச் சிறந்த தொழிற்நுட்பம் (technology) இருந்தது என்பதும், பாசனநீர் மேலாண்மை சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டது என்பதும் நன்கு புலப்படுகிறது.

பொதுவாக, தென்கல்லக நாட்டுக் கண்மாய்க்கரைகளில் கன்னிமார் அல்லது ஏழு கன்னியர் சிற்பத் தொகுதி வைக்கப்பட்டு வணங்கப்பட்டும் வருகிறது. பழைய சிற்பங்கள் உடைந்துவிட்டாலோ சிதிலமடைந்து விட்டாலோ உடனடியாகப் புதிய சிற்பங்கள் அவ்விடத்தை அலங்கரிக்கின்றன. தென்கரைக் கண்மாயிலும் ஏழு கன்னியர் சிற்பத் தொகுதி காணப்படுகிறது. முதலில் வைக்கப்பட்ட பழைய சிற்பம் சிதிலமடைந்துவிட்டதால் இதனருகில் புதிதாக வடிக்கப்பட்ட சிற்பமும் காணப்படுகிறது (இ5, நிழ, பஎ 118). இச்சிற்பங்களில் ஒன்றில் (சிதிலமடைந்தது) ஏழு கன்னியர்களும் நாகத்தின்மீது நின்றுகொண்டிருப்பது போலக் காட்டப்பட்டுள்ளமையால் இக்கன்னியர்கள் நீர் நிலைகளின் பாதுகாவல் மற்றும் நீர் வளமைக்கான தேவதைகளாகப் பார்க்கப் படுவது புலப்படுகிறது. திருவேடகம், வைகை ஆற்றின் வடகரையில் உள்ள படித்துறையின் வடப்புறச் சுவரில்கூடக் கன்னியர் சிற்பத்தொகுதி காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

விக்கிரமங்கலம் அருகில் தெற்குமலை அடிவாரத்தில் அமைந்துள்ள ரெட்டியபட்டி என்ற ஊரிலுள்ள ஒரு பாறை கன்னிமார் கோயில் என அழைக்கப்படுகிறது. இப்பாறையில் நாயக்கர்காலப் பாணியில் கன்னியர்களின் சிலை புடைப்பு உருவங்களாக வடிக்கப்பட்டுள்ளதோடு அப்பாறையில் நாயக்கர்காலக் கல்வெட்டும் (இ4, எ.18) காணப்படுகிறது. இக்கல்வெட்டில், சென்னவீர பண்டாரம் என்பவர் கன்னிமார் கோயிலை உருவாக்கி அதற்குக் காணியாட்சியாக எறுவார்பட்டி என்ற இடத்தில் நிலமும் வழங்கியுள்ளமை தெரியவருகிறது. எறுவார்பட்டி என்ற ஊர் ரெட்டியபட்டி அருகில் இன்றும் அதே பெயரில் உள்ளது. கன்னிமார் வழிபாடு என்பது இப்பகுதியில் தொன்றுதொட்டு வழிபாட்டில் இருப்பதை இதன் வாயிலாக அறியமுடிகிறது.

சில இடங்களில் கண்மாய்க் கரைகளில் ஐயனார் சிலை (இ5, நிழ, பஎ 119) இருப்பதும் இங்குச் சுட்டத்தக்கதாகும்.

தென்கரைக் கண்மாய் (சேந்தனேரி) போன்று உரப்பனூர்க் கண்மாயும் (இ5, நிழ, பஎ 120) மிகப் பெரியதாகும். இதிலுள்ள அண்மைக்கால மடைகள் தவிர இரண்டு பழமையான மடைகளும் (இ5, நிழ, பஎ 120 மற்றும் 122அ) உள்ளன. மூலக்கரைக் கருப்புக்கோயில்/சிவனம்மாள் கோயிலின் வழியாக வடக்கு நோக்கிச் செல்லும் திருமங்கலம்-செக்கானூரணிச் சாலை கண்மாயின் நடுவில் (இ5, நிழ, பஎ 122ஆ) செல்கிறது. இச்சாலையின் கிழக்குப் பகுதி 'கீழ உரப்பனூர்க் கண்மாய்' எனவும் சாலையின் மேற்குப் பகுதி 'மேல உரப்பனூர்ப் பெரிய கண்மாய்' எனவும் அழைக்கப்படுகின்றன. இதிலிருந்து இக்கண்மாயின் பிரமிக்கவைக்கும் தோற்றத்தை உணரலாம். பெரிய கண்மாயில்தான் மேற்சுட்டிய இரண்டு பழமையான மடைகளும் உள்ளன. இவற்றில் ஒரு மடையின் இரண்டு தூம்புக் கால்களிலும் (தூண்களில்) பொ.ஆ. 9ஆம் நூற்றாண்டுக் கிரந்த வரிவடிவத்தில் எழுதப்பட்டுள்ளது. ஒரு காலில் 'ஸ்ரீ வீரநாராயணந்' எனவும், மற்றொன்றில் 'ஸ்ரீகரிவலமல்லன்' எனவும் பெயர்கள் காணப்படுகின்றன.

பாண்டிய மன்னர்களின் வரிசையில் ஸ்ரீமாற சிறீவல்லபனின் (பொ.ஆ. 815-862) மகனும் வரலாற்றுச் சிறப்புமிக்க வேள்விக்குடிச் செப்பேட்டினை வழங்கிய ஜடிலப் பராந்தக நெடுஞ்சடையனின் (பொ.ஆ. 756-815) பெயரனுமான பராந்தக வீரநாராயணன் (பொ.ஆ. 860-905) என்ற பாண்டிய மன்னனே மேற்சுட்டிய தூம்புக் கால்களில் காணப்படும் ஸ்ரீவீரநாராயணன் ஆவார். ஸ்ரீமார சிறீவல்லபனுக்குப் பிறகு தன் மூத்த சகோதரனான இரண்டாம் வரகுணனுடன் (பொ.ஆ. 862-885) இணைந்து பாண்டிய நாட்டினை 45 ஆண்டுகள் ஆட்சிசெய்த பெருமை வீரநாராயணனுக்கு உண்டு. 'ஸ்ரீகரிவல மல்லன்' என்பது இம்மன்னனின் சிறப்புப் பெயராகலாம். இப்பெயர் பொறிக்கப்பட்டுள்ள தூம்புக் காலில் பெயருக்கு மேலே வெண்கொற்றக்

குடையும் இதன் இரு புறங்களில் சாமரங்களும் பெயருக்குக் கீழே கலசமும் விளக்கும் கோட்டுருவங்களாகக் கீறப்பட்டுள்ளன. இது, இம்மன்னனின் நீதி பிறழாத ஆட்சிச் சிறப்பையும் சிறந்த பாசன மேம்பாட்டின் வாயிலாக இம்மன்னன் வேளாண்மைக்குக் கொடுத்த முக்கியத்துவத்தினையும் இதன் வாயிலாகப் பெற்ற வளமையையும் காட்டுவதாகும். திருமங்கலம் வட்டம், நிலையூர்க் கண்மாயின் நடுமடையின் நீர்ப் பகிர்மானத் தொட்டியிலும் உரப்பனூர் மடையில் உள்ளதுபோல 'ஸ்ரீவீரநாராயணந்'[36] என்ற பெயர் காணப்படுவதும் (சீதாராம் குருமூர்த்தி, 2008, ப.125) மேற்சுட்டியபடி இம்மன்னன் வேளாண்மைக்குக் காட்டிய முக்கியத்துவத்திற்கு மேலும் வலுசேர்க்கக்கூடிய சான்றாகும்.

மேல உரப்பனூர்ப் பெரிய கண்மாயின் பிற்காலக் கலிங்கில் வைத்துக் கட்டப்பட்டுள்ள இரண்டு துண்டுக் கற்களில் வட்டெழுத்து வரிவடிவத்தில் தமிழில் எழுதப்பட்டுள்ள முதலாம் இராஜராஜசோழனின் சிறப்புக்குரிய 'மெய்க்கீர்த்திப்' பகுதிகள் மட்டும் காணப்படுகின்றன (சீதாராம் குருமூர்த்தி, 2008, ப. 124). இது, முதலாம் இராஜராஜன் காலத்திலும் (பொ.ஆ. 985-1014) அரசனின் நேரடிச் செயல்பாடுகள் இப்பகுதியில் இருந்ததைக் காட்டுவதாகும். இவ்வாறான பெரிய கண்மாய்களுள் வாலாந்தூர்க் கண்மாய் (இ5, நிழ, பஎ 123), ஆனையூர்-கட்டக்கருப்பன்பட்டி கண்மாய் போன்றவையும் அடங்கும். குறிப்பாக, ஆனையூர்-கட்டக் கருப்பன்பட்டிக் கண்மாயில் உள்ள தூம்பினைப் பாண்டி நாட்டில் விஜயநகர மன்னர்களுக்குக் கீழ்ச் சிற்றரசராக இருந்த வாணாதிராயரின் 'அகம்படி முதலி' என்னும் பிரிவைச் சேர்ந்த உயர் அலுவலர் உய்யவந்தான் என்னும் விக்கிரமசிங்கதேவன் என்பவன் (பொ.ஆ.14-15 ஆம்

---

36 தளவாய்புரம் செப்புப் பட்டயத்தை வழங்கிய மன்னன் ஸ்ரீவீரநாராயணன் ஆவார். இச்செப்பேடும் 'குடிநிலம்' தொடர்பாக இரண்டு ஊர்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டதைத் தெரிவிக்கிறது.

